# தினபூமி

thinaboomi.com

மதுரை, செவ்வாய், ஏப்ரல் 22, 2025 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி பக்கம் 8 ₹ 3.00




**சீர்திருத்தங்களை ஆதரித்தவர்: போப் பிரான்சிஸ் மறைவுக்கு உலக தலைவர்கள் இரங்கல்**

...2-ம் பக்கம்

**கத்தோலிக்க மதத்தலைவர் போப் பிரான்சிஸ் மறைவு: பிரதமர் மோடி இரங்கல்**

...3-ம் பக்கம்

**கிரிக்கெட் வீரர்களின் ஒப்பந்த விவரத்தை வெளியிட்ட பி.சி.சி.ஐ.: ஸ்ரேயஸ், இஷான் கிஷன் சேர்ப்பு**

...6-ம் பக்கம்





● முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று சென்னை தலைமைச்செயலகத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், 2025-2026-ம் ஆண்டிற்கான மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்து பெற்றார். இந்நிகழ்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மைச்செயலாளர் ப.செந்தில்குமார், ஆணையர் ஆர்.லால்வேனா உடனிருந்தனர்.

### மத்தியில் இண்டியா கூட்டணி ஆட்சி அமைந்திருந்தால்

# நிச்சயமாக நீட் தேர்வை ரத்து செய்திருப்போம்

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, ஏப். 22-

**மத்தியில் எங்களுடைய (இண்டியா) கூட்டணி ஆட்சி அமைந்திருந்தால் நிச்சயமாக நீட் தேர்வை ரத்து செய்திருப்போம் என்று சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.**

**அ.தி.மு.க.வினர் அமளி**

சட்டப்பேரவையில் நேற்று (ஏப்.21) பேசிய போக்குவரத்துறை அமைச்சர் சிவசங்கர், அ.தி.மு.க. ஆட்சியில் நீட் தேர்வை அனுமதித்ததால்தான் தமிழகத்தில் 11 மருத்துவக்கல்லூரிகளுக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியது என்று பேசினார். அமைச்சர் சிவசங்கரின் பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்து அ.தி.மு.க.வினர், பேரவையில் அமளியில் ஈடுபட்டனர். அப்போது நீட் தேர்வுக்கு பிள்ளையார் சுழி போட்டதே, தி.மு.க.தான் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறினார்.

**அ.தி.மு.க.வுக்கு வாய்ப்பு...**

இதற்கு பதிலளித்து முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது:- எதிர்க்கட்சித் தலைவர் நீட் தேர்வை யார் கொண்டு வந்தது? கொண்டு



**"நீட் தேர்வை ரத்து செய்தால்தான், நாங்கள் (அ.தி.மு.க.) கூட்டணயில் இருப்போம், இல்லையென்றால் கூட்டணியைவிட்டு விலகுவோம் என்று பா.ஜ.க.விடம் கூறுவதற்கு தகுதி இருக்கிறதா?"**

**- முதல்வர் மு.க.ஸ்டாலின்**

வந்ததால்தான் இவ்வளவு சிக்கல் என்று கூறுகிறார்? சரி, அந்த சிக்கலை சரி செய்வதற்கு அ.தி.மு.க.வுக்கு இப்போது ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது. நாங்கள் செய்தது தவறோ, தவறில்லையோ நான் அந்த வாதத்துக்குப் போகவில்லை. விவாதத்துக்கும் வரவில்லை. இப்போது இருக்கும் நீட் தேர்வை ரத்து செய்தால்தான், நாங்கள் கூட்டணயில் இருப்போம், இல்லையென்றால் கூட்டணியைவிட்டு விலகுவோம் என்று பா.ஜ.க.விடம் கூறுவதற்கு உங்களுக்கு தகுதி இருக்கிறதா?

**கூட்டணியில் தொடர**

நீட் தேர்வை ரத்து செய்வோம், என்று வாக்குறுதி கொடுத்தது உண்மைதான். அதில் நாங்கள் எந்தவிதமான மறுப்பும் கூறவில்லை. ஆனால், மத்தியில் எங்களுடைய (இண்டியா) கூட்டணி ஆட்சி அமைந்திருந்தால், நிச்சயமாக செய்திருப்போம். ஆனால், இப்போது அ.தி.மு.க. பா.ஜ.க. உடன் கூட்டணி அமைத்திருக்கிறதே, நீட் தேர்வை ரத்து செய்தால்தான் கூட்டணியில் இருப்போம் என்ற கண்டிஷனைப் போட்டு, கூட்டணியில் தொடர அருகதை இருக்கிறதா?

**ஏமாற்றவில்லை...**

நாங்கள் ஒன்றும் ஏமாற்றி ஆட்சிக்கு வரவில்லை. இரண்டு மாதங்களுக்கு முன்புவரை, பா.ஜ.க.வின் கூட்டணியில் நாங்கள் இருக்கமாட்டோம், 2026 மட்டுமல்ல 2031-ல் கூட பா.ஜ.க.வின் கூட்டணி வைக்கமாட்டோம் என்று சொல்லிவிட்டு இப்போது கூட்டணி வைத்துள்ளீர்களே? யாரை ஏமாற்றுவதற்கு இந்த நாடகம்." என்று முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

## போப் பிரான்சிஸ் மறைவு: முதல்வர் மு.க. ஸ்டாலின் இரங்கல்

சென்னை, ஏப். 22-

**கத்தோலிக்க திருச்சபையின் தலைவராக இருந்து வந்தவர் போப் பிரான்சிஸ் (வயது 88). இவருக்கு கடந்த பிப்ரவரி 14-ம் தேதி திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டது. மருத்துவமனையில் 5 வாரங்களுக்கு மேலாக சிகிச்சையில் இருந்த போப் பிரான்சிஸ் உடல்நலம் தேறிய நிலையில் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார். டாக்டர்களின் கண்காணிப்பில் இருந்த போப் பிரான்சிஸ் நேற்று காலமானார். காலை 7.35 மணிக்கு போப் பிரான்சிஸ் உயிர் பிரிந்ததாக வாடிகன் தெரிவித்துள்ளது. போப் பிரான்சிஸ் மறைவுக்கு உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.**

அந்த வகையில் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் பிரான்சிஸ் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் மு.க. ஸ்டாலின் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:-

போப்பாண்டவராக பணிவு, தார்மீக தைரியம் மற்றும் ஆழ்ந்த பச்சாதாப உணர்வைக் கொண்டு வந்த, இரக்கமுள்ள மற்றும் முற்போக்கான குரலாக அவர் இருந்தார். ஏழைகளுக்கான அவரது அர்ப்பணிப்பு, ஒதுக்கப்பட்டவர்களை அரவணைத்தல், நீதி, அமைதி மற்றும் மதங்களுக்கு இடையேயான உரையாடலுக்கான அவரது வாதங்கள் கத்தோலிக்க உலகிற்கு அப்பாலும் அவருக்கு மரியாதையைப் பெற்றுத் தந்தன. அவர் விட்டுச் சென்ற மரபு, செயலில் இரக்கம் மற்றும் மனிதநேயத்தை அடிப்படையாகக் கொண்ட நம்பிக்கை. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# தங்கம் விலை ஒரு கிராம் ரூ.9 ஆயிரத்தை கடந்தது

## விரைவில் ஒரு பவுன் ரூ.80 ஆயிரத்தை தொடும்..!

சென்னை, ஏப். 22-

**தங்கம் விலை மற்றொரு புதிய உச்சமாக நேற்று (ஏப்.21) ஒரு கிராம் ரூ.9 ஆயிரத்தை கடந்து புதிய உச்சத்தைத் தொட்டு விற்பனையானது. பவுனுக்கு ரூ.560 உயர்ந்து ஒரு பவுன் ரூ.72,120-க்கு விற்பனையானது.**

கடந்த 2023-ம் ஆண்டு கடுமையாக குறைந்த தங்கம் விலை, இஸ்ரேல், பாலஸ்தீன போர் எதிரொலியாக அதிகரித்தது. இதைத் தொடர்ந்து ஏற்ற, இறக்கமாக இருந்து வந்தது. இந்த வாரத்தில் தங்கம் விலை தொடர்ந்து அதிகரித்து புதிய உச்சத்தை தொட்டது. இந்நிலையில் நேற்று (ஏப்.21) சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.70 உயர்ந்து ஒரு கிராம் ரூ.9,015-க்கு விற்பனையானது.பவுனுக்கு ரூ.560 உயர்ந்து ஒரு பவுன் ரூ.72,120-க்கு விற்பனையானது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.1 உயர்ந்து ஒரு கிராம் ரூ.111-க்கு விற்பனையானது. ஒரு கிலோ பார் வெள்ளி ரூ.1,11,000-க்கு விற்பனையானது.

தங்கம் விலை தொடர்ந்து உயர்ந்து வருவது தொடர்பாக தங்க நகை வியாபாரிகள் கூறியதாவது: அமெரிக்கா - சீனா இடையேயான வர்த்தக போரில் அனைத்து நாடுகளும் சிக்கிக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக, அமெரிக்க அதிபராக டிரம்ப் பதவியேற்றது முதலே தங்கத்தின் விலை அதிகரிக்க தொடங்கிவிட்டது. தற்போது வரை வர்த்தக போர் முடிவுக்கு வருவதற்கான எந்த அறிகுறியும் இல்லை. இதனால் பங்குச் சந்தையில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக தங்கத்தின் விலை அதிகரித்து வருகிறது. அடுத்தடுத்த வாரங்களில் தங்கத்தின் விலை குறைய வாய்ப்பில்லை. விரைவில் ஒரு பவுன் ரூ.80 ஆயிரத்தை தொடும்.

அதேநேரம், இருநாடுகளுக்கும் இடையேயான பரஸ்பர வரி விதிப்பு குறைக்கப்படாத பட்சத்தில் எண்ணி பார்க்க முடியாத அளவுக்கு விலை அதிகரிக்கக் கூடும். ஆண்டு இறுதிக்குள் ரூ.1 லட்சத்தை அடையவும் வாய்ப்பிருக்கிறது. தங்கம் உற்பத்தி எவ்வளவு அதிகரித்தாலும் விலை குறைய வாய்ப்பில்லை. தங்கத்தின் மீதான நம்பிக்கையில் மக்கள் நாணயத்தில் அதிக முதலீடு செய்கின்றனர்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# தமிழ்நாட்டில் ரூ.137 கோடியில் 300 துணை சுகாதார நிலையங்கள்

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு

சென்னை, ஏப். 22-

**தமிழகத்தில் ரூ.137 கோடியில் 300 துணை சுகாதார நிலையங்கள் கட்டப்படும் என மருத்துவத் துறை மானிய கோரிக்கைக்கு பதிலளித்து பேசிய அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.**

மூன்று நாள்கள் விடுமுறைக்குப் பிறகு, சட்டப்பேரவை திங்கள்கிழமை (ஏப்.21) மீண்டும் கூடியது. நேற்று பேரவையில், மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கைகள் மீது நடைபெற்ற விவாதங்களுக்கு அந்தத் துறையின் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதிலளித்து புதிய அறிவிப்புகளை வெளியிட்டார்.

அப்போது பேசிய அவர், "தமிழ்நாட்டில் எச்.ஐ.வி



தொற்றால் பாதிக்கப்பட்ட 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் ஊட்டச்சத்து, கல்வி, மருத்துவ தேவைகளுக்காக மாதந்தோறும் ரூ.1000 நிதி உதவி வழங்கப்படும்" என்றார்.

பின்னர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கொள்கை பற்றி விவரிக்கையில், "6 மாவட்டங்களில் அரசு மருத்துவக் கல்லூரிகள் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அரசு மருத்துவமனைகளில் 25 புதிய போதை மீட்பு மற்றும் மறுவாழ்வு மையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

உடல் எடை குறைப்பு அறுவை சிகிச்சை திட்டம் விரைவில் மதுரையில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. சிதலமடைந்த 1,823 துணை சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்படும். சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் ரூ.147.00 கோடியில் பல் நோக்கு உயர்சிறப்பு சிகிச்சை பிரிவு அமைக்கப்படும்.

கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் ரூ.125 கோடி மதிப்பில் உயர் சிறப்புச்சிகிச்சைக்கு புதிய கட்டடம் கட்டப்படும். மகப்பேறு பிரிவில் மகத்தான சாதனைகளை செய்து வருகிறது தி.மு.க அரசு. தமிழகத்தில் குழந்தைகள் இறப்பு விகிதம் 7.8 ஆக குறைந்துள்ளது."

கோவையில் ரூ.29.67 கோடியில் மருத்துவ சாதனங்கள் சோதனைக் கூடம் நிறுவப்படும். 4-ஆவது பொது சுகாதார சர்வதேச மாநாடு சேலத்தில் நடத்தப்படும். பச்சிளம் குழந்தைகளுக்கு தாய்ப்பால் கிடைப்பதை உறுதி செய்ய 6 அரசு மருத்துவமனைகளில் பாலூட்டும் மேலாண்மை அலகு நிறுவப்படும்.

மக்கள் தொகைக்கேற்ப கிராமங்களிலும் நகரங்களிலும் 642 புதிய துணை சுகாதார நிலையங்கள் அமைக்கப்படும். தமிழகத்தில் ரூ.137 கோடியில் 300 துணை சுகாதார நிலைய கட்டடங்கள் கட்டப்படும் ஆகிய பல்வேறு அறிவிப்புகள் மக்கள் நல்வாழ்வுத் துறை தரப்பிலிருந்து வெளியிடப்பட்டுள்ளன.

## கத்தோலிக்க கிறிஸ்தவ மத தலைவர் போப் பிரான்சிஸ் காலமானார்

வாடிகன், ஏப். 22-

**கத்தோலிக்க கிறிஸ்தவ மத தலைவரான போப் பிரான்சிஸ் மறைந்தார். அவருக்கு வயது 88. அவரது மறைவை வாடிகன் தேவாலய நிர்வாகம் உறுதி செய்துள்ளது. போப் பிரான்சிஸின் மறைவு உலகம் முழுவதும் உள்ள கத்தோலிக்க கிறிஸ்தவர்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.**

முன்னதாக, சுவாசப் பிரச்சினை காரணமாக கடந்த 14-ம் தேதி ரோம் நகரில் உள்ள மருத்துவமனையில் போப் பிரான்சிஸ் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு சுவாச பாதையில் தொற்று ஏற்பட்டு நிமோனியா பாதிப்பு ஏற்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து அவர் தொடர் சிகிச்சையில் இருந்து வருகிறார். இடையில் அவரது உடல்நிலையில் சற்றே முன்னேற்றம் ஏற்பட்ட நிலையில் மீண்டும் பின்னடைவு ஏற்பட்டது. அவரது உடல்நிலையில் சீரற்ற தன்மையே நிலவியது.

இந்நிலையில் நேற்று அவரது உயிர் பிரிந்தது. முதல் லத்தீன் அமெரிக்க போப். ஜார்ஜ் பெர்கோகிலோ என்ற இயற்பெயர் கொண்ட போப் பிரான்சிஸ், அப்பதவியில் அமர்ந்த முதல் லத்தீன் அமெரிக்கர் என்ற பெருமையைக் கொண்டவர். 2013-ம் ஆண்டும் மார்ச் 13-ம் தேதி 266-வது போப்பாக அவர் தேர்வு செய்யப்பட்டார். உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவ மக்கள் போப் உடல்நலம் பெற்று மீண்டு வர பிரார்த்தனை செய்துவந்த நிலையில் அவரது மறைவுச் செய்தி வந்துள்ளது.

## தமிழகத்தில் 27-ம் தேதி வரை மிதமான மழை பெய்ய வாய்ப்பு

சென்னை, ஏப். 22-

**தமிழகத்தில் இன்று இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது., தென்னிந்திய பகுதிகளின் மேல், வளிமண்டல கீழடுக்கு பகுதிகளில், கிழக்கு மற்றும் மேற்கு திசை காற்று சந்திக்கும் பகுதி நிலவுகிறது. இன்று தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நாளை (23-04-2025) முதல் 27-04-2025 வரை: தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். வரும் 25-04-2025 வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலையில் பெரிய மாற்றத்திற்கான வாய்ப்பு குறைவு. எனினும், ஓரிரு இடங்களில் சற்று உயரக்கூடும். தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை 2-3 டிகிரி செல்சியஸ் இயல்பை விட அதிகமாக இருக்கக்கூடும். அதிக வெப்பநிலையும், அதிக ஈரப்பதமும், குறைந்தபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் இயல்பை விட 2-3 டிகிரி செல்சியஸ் அதிகமாகவும் இருக்கும் நிலையில், தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில பகுதிகளில் அசவுகரியம் ஏற்படலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 10-ம் வகுப்பு வினாத்தாளில் குழப்பம்:

# மாணவர்களுக்கு கருணை மதிப்பெண் வழங்க உத்தரவு

சென்னை, ஏப்.22-

**10-ம் வகுப்பு பொதுத் தேர்வு வினாத்தாளில் குழப்பம் ஏற்பட்டதையடுத்து மாணவர்களுக்கு கருணை மதிப்பெண் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.**

தமிழகத்தில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு விடைத்தாள் திருத்தும் பணிகள் திங்கள்கிழமை (ஏப்.21) தொடங்கி நடைபெற்று வருகிறது. இதற்காக தமிழகம் முழுவதும் சுமார் 80-க்கும் மேற்பட்ட மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வரும் 30-ம் தேதி வரை நடைபெறவுள்ள இந்தப் பணிகளில் சுமார் 95 ஆயிரம் ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இந்தநிலையில், சமூக அறிவியல் பாட தேர்வில் 'ஒரு மதிப்பெண் பிரிவில்' கேட்கப்பட்டதொரு கேள்வியில், மாணவர்கள் பொருளை சரியாக புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு குழப்பமாக இருந்ததாக புகார் எழுந்தது. இதையடுத்து, அந்த கேள்விக்கு மாணவர்கள் எந்த பதிலை எழுதியிருந்தாலும் ஒரு மதிப்பெண் வழங்கிட ஆசிரியர்களுக்கு தேர்வுத் துறை அறிவுறுத்தியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் மே 19-ல் வெளியிடப்படவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

மார்க்கெட் விலை நிலவரம்




BSE ↑ 1,508.91 பாயின்ட் 78,533.20

NSE ↑ 414.45 பாயின்ட் 23,815.65



தங்கம்
1 சவரன் ₹71,560
1 கிராம் ₹8,945



வெள்ளி
1 கிலோ ₹110,000
1 கிராம் ₹110.00

டாலர் ₹85.39

பெட்ரோல் ₹100.75

டீசல் ₹92.34



## சீர்திருத்தங்களை ஆதரித்தவர்:
# போப் பிரான்சிஸ் மறைவுக்கு உலக தலைவர்கள் இரங்கல்

**வாடிகன், ஏப். 22-**

கத்தோலிக்க கிறிஸ்தவ மத தலைவர் போப் பிரான்சிஸின் மறைவுக்கு உலக தலைவர்கள் பலரும் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், கத்தோலிக்க திருச்சபையைத் தாண்டி, அவர் தனது பணிவு மற்றும் ஏழைகள் மீதான தூய அன்பின் மூலம் கோடிக்கணக்கான மக்களை ஊக்கப்படுத்தினார். இந்த ஆழ்ந்த இழப்பை உணரும் அனைவருடனும் எனது எண்ணங்கள் உள்ளன. போப் பிரான்சிஸின் மரபு நம்மை நீதியான, அமைதியான மற்றும் இரக்கமுள்ள உலகத்தை நோக்கி தொடர்ந்து வழிநடத்தும் என தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "போப் பிரான்சிஸ், சாந்தியடையட்டும்." என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதனுடன் போப், அதிபர் டொனால்ட் டிரம்ப் மற்றும் துணை அதிபர் ஜே.டி. வான்ஸ் உடன் தனித்தனி சந்தர்ப்பங்களில் சந்தித்த புகைப்படங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

இந்தியா வந்துள்ள ஜே.டி. வான்ஸ் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், உலகம் முழுவதும் அவரை நேசித்த கோடிக்கணக்கான



கிறிஸ்தவர்களுக்கு என் இதயம் இரங்குகிறது. நேற்று அவரைப் பார்த்ததில் நான் மகிழ்ச்சியடைந்தேன், இருப்பினும் அவர் மிகவும் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். ஆனால் கோவிட் தொற்றின் ஆரம்ப நாட்களில் அவர் ஆற்றிய மறையுரைக்காக நான் எப்போதும் அவரை நினைவில் கொள்வேன். அது மிகவும் அழகாக இருந்தது. கடவுள் அவரது ஆன்மாவை அமைதிப்படுத்தட்டும்." என தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் அதிபர் ஐசக் ஹெர்சாக் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், "ஆழ்ந்த நம்பிக்கையும் எல்லையற்ற இரக்கமும் கொண்ட அவர், ஏழைகளை மேம்படுத்துவதற்கும், பிரச்சினை நிறைந்த உலகில் அமைதிக்காக அழைப்பு விடுப்பதற்கும் தனது வாழ்க்கையை அர்ப்பணித்தார். மத்திய கிழக்கில் அமைதிக்காகவும், (காசாவில்) பிணைக் கைதிகள் பாதுகாப்பாகத் திரும்புவதற்காகவும் அவர் செய்த பிரார்த்தனைகள் விரைவில் நிறைவேறும் என்று நான் உண்மையிலேயே நம்புகிறேன்." என்று தெரிவித்துள்ளார்.

நெதர்லாந்து பிரதமர் டிக் ஸ்கூப் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், நிதானமான வாழ்க்கை முறை, சேவை மற்றும் இரக்கச் செயல்கள் மூலம் போப் பிரான்சிஸ், கத்தோலிக்கர்கள் மற்றும் கத்தோலிக்கரல்லாதவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருந்தார். நாங்கள் அவரை மிகுந்த மரியாதையுடன் நினைவுகூருகிறோம்." என்று தெரிவித்துள்ளார்.

இந்திய ஆன்மிக குரு ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், "போப் பிரான்சிஸ் ஓர் ஆழ்ந்த நம்பிக்கையாளராகவும், மாறுபட்ட பாரம்பரியவாதியாகவும் இருந்தார்! அவர் சீர்திருத்தத்தை ஆதரிப்பவராகவும், மதங்களுக்கு இடையேயான உரையாடலை ஆதரிப்பவராகவும் இருந்தார். சுற்றுச்சூழல் மீதான அவரது அக்கறையும், மனித கடத்தலுக்கு எதிரான அவரது முயற்சிகளும் குறிப்பிடத்தக்கவை. சிறந்த புரிதலுக்கான அவரது அழைப்பு அவரது ஆதரவாளர்களுக்கு தொடர்ந்து உத்வேகம் அளிக்கும் என குறிப்பிட்டுள்ளார்.

## எங்களுக்கு எதிராக அமெரிக்காவுடன்
# வர்த்தக ஒப்பந்தம் செய்வோரை நாங்கள் எதிர்க்கிறோம் - சீனா

**சீனா, ஏப். 22-**

சீனாவுடன் வர்த்தகத்தை நிறுத்தும்படி மற்ற நாடுகளுக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுத்து ஒப்பந்தம் செய்ய திட்டமிட்டுள்ளது.

இந்தியா, சீனா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் மீது அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் வரிவிதிப்பை அறிவித்தார். அமெரிக்காவுக்கு பதிலடியாக சீனாவும் வரிகளை விதித்தது. இதனால் மற்ற நாடுகளின் வரிவிதிப்பை 90 நாட்களுக்கு நிறுத்துவதாவும், சீனாவுக்கான வரிவிதிப்பை 245 சதேவீதமாகவும் அதிகரித்து அமெரிக்கா அறிவித்தது. பதிலடியாக அமெரிக்காவுக்கான அரிய வகை கனிமங்கள் உள்ளிட்டவற்றின் ஏற்றுமதியை சீனா நிறுத்தியது. இந்நிலையில் வரிச் சுமையை குறைப்பதாக கூறி சீனாவுடன் வர்த்தகத்தை நிறுத்தும்படி மற்ற நாடுகளுக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுத்து ஒப்பந்தம் செய்ய திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியானது.

இந்நிலையில் 'சீனாவின் நலன்களைப் பாதிக்கக்கூடிய வகையில் எந்தவொரு தரப்பினரும் அமெரிக்காவுடன் (வர்த்தக) ஒப்பந்தத்தை எட்டுவதை உறுதியாக எதிர்க்கிறோம்" என்று சீனா தெரிவித்துள்ளது. சீனாவின் வர்த்தக அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், "சீனா அதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது, மேலும் பல பரஸ்பர எதிர் நடவடிக்கைகளை எடுக்கும்' என்று தெரிவித்துள்ளது. இவ்விரு வல்லரசுகளின் வர்த்தக போருக்கு இடையில் மற்ற நாடுகள் இரு தரப்பில் இருந்தும் அழுத்தத்தை எதிர்கொண்டு வருகின்றன.

# புதிய போப் எப்படி தேர்வு செய்யப்படுவார்?

**வாடிகன், ஏப். 22-**

புதிய போப் எப்படி தேர்வு செய்யப்படுவார்? விதிமுறைகள் குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

கத்தோலிக்க கிறிஸ்தவ மத தலைவரான போப் பிரான்சிஸ் மறைந்தார். அவருக்கு வயது 88. சுமார் 12 ஆண்டுகள் போப் ஆண்டவராக இருந்த போப் பிரான்சிஸ் மறைந்துள்ள நிலையில், புதிய போப் ஆண்டவர் தேர்வு எப்படி நடைபெறும் என்பது குறித்த விவரங்கள் வெளியாகியுள்ளன.

புதிய போப்பை தேர்வு செய்யும் நடைமுறைகள் 15-20 நாட்களுக்கு பிறகு தொடங்கும். 80 வயதுக்கு குறைவான கார்டினல்கள் வாடிகனில் கூடி புதிய போப் தேர்வுக்கான ரகசிய நடைமுறைகளை தொடங்குவார்கள். வாடிகனில் உள்ள சிஸ்டைன் ஆலையத்தில் வைத்து இந்த நடைமுறைகள் நடைபெறும். புதிய போப் தேர்வு நடைமுறையில் ஈடுபட்டு இருக்கும் கார்டினல்கள் வெளி உலக தொடர்பு இன்றி இருப்பார்கள். ஊடகங்களிடம் மட்டும் இன்றி போன்கள் மூலமாகவும் யாருடனும் தொடர்பில் இருக்க மாட்டார்கள். புதிய போப் ஆக தேர்வு செய்யப்படுவருக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைக்கும் வரை பல்வேறு கட்ட வாக்கெடுப்பு நடைபெறும்.

இந்த நடைமுறைகளுக்கு பின்னர் கருப்பு நிற புகை சிக்னல்கள் வெளியிடப்பட்டால் போப் தேர்வு செய்யபடவில்லை என்பதை குறிக்கும். வெள்ளை நிற புகை குறியீடு வந்தால், புதிய போப் தேர்வு செய்யப்பட்டதாக அர்த்தம். புதிய போப் தேர்வு செய்யப்பட்ட பிறகு, இந்த பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு அவருக்கு முறைப்படி கோரிக்கை வைக்கபடும். அவர் ஏற்றுக் கொண்டால் புதிய போப் ஆக அறிவிக்கப்படுவார். செயிண்ட் பீட்டர் பசிலிகாவில் இருந்து இந்த அறிவிப்பு வெளியிடும். அதன்பிறகு புதிய போப், செயிண்ட் பீட்டர் சதுக்கத்தில் இருந்து மக்களுக்கு ஆசிர்வாதம் வழங்குவார்.

# பயோமெட்ரிக் மூலம் வருகை பதிவு: மாநகர் போக்குவரத்துக்கழகம் அறிவிப்பு

**சென்னை, ஏப்.22-**

மாநகர் போக்குவரத்து ஊழியர்களின் வருகைப் பதிவு திங்கள்கிழமை (ஏப். 21) முதல் பயோமெட்ரிக் மூலம் மட்டுமே பதிவு செய்யப்படவுள்ளதாக மாநகர் போக்குவரத்துக் கழகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:- மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களும் தங்களின் வருகையை பயோமெட்ரிக் மூலம் தவறாமல் பதிவு செய்வது குறித்து ஏற்கெனவே அனைத்து பணியாளர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது.

இதன்படி, மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் தலைமை அலுவலகம், அனைத்து பணிமனைகள் மற்றும் தொழிற்கூடங்களில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களின் (ஓட்டுநர்கள், நடத்துநர்கள், தொழில்நுட்ப பணியாளர்கள், அலுவலகப் பணியாளர்கள் மற்றும் அனைத்துப் பிரிவு மேற்பார்வையாளர்கள்) வருகை பதிவு பயோமெட்ரிக் மூலம் மட்டுமே மேற்கொள்ள வேண்டும்.

இந்த நடைமுறை நேற்று முதல் முழுமையாக அமலுக்கு வரவுள்ளது. இதில் செய்யப்படும் பதிவு மட்டுமே வருகையாக எடுத்துக் கொள்ளப்படும் என்று போக்குவரத்துக் கழக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஏமனில் அமெரிக்கா தாக்குதல்: 12 பேர் பலி - 30 பேர் படுகாயம்

**சனா, ஏப். 22-**

ஏமனில் உள்ள ராஸ் இசா எரிபொருள் துறைமுகத்தை தாக்கியது. இதில் 74 பேர் கொல்லப் பட்டதைத் தொடர்ந்து தற்போதைய தாக்குதல் நடந்துள்ளது.

ஏமன் தலைநகர் சனாவில் ஞாயிற்றுக்கிழமை இரவு அமெரிக்க விமானத் தாக்குதல்களில் 12 பேர் கொல்லப்பட்டனர். ஏமன் அமைச்சகத்தை மேற்கோள்காட்டி ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில், சனாவின் ஷூப் மாவட்டத்தில் உள்ள ஃபர்வா சுற்றுப்புற சந்தையில் உள்ள குடியிருப்பு பகுதியில் அமெரிக்க வான்வழித் தாக்குதலில் பொதுமக்கள் 13 பேர் கொல்லபட்டதாக கூறப்பட்டுள்ளது.

மேலும் 30 பேர் காயமடைந்துள்ளனர். கடந்த வாரம் ஏமனில் உள்ள ராஸ் இசா எரிபொருள் துறைமுகத்தை அமெரிக்க விமானத் தாக்குதல்கள் தாக்கி குறைந்தது 74 பேர் கொல்லப் பட்டதைத் தொடர்ந்து தற்போதைய தாக்குதல் நடந்துள்ளது.

# இந்தியாவில் 30 கோடி மக்களை நிலநடுக்கம் தாக்கும் அபாயம்
## அதிர்ச்சி தகவல் வெளியீடு

**வாஷிங்டன், ஏப். 22-**

உலகில் பெரிய நிலநடுக்கம் ஏற்படும் பகுதியாக இமயமலை உள்ளது. கடுமையாக பூமி குலுங்கும்போது, 30 கோடி மக்களை அது பாதிக்கும் என அமெரிக்க புவிஇயற்பியலாளர் எச்சரித்துள்ளார்.

மியான்மரில் கடந்த மார்ச் 28-ந்தேதி ரிக்டர் அளவுகோலில் 7.7 அளவிலான நிலநடுக்கம் தாக்கியது. இந்நிலையில், இதே போன்றதொரு நிலைமை இந்தியாவுக்கு ஏற்படும் சாத்தியம் உள்ளதாக விஞ்ஞானிகள் பல ஆண்டுகளாக எச்சரிக்கை தெரிவித்தபடியே இருக்கின்றனர்.

இதுபற்றி அமெரிக்க புவிஇயற்பியலாளரான ரோஜர் பில்ஹாம் கூறும்போது, ஒவ்வொரு நூற்றாண்டிலும் திபெத்தின் தென்முனைக்கு அடியில் 2 மீட்டர் அளவுக்கு இந்தியா சரிந்து வருகிறது. சில நூறு ஆண்டுகளுக்கு ஒரு முறை இமயமலையில் இந்த அளவிலான சரிவால் ரிக்டரில் 8 அளவிலான நிலநடுக்கங்கள் இமயமலையை தாக்குகின்றன. ஆனால், கடந்த 70 ஆண்டுகளில், இமயமலையை கடுமையாக தாக்கும் அளவிலான அழுத்தம் வெளியிடப்படாமல் உள்ளது. அது நிச்சயம் நிகழும் என அவர் கூறுகிறார்.

இந்தியாவில் நிலநடுக்க அதிர்வுகளை விட கட்டிடங்களே அதிக ஆபத்து ஏற்படுத்துபவையாக உள்ளன. நிலநடுக்க தடுப்பு கட்டுமானங்களுக்கான விதிகள் உள்ளன. ஆனால், அவை எப்போதும்போல் அலட்சியப்படுத்தப்படுகின்றன. நிலநடுக்கத்தில் இருந்து தப்பும் வகையில் மருத்துவமனைகள், பள்ளிகள், மின் உலைகள் வடிவமைக்கப்படுவதில்லை. பூமி குலுங்கும்போது, இவையே முதலில் சரியும் என எச்சரிக்கப்பட்டு உள்ளது.

இந்த சூழலில், இமயமலையில் ஏற்பட கூடிய நிலநடுக்கம், பெருங்கடலில் ஏற்படாமல் நேரிடையாக நிலத்தின் மீது தாக்கம் ஏற்படுத்தும் என பில்ஹாம் எச்சரித்து உள்ளார். வருங்காலத்தில் பெரிய அளவில் இமயமலை நிலநடுக்கம் (ரிக்டர் அளவில் 8.2 முதல் 8.9 வரை) ஏற்படும் சாத்தியம் உள்ளது. உலகில் நிலப்பகுதியில் இந்த அளவுக்கு பெரிய நிலநடுக்கம் ஏற்படும் பகுதியாக இமயமலை உள்ளது. கடுமையாக பூமி குலுங்கும்போது, 30 கோடி மக்களை அது பாதிக்கும் என எச்சரிக்கிறார்.

**22-04-2025**




**மேஷம்:-** வேலைக்கான நேர்காணல்களில் வெற்றி கிடைக்கும். கீழே பணிபுரிபவர்களுக்கு கட்டளையிடும் உயர் பதவி கிடைக்கும். அரசு ஆதரவு இருக்கும். கல்வியில் தேர்ச்சி ஏற்படும்.

**ரிஷபம்:-** தெய்வ சிந்தனை அதிகரிக்கும். சிலருக்கு குழந்தைப் பிறப்புக்கான வாய்ப்பு உருவாகும். கோவில், குளம் போன்ற திருப்பணிகளில் ஈடுபடுவதால், புகழ் ஓங்கும். உல்லாசப் பயணங்களால் சந்தோஷம் நிலவும்.

**மிதுனம்:-** அனைத்து விஷயங்களிலும் எச்சரிக்கையாக இருக்கவும். அனைவருக்கும் நல்லதே நினைக்கும் எண்ணத்தைக் கைக்கொள்வது நல்லது உயர் அதிகாரிகளிடம் பணிவுடன் நடந்தால் உயர்வு உண்டு.

**கடகம்:-** புதியன கற்பதில் ஈடுபாடு அதிகரிக்கும். புதிய வாகனங்கள் வாங்க திட்டமிடுவீர்கள். சுவையான உணவுகளை ருசித்து மகிழ்வீர்கள். அரசாங்கத்திடம் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக நடக்கும்.

**சிம்மம்:-** அனைத்து நலன்களும் உண்டாகும். எதிர்பார்த்த வரவுகள் வந்து ஏற்றம் தரும். உதவிக்கரம் நீட்டுவர் நண்பர்கள். மனதில் சொந்த வீடு வாங்கும் எண்ணம் உருவாகும். புகழும் உண்டாகும்.

**கன்னி:-** குழந்தைகள் உடல் நிலையில் அக்கறை தேவை. அனைவருடனும் சுமுகமாகப் பழகி, அமைதியாக நடந்தால் எதிர்ப்புகள் குறையும். எவ்வளவு திறமையாக செயல்பட்டாலும் ஏளனமே மிஞ்சும்.

**துலாம்:-** வியாபாரத்தில் தனவரவுகள் எதிர்பார்த்த அளவுக்கு இருக்காது. தேவையற்ற சிந்தனைகள் வர படுத்தவுடன் தூக்கம் வராது. தாயின் ஆரோக்கியம் பற்றிய கவலைகள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:-** அனைத்து காரியங்களிலும் கை கொடுப்பாள் மனைவி. குழந்தைகள் மேல் பாசம் பொழிவார்கள். அரசு ஆதரவால் தொழில் வளர்ச்சியில் திருப்தி நிலவும். ஆடை ஆபரணங்கள் சேரும்.

**தனுசு:-** தனலாபம், குடும்பத்தில் நிம்மதி, குடும்ப சுகம் ஆகியவை குறையும். புதிய தொழில் முதலீடுகளை ஒத்திப் போடுவது நல்லது. மாணவர்கள் மிகுந்த அக்கறையுடன் படித்தல் அவசியம்.

**மகரம்:-** அனைத்து விஷயங்களிலும் மனத்திருப்தி ஏற்படும். புத்தி சாதுர்யமும், வாக்கு வன்மையும் ஓங்கும். இனிய பயணங்களால் இன்பம் பெருகும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் நிலவும்.

**கும்பம்:-** இடமாற்றங்களை எதிர்பார்க்கலாம். முறையற்ற வழிகளில் பணம் வரலாம். உறவுகளிடையே மனக்கசப்பு உருவாகலாம். கோபத்தைக் குறைத்தால் நன்மை ஏற்படும்.

**மீனம்:-** காரியம் அனைத்திலும் வெற்றி கிட்டும். எதிர்பார்த்த அரசு உதவிகள் தாமதம் இன்றி கிடைக்கும். கல்வியில் தேர்ச்சி ஏற்படும். பதவி மற்றும் அந்தஸ்து உயர்வு ஏற்படும்.

# போப் பிரான்சிஸ் மறைவுக்கு தமிழக அரசியல் கட்சி தலைவர்கள் இரங்கல்

**சென்னை, ஏப். 22-**

கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவரான போப் பிரான்சிஸ் மறைவுக்கு வைகோ, செல்வப்பெருந்தகை உள்ளிட்ட தமிழக அரசியல் கட்சித் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

வைகோ: 12 ஆண்டுகள் வாட்டிகன் திருச்சபைக்குத் தலைவராக இருந்த போப்பரசர், உலகில் சாதி மதங்களால் எந்த இரத்தக்களறியும் ஏற்படக்கூடாது என்றும், சமாதானம் அனைத்து மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்றும் அருள்மொழி வழங்கிய போப்பரசரின் மறைவு அனைத்து தரப்பினரையும் துயரத்தில் ஆழ்த்தி இருக்கிறது.

செல்வப்பெருந்தகை: முற்போக்கான கருத்துகள் கொண்டவராகவும், ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவு அளிப்பவராகவும் அறியப்பட்டவர். கத்தோலிக்க மதத்தில் பல்வேறு சீர்திருத்தங்களையும், மாற்றங்களையும் திருச்சபைக்கு உள்ளேயும், வெளியேயும் கொண்டு வந்தவர். பத்தாண்டுகளுக்கும் மேலாக தனது போப் ஆண்டவர் பதவியில் இருந்த காலத்தில் மதங்களுகிடையேயான உரையாடலை ஆதரித்ததோடு, மதநல்லிணக்கத்திற்காக பாடுபட்டவர். மதரீதியான கசப்புகளையும், வெறுப்புகளையும் ஏற்றுக் கொள்ள மறுத்தவர். அகதிகள் மற்றும் புலம் பெயர்ந்தவர்களின் உரிமைகளுக்காக வாதாடியவர்.

அன்புமணி ராமதாஸ்: உலகில் அமைதி நிலவ வேண்டும் என்பதில் அக்கறை கொண்ட போப் பிரான்சிஸ், தமது 12 ஆண்டு பதவிக்காலத்தில் உலகில் அமைதியை ஏற்படுத்த ஏராளமான முயற்சிகளை மேற்கொண்டவர். ஈஸ்டர் திருநாளையொட்டி, செயின்ட் பீட்டர் சதுக்கத்தில் மக்களுக்கு ஆசி வழங்கும் போதும் உலகில் போர்கள் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும்; அமைதி நிலை நிறுத்தப்பட வேண்டும் என்று தான் வேண்டினார். போப் பிரான்சிஸ் அவர்களை இழந்து வாடும் கத்தோலிக்கர்கள் உள்ளிட்ட அனைத்து மக்களின் சோகத்தின் நானும் பங்கு கொள்கிறேன்.

ராமதாஸ்: கத்தோலிக்க திருச்சபையின் தலைமை குருவாக 12 ஆண்டுகளுக்கு முன் பொறுப்பேற்றுக் கொண்ட போப் பிரான்சிஸ், கிறித்தவ மக்களையும் கடந்து உலகில் அனைத்துத் தரப்பினராலும் நேசிக்கப்பட்ட மனிதராக திகழ்ந்தார். சமயத்தைக் கடந்து நல்லிணக்கம், சமூக நீதி, சமத்துவம் ஆகியவற்றுக்காகவும் பாடுபட்டவர்.

உலகில் நலிவடைந்த மக்களின் நலனில் அக்கறை கொண்டிருந்த அவரது மறைவு உலகிற்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஆகும்.

# ஓ.பி.எஸ்.க்கு எதிராக நவாஸ் கனி எம்.பி. தாக்கல் செய்த மனு: ஐகோர்ட்டு தள்ளுபடி

**சென்னை, ஏப். 22-**

ஓ.பன்னீர்செல்வத்தின் தேர்தல் வழக்கை நிராகரிக்கக் கோரி நவாஸ்கனி எம்.பி. தாக்கல் செய்த மனுவை ஐகோர்ட்டு தள்ளுபடி செய்தது.

கடந்த ஆண்டு நடந்த மக்களவை தேர்தலில், ராமநாதபுரம் தொகுதியில் தி.மு.க. கூட்டணியில் போட்டியிட்ட இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி வேட்பாளர் நவாஸ்கனி, தன்னை எதிர்த்து, சுயேட்சை வேட்பாளராக போட்டியிட்ட முன்னாள் முதல் அமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்தை விட, ஒரு லட்சத்து 66 ஆயிரத்து 782 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அவரது தேர்தல் வெற்றியை எதிர்த்து பன்னீர்செல்வம், சென்னை ஐகோர்ட்டில் தேர்தல் வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், தேர்தல் வேட்பு மனுக்களில் உண்மை தகவல்களை மறைத்ததாகவும், ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் குற்றம் சாட்டியிருந்தார். இந்நிலையில், ஓ பன்னீர்செல்வத்தின் தேர்தல் வழக்கை நிராகரிக்கக் கோரி எம்.பி. நவாஸ்கனி மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி சி.வி.கார்த்திகேயன், தேர்தல் வழக்கை நிராகரிக்கக் கோரி எம்.பி. நவாஸ்கனி தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

மேலும், தேர்தல் வழக்கை அடுத்தகட்ட விசாரணைக்காக ஜூன் 16ஆம் தேதிக்கு தள்ளிவைத்து உத்தரவிட்டார்.

## அமைச்சர் பொன்முடி விவகாரம்:
# மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. மகளிரணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்
## முன்னாள் அமைச்சர்கள் செல்லூர் கே.ராஜூ, பா.வளர்மதி பங்கேற்பு

**மதுரை, ஏப். 22-**

அமைச்சர் பொன்மொடியை அமைச்சர் பதவியில் இருந்து நீக்க வலியுறுத்தி மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. மகளிரணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சர்கள் செல்லூர் கே.ராஜூ, பா.வளர்மதி பங்கேற்றனர்.

திமுகவின் வனத்துறை அமைச்சராக இருந்து வரும் பொன்முடி அண்மையில் நடைபெற்ற திமுக நிகழ்ச்சியில் விலைமாதர்களை சைவம், வைணவம் ஆகியவற்றோடு ஒப்பிட்டு பேசிய பேச்சு பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்திய நிலையில் தமிழக முழுவதும் பல்வேறு அரசியல் கட்சியினர் மகளிர் அமைப்பினர் கண்டனங்களை தெரிவித்து வந்தனர். இந்த நிலையில் அமைச்சர் பொன்முடியை திமுகவின் துணை பொது செயலாளர் பதவியில் இருந்து நீக்குவதாக திமுக தலைவரும்,



முதலமைச்சருமான ஸ்டாலின் அறிவித்து இருந்தார். அமைச்சர் பொன் முடியை கட்சி பொறுப்பில் இருந்து நீக்குவது ஏற்புடையதல்ல அவரை உடனடியாக அமைச்சர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என வலியுறுத்தி மதுரை மாநகர் மாவட்ட அதிமுக மகளிர் அணி சார்பில் முன்னாள் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. தலைமையில் மதுரை செல்லூர் 60 ரோடு பகுதியில் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் அ.தி.மு.க.வின் முன்னாள் அமைச்சர் வளர்மதி கலந்து கொண்டு கண்டன கோஷங்களை எழுப்பினார்.

இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ். பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், டாக்டர் சரவணன், சண்முகவள்ளி, சக்தி மோகன், பரவை ராஜா, கு.திரவியம், அண்ணாநகர் ரவிச்சந்திரன், வி.பி.ஆர்.செல்வகுமார், ஆர்.பாஸ்கரன், ஜெ.மாணிக்கம், கே.ஜெயவேல், சக்திவிநாயகர்பாண்டியன், எம்.ஜி.ராமச்சந்திரன், வி.கணேசன், கலைசெல்வம், பைக்காரா கருப்பசாமி, கே.வி.கே.கண்ணன், ஜெயபாண்டி, எஸ்.எம்.டி.ரவி, ஏ.தங்கபாண்டி, அண்ணாநகர் முருகன், எம்.ஏ.நாசர், பூக்கடை அய்யப்பன், ரமேஷ், பகவலன், யோகேஷ், ஏ.இந்திரா, ரூபினிகுமார், முத்துமாரிஜெயக்குமார், ஷோபியா பிச்சைமணி, ஜெயதோதி, அனுப்பானடி செல்வி, ராகவி, மலர்விழி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## ஏற்கனவே எங்கள் மீது குற்றம் சொல்றாங்க:
# மேற்கு வங்காளத்தில் ஜனாதிபதி ஆட்சிக்கு வேற உத்தரவு போடணுமா? சுப்ரீம் கோர்ட்

**டெல்லி, ஏப். 22-**

ஏற்கனவே மேல குற்றம் சொல்றாங்க, இதுல மேற்கு வங்காளத்தில் ஜனாதிபதி ஆட்சிக்கு வேற உத்தரவு போடணுமா? என்று சுப்ரீம் கோர்ட் நீதிபதி கேள்வி எழுப்பியுள்ளார்.

மத்திய அரசு கொண்டு வந்த வக்பு வாரிய திருத்த சட்டத்தை எதிர்த்து மேற்கு வங்க மாநிலம் முர்ஷிதாபாத்தில் நடந்த போராட்டத்தில் கலவரம் வெடித்தது. இதைத் தொடர்ந்து நடந்த வன்முறை சம்பவங்களை குறிப்பிட்டு மம்தா பானர்ஜி தலைமையிலான ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் ஆட்சியில் மேற்கு வங்கத்தில் இந்துக்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று பாஜக விமர்சித்தது. ஆனால் போராட்டத்தில் திட்டமிட்டு கலவரத்தை தூண்டியதே பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ். தான் என மம்தா பானர்ஜி குற்றம்சாட்டினார்.

இதற்கிடையே அடுத்த வருடம் சட்டமன்றத் தேர்தல் வரும் வரை அம்மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சிக்கு உத்தரவிட வேண்டும் என்றும் உச்சநீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது. உச்சநீதிமன்ற நீதிபதி பி.ஆர்.கவாய் முன் ஆஜரான வழக்கறிஞர் விஷ்ணு சங்கர், இந்த மனுவை குறிப்பிட்டு பேசினார். இதற்கு பதில் அளித்த நீதிபதி கவாய், இதை அமல்படுத்துமாறு ஜனாதிபதிக்கு நாங்கள் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா? தற்போதுள்ள நிலையில், ஏற்கனவே நிர்வாகத்தில் (நீதித்துறை) அத்துமீறுகிறது என்ற குற்றச்சாட்டுகளை நாங்கள் எதிர்கொள்கிறோம் என்று தெரிவித்தார்.

# குடிமைப்பணிகள் நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, ஏப். 22-

குடிமைப்பணிகள் நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அனைத்து குடிமைப் பணியாளர்களுக்கும் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில், தேசிய குடிமைப் பணிகள் நாளில், நமது மக்களாட்சியை வலுப்படுத்த அர்ப்பணிப்புணர்வுடன் பணியாற்றும் உறுதிப்பாடு மிக்க குடிமைப் பணியாளர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

ஆட்சியியல் கொள்கைக்கும் மக்களுக்கும் இடையேயான முக்கியத் தொடர்பு கண்ணியாக விளங்கும் குடிமைப்பணி அலுவலர்கள் தான் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளின் தொலைநோக்கினைத் தாக்கமிகுந்த செயல்பாடாகக் களத்தில் மாற்றிக் காட்டுபவர்கள் ஆவர். சமத்துவம், செயல்திறன், இரக்கம் ஆகியவற்றுடன் அனைத்துக் குடிமக்களையும் அவர்களுக்குரிய மாண்புடன் அணுகும் ஆட்சிநிர்வாகத்தினை உறுதி செய்யத் தமிழ்நாடு உழைக்கிறது என்று பதிவிட்டுள்ளார்.

# போப் பிரான்சிஸ் மறைவு: த.வெ.க. தலைவர் இரங்கல்

சென்னை, ஏப். 22-

புனித போப் பிரான்சிஸ் அவர்களின் மறைவுச் செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமடைந்தேன். போப் பிரான்சிசைப் பின்பற்றுபவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த இரங்கல்கள்.

கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான போப் பிரான்சிஸ் நேற்று காலமானார். இவரது மறைவுக்கு உலகத் தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், போப் பிரான்சிஸ் மறைவுக்கு தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் இரங்கல் தெரிவித்துள்ளார். இதுகுறித்து விஜய் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

கத்தோலிக்க திருச்சபையின் தலைவரும், வத்திக்கான் நகரத்தின் இறையாண்மையாளருமான, உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான மக்களுக்கு உத்வேகம் அளித்த புனித போப் பிரான்சிஸ் அவர்களின் மறைவுச் செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமடைந்தேன். அவரது மறைவு அமைதியை விரும்புவோருக்கு ஒரு பெரிய இழப்பாகும். அவரைப் பின்பற்றுபவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த இரங்கல்கள். அவரது ஆன்மா நித்திய சாந்தியடையட்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## அவரின் பாசம் எப்போதும் போற்றப்படும்:

# போப் பிரான்சிஸ் மறைவிற்கு பிரதமர் நரேந்திரமோடி இரங்கல்

புதுடெல்லி, ஏப். 22-

இந்திய மக்கள் மீதான பிரான்சிஸின் பாசம் எப்போதும் போற்றப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

கத்தோலிக்க கிறிஸ்தவ மத தலைவரான போப் பிரான்சிஸ் உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில், நேற்று அவர் உயிரிழந்தார். அவரது மறைவுக்கு பிரதமர் நரேந்திர மோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள பதிவில், புனித திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மறைவால் மிகுந்த வேதனை அடைகிறேன். இந்த துயரமான தருணத்தில், உலகளாவிய கத்தோலிக்க சமூகத்திற்கு எனது மனமார்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகெங்கிலும் உள்ள கோடிக்கணக்கான மக்களால் கருணை, பணிவு மற்றும் ஆன்மிக தைரியத்தின் கலங்கரை விளக்கமாக போப் பிரான்சிஸ் எப்போதும் நினைவுகூரப்படுவார். சிறு வயதிலிருந்தே, அவர் கர்த்தராகிய கிறிஸ்துவின் கொள்கைகளை உணர்ந்து கொள்வதில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். ஏழைகளுக்கும், ஒடுக்கப்பட்டவர்களுக்கும் விடாமுயற்சியுடன் சேவை செய்தார். துன்பப்படுபவர்களுக்கு, அவர் நம்பிக்கையின் உணர்வைத் தூண்டினார்.

அவருடனான எனது சந்திப்புகளை நான் அன்புடன் நினைவுகூருகிறேன். அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் விரிவான வளர்ச்சிக்கான அவரது அர்ப்பணிப்பால் பெரிதும் ஈர்க்கப்பட்டேன். இந்திய மக்கள் மீதான அவரது பாசம் எப்போதும் போற்றப்படும். கடவுளின் அரவணைப்பில் அவரது ஆன்மா நித்திய அமைதியைக் காணட்டும்'' என தெரிவித்துள்ளார். மத்திய சிறுபான்மையினர் நலத்துறையின் இணை அமைச்சர் ஜார்ஜ் குரியன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், ''புனித திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மறைவால் ஆழ்ந்த வருத்தம் அடைந்துள்ளேன். அவரது மறைவு உலக சமூகத்துக்கு மிகப் பெரிய இழப்பு. அவரது சேவை, இரக்கம் மற்றும் நம்பிக்கை நிறைந்த வாழ்க்கை கோடிக்கணக்கானவர்களைத் தொட்டது. இந்த மாபெரும் இழப்பால் துக்கமடைந்துள்ள அனைவருக்கும் இதயப்பூர்வமான இரங்கல்கள்.'' என தெரிவித்துள்ளார்.

# அதி.மு.க. ஆட்சியில் நீட் தேர்வை நடைமுறைப்படுத்தியது ஏன்..?

## எடப்பாடி பழனிசாமி விளக்கம்

சென்னை, ஏப். 22-

அதி.மு.க. ஆட்சியில் நீட் தேர்வை நடைமுறைப்படுத்தியது ஏன் என்பது குறித்து எடப்பாடி பழனிசாமி விளக்கமளித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவை வளாகத்தில் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி நேற்று (ஏப்.21) செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: திருச்சி உறையூரில் கழிவுநீர் கலந்த குடிநீரை குடித்து 4 பேர் உயிரிழந்துள்ளனர். 50-க்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மேலும், ஐவர் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சித்திரைத் திருவிழாவில் வழங்கிய மோர், குளிர்பானத்தால் தான் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. அதனால்தான் அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என அமைச்சர் கூறுகிறார். கோவில் திருவிழாவுக்கு பலரும் சென்ற நிலையில், உறையூர் மக்களுக்கு மட்டும் பாதிப்பு ஏற்பட்டது ஏன்?, குளிர்பானம் தான் பிரச்சினை என்றால் பல பகுதிகளை சேர்ந்த மக்களுக்கு ஏன் பாதிப்பு இல்லை.

குடிநீரில் கழிவுநீர் வருவதாக மாநகராட்சி அதிகாரிகளிடம் மக்கள் புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. புகார் வந்த உடனேயே, குடிநீரில் கழிவு நீர் கலப்பு விவகாரத்தில் நடவடிக்கை எடுத்திருந்தால் உயிரிழப்பு ஏற்பட்டிருக்காது. பாதிக்கப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். நீட் தேர்வு குறித்து பல முறை விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. நீட் தேர்வை கொண்டு வந்தது காங்கிரஸ்-தி.மு.க. கூட்டணி தான். அதை தடுத்து நிறுத்த முயற்சித்தது அதி.மு.க.. அதி.மு.க. ஆட்சியில் இருந்த போது தான் நீட் தேர்வு வந்தது என தி.மு.க. தலைவர் மற்றும் அமைச்சர்கள் தவறான கருத்தை கூறி வருகிறார்கள். நீட் தேர்வை கொண்டு வந்ததே தி.மு.க.வும் காங்கிரஸும் தான். இது மாணவர்களை பாதிக்கும், இளைஞர்களை பாதிக்கும் என அவர்களுக்கு தெரியாதா? . அதை தடுப்பதற்கு நாங்கள் (அதி.மு.க.) கடுமையாக முயற்சி செய்தோம், ஆனால் முடியவில்லை. இது தொடர்பான வழக்கு நீதிமன்றம் சென்று விட்டதால், நீட் தேர்வை அதி.மு.க. ஆட்சியில் நடைமுறைப்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இருந்தாலும் தொடர்ந்து மத்திய அரசோடும், நீதிமன்றத்திலும் நாங்கள் வலியுறுத்தி கொண்டே இருந்தோம். தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் நீட் தேர்வு ரத்து செய்யப்படும் என முதல்வர் கூறினார். இன்று இண்டியா கூட்டணி ஆட்சிக்கு வந்திருந்தால் நீட் தேர்வை ரத்து செய்திருக்கும் என கூறுகிறார். 2010-ம் ஆண்டு நீட் தேர்வு கொண்டு வரும்போதே, ஏன் ரத்து செய்யவில்லை. அப்போது, காங்கிரஸின் கூட்டாட்சி தான் நடந்தது. அப்போதும் நீட்டை ரத்து செய்திருந்தால், இத்தனை உயிர்களை நாம் இழந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை என்றார்.

# மூடநம்பிக்கையை ஒழிக்க தனிச்சட்டம்..? சட்டப்பேரவையில் அமைச்சர் ரகுபதி பதில்

சென்னை, ஏப். 22-

தமிழகத்தில் மூடநம்பிக்கையை ஒழிக்க அரசு தனிச்சட்டம் கொண்டு வருமா? என்று கேள்விக்கு அமைச்சர் ரகுபதி பதில் அளித்துள்ளார். தமிழக சட்டப்பேரவையில் நேற்று வினாக்கள், விடைகள் நேரம் நடைபெற்று வருகிறது. இதில், தமிழகத்தில் மூடநம்பிக்கையை ஒழிக்க அரசு தனிச்சட்டம் கொண்டு வருமா? என்று கேள்வி எழுப்பினார்.

அந்த கேள்விக்கு பதில் அளித்து பேசிய அமைச்சர் ரகுபதி, , ஒருவருக்கு நம்பிக்கையாக இருப்பது மற்றொருவருக்கு மூடநம்பிக்கையாக இருக்கிறது. அவரவர் உரிமையில் தலையிடுவது சரியாக இருக்காது. நம்முடைய கொள்கைகளை பின்பற்றலாம் அதற்காக மற்றவர்களின் மத நம்பிக்கையில் தலையிடுவது சரியாக இருக்குமா? என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும்' என அவர் தெரிவித்தார்.

# சமரச அமைப்பாகிவிட்டது இந்திய தேர்தல் ஆணையம்

## அமெரிக்காவில் ராகுல்காந்தி குற்றச்சாட்டு



பாஸ்டன், ஏப். 22-

இந்திய தேர்தல் ஆணையம் சமரச அமைப்பாகிவிட்டது என்றும் அமைப்பில் மிகப் பெரிய தவறு உள்ளது என்றும் அமெரிக்காவின் பாஸ்டன் நகரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்கா சென்றுள்ள காங்கிரஸ் மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி, பாஸ்டன் நகரில் இந்தியர்கள் பங்கேற்ற நிகழ்ச்சியில் உரையாற்றினார். அப்போது அவர், சமீபத்தில் நடந்த மகாராஷ்டிர சட்டப்பேரவைத் தேர்தலில் மோசடி நடந்ததாகவும், அதற்கு தேர்தல் ஆணையம் துணை போனதாகவும் குற்றம் சாட்டினார். மகாராஷ்டிராவில் உள்ள மொத்த மக்களின் எண்ணிக்கையை விட வாக்களித்தவர்களின் எண்ணிக்கை அதிகம். இது ஒரு உண்மை. மாலை 5.30 மணியளவில் தேர்தல் ஆணையம் எங்களுக்கு ஒரு புள்ளிவிவரத்தை வழங்கியது. அடுத்த இரண்டு மணி நேரத்தில் அதாவது இரவு 7.30 மணியளவில், 65 லட்சம் வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர். இது உண்மையில் சாத்தியமற்றது.

தேர்தல் ஆணையம் சமரசம் செய்யப்பட்டுள்ளது என்பது எங்களுக்கு மிகவும் தெளிவாகத் தெரிகிறது. அமைப்பில் ஏதோ மிகப் பெரிய தவறு உள்ளது.'' என்று ராகுல் காந்தி குற்றம் சாட்டினார். அமெரிக்காவுடனான இந்தியாவின் உறவு குறித்துப் பேசிய ராகுல் காந்தி, ''அமெரிக்காவுடன் எங்களுக்கு (இந்தியாவுக்கு) ஒரு கூட்டுறவு உள்ளது. நாங்கள் தொடர்ந்து இணைந்து செயல்படுவோம் என்று நம்புகிறோம். என்று கூறினார்.

தேர்தல் ஆணையம் மறுப்பு: ராகுல் காந்தியின் குற்றச்சாட்டை தேர்தல் ஆணையம் ஏற்கனவே மறுத்துள்ளது. வாக்காளர் பட்டியல் தேர்தலுக்கு முன்பே திருத்தப்பட்டது என்றும், 18 வயதை எட்டியவர்கள், தங்கள் தொகுதியை மாற்றியவர்கள் ஆகியோரின் பெயர்கள் சேர்க்கப்பட்டு நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டது என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்திருந்தது.

மேலும், இறந்த வாக்காளர்களின் பெயர்கள் மற்றும் நகல் வாக்காளர்களின் பெயர்களை நீக்கும் நடவடிக்கையும் இதில் அடங்கும் என்றும் அது கூறியுள்ளது.

## போப் பிரான்சிஸ் மறைவு:

# எடப்பாடி பழனிசாமி இரங்கல்

சென்னை, ஏப். 22-

கத்தோலிக்க திருச்சபையின் தலைவராக இருந்து வந்தவர் போப் பிரான்சிஸ் (வயது 88). இவருக்கு கடந்த பிப்ரவரி 14-ம் தேதி திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டது.

மருத்துவமனையில் 5 வாரங்களுக்கு மேலாக சிகிச்சையில் இருந்த போப் பிரான்சிஸ் உடல்நலம் தேறிய நிலையில் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார். டாக்டர்களின் கண்காணிப்பில் இருந்த போப் பிரான்சிஸ் நேற்று காலமானார். காலை 7.35 மணிக்கு போப் பிரான்சிஸ் உயிர் பிரிந்ததாக வாடிகன் தெரிவித்துள்ளது. போப் பிரான்சிஸ் மறைவுக்கு உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

அந்த வகையில் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் போப் பிரான்சிஸ் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள பதிவில், ''புனித திருத்தந்தை பிரான்சிஸ் வாழ்க்கை இரக்கம், பணிவு மற்றும் அசைக்க முடியாத நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாக இருந்தது. அமைதி, அன்பு மற்றும் ஒற்றுமை என்ற செய்தியால் லட்சக்கணக்கான மக்களை ஊக்கப்படுத்திய ஆன்மீகத் தலைவரை உலகம் இழந்துவிட்டது. உலகம் முழுவதும் உள்ள அவரது அனைத்து ஆதரவாளர்களுக்கும் எனது மனமார்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது ஆன்மா நித்திய சாந்தியடையட்டும்'' என்று தெரிவித்துள்ளார்.

# தகவல் தொழில்நுட்ப துறைக்கு குறைவான நிதியே ஒதுக்கீடு

## அமைச்சர் குற்றச்சாட்டு

சென்னை, ஏப். 22-

தகவல் தொழில்நுட்ப துறைக்கு நிதி குறைவாக ஒதுக்கீடு செய்யப்படுவதாக சட்டசபையில் அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் குற்றம் சாட்டினார்.

சட்டசபையில் நேற்று கேள்வி நேரத்தின்போது, கூடலூர் தொகுதி அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் பொன் ஜெயசீலன், தனது தொகுதியில் சிறு தகவல் தொழில்நுட்ப பூங்கா ஒன்று அமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

அதற்கு பதில் அளித்து பேசிய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், ''இந்த கூட்டத் தொடரிலேயே எனது துறையில் உள்ள சிக்கல்களை தெரிவித்து இருக்கிறேன். நிதி குறைவாக ஒதுக்கப்படுகிறது. மற்ற மாநிலங்களைப்போல் தொழில்நுட்ப பூங்காக்கள் எங்கள் துறையின் கீழ் வருவதில்லை. டைடல் பூங்கா போன்றவை எல்லாம் தொழில் துறையிடம் உள்ளது. நிதி, திறன், அதிகாரம் இருக்கும் அமைச்சர்களிடம் கேள்வி கேட்டுக் கொள்ளுங்கள்'' என்றார்.

அமைச்சரே இப்படி அரசுக்கு எதிரான கருத்தை சட்டசபையில் பதிவு செய்ததை தொடர்ந்து, சுதாரித்துக்கொண்ட சபாநாயகர் அப்பாவு, ''இந்த பிரச்சினை குறித்து நீங்கள் முதல்வரிடம் பேசி முடிவு செய்யவும். உறுப்பினரின் கேள்விக்கு நேர்மறையாக பதில் சொன்னால் நன்றாக இருக்கும்'' என்று சமாளித்தார்.

## இந்தியா வந்துள்ள அமெரிக்க துணை அதிபர்

# ஜே.டி.வான்ஸ் குடும்பத்தினருடன் அக்ஷர்தாம் கோவிலில் வழிபாடு



புதுடெல்லி, ஏப். 22-

4 நாட்கள் பயணமாக இந்தியா வந்துள்ள அமெரிக்க துணை அதிபர் ஜே.டி. வான்ஸ், தனது குடும்பத்துடன் டெல்லியில் உள்ள அக்ஷர்தாம் கோவிலில் வழிபாடு மேற்கொண்டார்.

துணை அதிபர் ஜே.டி. வான்ஸ், அவரது இந்திய வம்சாவளி மனைவி உஷா சிலுகுரி மற்றும் 3 குழந்தைகள் 4 நாட்கள் பயணமாக நேற்று காலை இந்தியா வந்தனர். மத்திய அமைச்சர் அஸ்வின் வைஷ்ணவ் விமான நிலையத்தில், அவர்களை வரவேற்றார். துணை அதிபருக்கு விமான நிலையத்தில் ராணுவ அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. மேலும், பரத நாட்டியம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டு வரவேற்பு அளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து துணை அதிபர் மற்றும் அவரது குடும்பத்தினர் டெல்லியில் உள்ள சுவாமி நாராயண் கோவிலுக்குச் சென்றனர்.

அங்கு அவர்கள் வழிபாடு மேற்கொண்டனர். அவர்களுக்கு கோவிலின் கட்டிடக் கலை நுணுக்கங்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

ஜே.டி. வான்ஸ் - உஷா சிலுகுரி தம்பதியரின் 3 குழந்தைகளும் இந்திய பாரம்பரிய உடைகளை அணிந்து இந்தியா வந்தனர். இரு மகன்களும் பைஜாமா குர்தா அணிந்திருந்தனர். மகள், அனார்கலி பாணியிலான சிறிய உடையை அணிந்திருந்தார்.

இந்திய உடைகளில் அவர்கள் வந்திருந்தது காண்போரின் கவனத்தை ஈர்ப்பதாக இருந்தது. வழிபாட்டை முடித்துக்கொண்டு அவர்கள் 5 பேரும், கோவிலின் முன்பாக புகைப்படங்களை எடுத்துக்கொண்டனர்.

ஜே.டி. வான்ஸ் மற்றும் அவரது குடும்பத்தினரின் வருகையை முன்னிட்டு டெல்லி முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக மூத்த காவல்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அமெரிக்க துணை அதிபரின் வருகையை ஒட்டி பாதுகாப்பு நெறிமுறையின் படி நாங்கள் ஏற்கனவே பயிற்சிகளை நடத்தியுள்ளோம். எல்லாம் சீராக நடைபெறுவதையும், வருகையின் போது எந்த அசம்பாவித சம்பவமும் நடக்காமல் இருப்பதையும் உறுதி செய்வதற்காக டெல்லியின் பல்வேறு பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது, என்று அந்த அதிகாரி கூறினார்.

# போதைப்பொருள் கடத்தல் வழக்கு: ஜாபர் சாதிக், சகோதரருக்கு ஜாமீன்

சென்னை, ஏப். 22-

போதைப் பொருள் கடத்தலில், சட்டவிரோத பணப் பரிமாற்றத்தில் ஈடுபட்டதாக கைது செய்யபட்ட ஜாபர் சாதிக் மற்றும் அவரது சகோதரர் முகமது சலீமுக்கு ஜாமீன் வழங்கி சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

போதைப் பொருள் கடத்தல் வழக்கில் கைது செய்யப்பட்ட தி.மு.க. முன்னாள் நிர்வாகியும், திரைப்பட தயாரிப்பாளருமான ஜாபர் சாதிக், சட்டவிரோத பணப் பரிமாற்றத்தில் ஈடுபட்டதாகக் கூறி, அமலாக்கத் துறை வழக்குப்பதிவு செய்து, கடந்த 2024-ம் ஆண்டு ஜூன் 26-ம் தேதி கைது செய்தது. பின்னர் அவரது சகோதரர் முகமது சலீமும் ஆகஸ்ட் மாதம் கைது செய்யப்பட்டார்.

இந்த வழக்கில் ஜாமீன் கோரி ஜாபர் சாதிக் மற்றும் அவரது சகோதரர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்கு நீதிபதி சுந்தர் மோகன் முன்பு விசாரணைக்கு வந்தபோது, அமலாக்கத் துறை தரப்பில், ஜாபர் சாதிக் தி.மு.க.வின் நிர்வாகியாக இருந்ததால் சாட்சிகளை கலைக்க வாய்ப்புள்ளதால் இருவருக்கும் ஜாமீன் வழங்கக்கூடாது என எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

அனைத்து தரப்பு வாதங்களும் நிறைவடைந்த நிலையில், மணிஷ் சிஷோடியா தீர்ப்பை முன் உதராணமாக வைத்து ஜாபர் சாதிக் மற்றும் அவரது சகோதரர் முகமது சலீமுக்கு ஜாமீன் வழங்குவதாக நீதிபதி தெரிவித்தார்.

# நிர்மலா சீதாராமன் அமெரிக்கா பயணம்

புதுடெல்லி, ஏப்.22-

வர்த்தக ஒப்பந்தங்களுக்கான பேச்சுவார்த்தை முயற்சிகளை இந்தியா துரிதப்படுத்த உள்ளது. இதற்காக, மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொள்ள உள்ளார்.

இதுகுறித்து மத்திய அரசு வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: மத்திய நிதியமைச்சர் மற்றும் வர்த்தக அமைச்சகத்தைச் சேர்ந்த மூத்த அதிகாரிகள் அமெரிக்கா மற்றும் பெரு நாடுகளுக்கு அடுத்த வாரம் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளனர். முக்கிய வர்த்தக பங்குதாரர்களுடன் இருமுனை பேச்சுவார்த்தை முயற்சிகளை தீவிரப்படுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்த பயணம் அமையும்.

சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எப்.), உலக வங்கி, ஜி20 நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி கவர்னர்கள் 2-வது சந்திப்பு, ஜி.எஸ்.டி.ஆர். சந்திப்பு உள்ளிட்ட முக்கிய நிகழ்வுகளும் இந்த பயணத்தின் போது அடங்கும். இவ்வாறு தெரிவித்துள்ளது.

# பெல்ஜியம் கார் ரேஸில் 2-ம் இடம் பிடித்த அஜித் அணிக்கு பிரபலங்கள் வாழ்த்துகள்



சென்னை, ஏப். 22-

பெல்ஜியம் நாட்டில் உள்ள புகழ்பெற்ற *Spa Francorchamps* சர்கியூட்டில் நடைபெற்ற கார் பந்தயத்தில் நடிகர் அஜித்தின் அணி இரண்டாம் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளது.

மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ள 'குட் பேட் அக்லி' படத்தில் அஜித், த்ரிஷா, பிரசன்னா, சுனில், அர்ஜுன் தாஸ், பிரபு, யோகி பாபு, சைன் டாம் சாக்கோ உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கியுள்ள இப்படம் ஏப்.10-ம் தேதி அன்று திரையரங்குகளில் வெளியானது. கலவையான விமர்சனங்களை பெற்றாலும் கூட, திரையரங்குகளில் வசூலை வாரிக் குவித்து வருகிறது 'குட் பேட் அக்லி'.

இப்படத்தை முடித்த கையோடு மீண்டும் கார் ரேஸில் கவனம் செலுத்த தொடங்கினார். முன்னதாக, துபாயில் நடந்த '24 ஹெச் சீரிஸ்' கார் ரேஸில் அஜித் தலைமையிலான 'அஜித்குமார் ரேஸிங் அணி' பங்கேற்று 2-ஆம் இடம் பிடித்தது. இந்த நிலையில், தற்போது பெல்ஜியம் நாட்டில் உள்ள புகழ்பெற்ற *Spa Francorchamps* சர்கியூட்டில் நடைபெற்ற கார் பந்தயத்தில் நடிகர் அஜித்தின் அணி இரண்டாம் இடம் பிடித்து சாதனை படைத்திருப்பதாக அஜித்தின் மேலாளர் சுரேஷ் சந்திரா பதிவிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள வீடியோவில் போடியத்தில் நிற்கும் அஜித் இந்திய தேசியக் கொடியை ஏந்தியவாறு மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.

ரசிகர்கள், பிரபலங்கள் பலரும் அஜித்துக்கு வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



தமிழ்நாட்டில் 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் பயன் பெறும் குடும்பங்களுக்கு குறைந்தது 50 நாட்கள் வேலைவழங்க 43 கோடி மனித நாட்கள் வேலை தேவைப்படுவதால், அந்த அளவுக்கு வேலை நாள்களை தமிழகத்திற்கு மத்திய அரசு ஒதுக்க வேண்டும். ரூ.3,850 கோடியை மத்திய அரசு உடனடியாக விடுவிக்க வேண்டும்.

- ராமதாஸ்



வந்தே பாரத் ரயிலின் முன் கோச், சாதா ரயில்களைவிட எடை குறைவு என்று ரயில்வே பாதுகாப்பு ஆணையர் அறிக்கை விடுத்துள்ளார். பசு மாடு முட்டினால்கூட தடம் புரண்டு பெரும் விபத்துக்கு ஆளாகும் அபாயம். வந்தே பாரத்துக்கு காவி நிறம் அடிப்பதில் காட்டிய ஆர்வத்தை பயணிகளின் பாதுகாப்பில் காட்ட வேண்டும்.

- சு.வெங்கடேசன்



அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அதிகாரத்தையும் கடந்து டெல்லியில் எஜமானர்களுக்கு விசுவாசத்தை காட்டுவதிலேயே குறியாக இருக்கிறார் தமிழக கவர்னர். நீலகிரி கவர்னர் மாளிகையில் பல்கலைக்கழக துணைவேந்தர்களின் மாநாட்டில் குடியரசு துணைத் தலைவர் பங்கேற்பார் என்றும் அறிவித்திருப்பதும் கண்டத்துக்குரியது.

- ஜவாஹிருல்லா



ராஜ்யசபா பட்டியலில் என் பெயர் இல்லாவிட்டால் அதற்காக யாரும் தி.மு.க.வை திட்டி சமூக வலைதளங்களில் எழுதக் கூடாது. ராஜ்யசபா சீட்டை விட்டுக் கொடுத்து, வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் அதிக சீட்டுகளை பெற திட்டமிட்டுள்ளேன். அதன்படி, 2026 தேர்தலில் குறைந்த பட்சம் 10 எம்.எல்.ஏ.க்களை சட்டமன்றத்துக்கு அனுப்ப இலக்கு வைத்துள்ளேன்.

- வைகோ

### விருதுநகர் மாவட்டத்தில்

# மாநில அளவிலான கோடைகால பயிற்சி முகாமை கலெக்டர் தொடங்கி வைத்தார்



**விருதுநகர், ஏப். 22-**

விருதுநகர் மாவட்ட நிர்வாகம் சார்பில், மதுரை தியாகராஜா பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற 11 ஆம் வகுப்பு தேர்வு எழுதியுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளைச் சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் கலந்து கொண்ட மாநில அளவிலான சிறப்பு கோடைகால உண்டு உறைவிட தலைமைப் பண்பு பயிற்சி முகாமினை மாவட்ட கலெக்டர் ஜெயசீலன் தொடங்கி வைத்தார்.

விருதுநகர் மாவட்டத்தில், கோடை விடுமுறையில் பள்ளி மாணவர்களுக்கு விடுமுறையை பயனுள்ளதாக கழிக்கும் வகையிலும், அவர்களது தனித்திறமைகளை ஊக்குவிக்கும் வகையிலும் பல்வேறு தலைப்புகளில் கோடைகால பயிற்சி முகாம்கள் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டு வருகின்றது. அதன்படி, கடந்த ஆண்டு விருதுநகர் மாவட்டத்தில் 6 முதல் 9 ஆம் வகுப்பு பயிலும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளைச் சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு உணவு மற்றும் தங்குமிடத்துடன் தலைமைப் பண்பு பயிற்சி அளிக்கப்பட்டது.

இதனை விரிவுபடுத்தும் விதமாகவும், மற்ற மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களும் பயன்பெறும் வகையில் இந்த ஆண்டு 11 ஆம் வகுப்பு தேர்வு எழுதியுள்ள மாநில அளவிலான அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளைச் சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு சிறப்பு கோடைகால உண்டு உறைவிட தலைமைப் பண்பு பயிற்சி முகாம் 16.04.2025 முதல் 25.04.2025 வரை மதுரை தியாகராஜா பொறியியல் கல்லூரி மற்றும் சிவகாசி மெப்கோ பொறியியல் கல்லூரி ஆகிய இரண்டு இடங்களில் நடைபெறுகிறது. இந்த சிறப்பு கோடைகால உண்டு உறைவிட தலைமைப் பண்பு பயிற்சி முகாமில் தலா 50 மாணவர்கள் வீதம் சென்னை, கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை, தூத்துக்குடி, திருச்சி, திருப்பத்தூர், திருவண்ணாமலை, தென்காசி, விருதுநகர் உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த மொத்தம் 100 மாணவர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெறுகின்றனர்.

### கிளாமர் காளி கொலை வழக்கு:

# திருமங்கலம் கோர்ட்டில் வெள்ளைக்காளி ஆஜர்



**திருமங்கலம், ஏப். 22-**

மதுரை தனக்கன்குளம் அருகே ரவுடி கிளாமர் காளி கொலை செய்யப்பட்ட வழக்கு தொடர்பாக திருமங்கலம் நீதிமன்றத்தில் பிரபல ரவுடி வெள்ளைக்காளி பலத்த போலீஸ் பாதுகாப்புடன் ஆஜர்படுத்தப்பட்டார்.

மதுரை மாநகராட்சியின் முன்னாள் திமுக மண்டல தலைவரரான வீ.கே.குருசாமியின் சகோதரி மகனான பிரபல ரௌடி கிளாமர்காளி கடந்த மார்ச் 22-ம் தேதி தனக்கன்குளம் பகுதியிலுள்ள வெங்கலமூர்த்தி நகரில் ரவுடிகளால் கொடூரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டார். இச்சம்பவம் தொடர்பாக இதுவரை 10க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.இதில் முக்கிய குற்றவாளியான சந்திரபோஸ் என்ற ரவுடி போலீசாரால் நடத்திய என் கவுண்டரில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்த கொலை சம்பவத்தில் மூளையாக செயல்பட்ட பிரபல ரவுடி வெள்ளைக்காளி ஏற்கனவே கொலை வழக்கு ஒன்றில் கைது செய்யப்பட்டு சென்னை புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நிலையில், ரவுடி வெள்ளைக் காளியை கிளாமர் காளி கொலை வழக்கு தொடர்பாக காவலில் எடுத்து விசாரணை செய்ய போலீசார் திட்டமிட்டு இருந்தனர்.

தொடர்ந்து புழல் சிறையிலிருந்து பலத்த போலீஸ் பாதுகாப்புடன் வேனில் அழைத்து வரப்பட்ட ரவுடி வெள்ளைக்காளி, கிளாமர் காளி கொலை வழக்கு தொடர்பாக நேற்று திருமங்கலம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஏ.கே 47 துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்புடன் ஆஜர்படுத்தப்பட்டார். இதையடுத்து வெள்ளைக்காளியை வரும் 23ம் தேதி மீண்டும் ஆஜர் படுத்திட நீதித்துறை நடுவர் பி.செல்வகுமார் உத்தரவிட்டார். அப்போது திருமங்கலம் ஏஎஸ்பி அன்சுல் நாகர் தலைமையில் 50 க்கும் மேற்பட்ட போலீசார் நீதிமன்ற வளாகத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

# ராமநாதபுரத்தில் அ.தி.மு.க.வினர் ஆர்ப்பாட்டம்



**ராமநாதபுரம், ஏப். 22-**

அமைச்சர் பொன்முடியை கண்டித்தும் ராமநாதபுரம் நகராட்சி நிர்வாகத்தை கண்டித்தும் அ.தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கடந்த 6-ம் தேதி சென்னையில் நடந்த கூட்டத்தில் சைவம், வைணவம் சமயங்களை விலை மாதருடன் ஒப்பிட்டு தமிழக வனத்துறை அமைச்சர் பொன்முடி பேசினார். பெண்களை ஆபாசமாக பேசிய செயலுக்கு கண்டனம் தெரிவித்து திமுக துணை பொதுச்செயலர் கனிமொழி எம்பி கண்டனம் தெரிவித்தார். இதையடுத்து திமுக துணை பொதுச்செயலர் பொறுப்பில் இருந்து பொன்முடியை, திமுக தலைவர் ஸ்டாலின் நீக்கினார். இருப்பினும் பொன்முடியை அமைச்சர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என பல்வேறு மகளிர் அமைப்புகள் குரல் எழுப்பி வருகின்றன. இந்நிலையில் பெண்களை ஆபாசமாக பேசிய அமைச்சர் பொன்முடி, ராமநாதபுரம் நகராட்சி நிர்வாக சீர்கேட்டை கண்டித்து ராமநாதபுரம் மாவட்ட அதிமுக சார்பில் ராமநாதபுரம் நகராட்சி அலுவலகம் நுழைவு வாயில் முன்

ஆர்ப்பாட்டம் நடந்தது. அதிமுக மகளிரணி இணை செயலாளர் கீர்த்திகா முனியசாமி தலைமை வகித்தார்.மாவட்ட செயலாளர் முனியசாமி, மாவட்ட அவைத்தலைவர் சாமிநாதன், முன்னாள் அமைச்சர் அன்வர்ராஜா, மாவட்ட இணை செயலாளர் கவிதா சசிகுமார், மாணவர் அணி மாநில துணைச் செயலாளர் செந்தில்குமார், அம்மா பேரவை துணைச் செயலாளர் முனியசாமி, எம்.ஜி.ஆர். மன்ற இணைச் செயலாளர்கள் நிறைகுலத்தான், மலேசியா பாண்டியன், எம்.ஜி.ஆர். மன்ற துணைச் செயலாளர்கள் ஆனிமுத்து, சுந்தர பாண்டியன், ரத்தினம், தகவல் தொழில்நுட்ப பிரிவு விருதுநகர் மண்டல செயலாளர் சரவணக்குமார், மாவட்ட துணைச் செயலாளர் பாலாமணி மாரி, மாவட்ட மகளிர் அணி செயலாளர் ஜெய்லானி சீனிகட்டி உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் மண்டபம் மேற்கு ஒன்றிய செயலாளர் மருதுபாண்டியன் நன்றி கூறினார்.

### விஜய் ஆணைக்கிணங்க மேலூரில்

# த.வெ.க சார்பில் நீர் மோர் பந்தல் திறப்பு



**மேலூர், ஏப். 22-**

தமிழக வெற்றி கழகம் தலைவர் விஜய் அவர்களின் ஆணைக் கிணங்க, மதுரை மாநகர் வடக்கு மாவட்ட செயலாளர் விஜய் அன்பன் கல்லானை அறிவுறுத்தலின் பேரில் மதுரை புறநகர் வடக்கு மாவட்டம், மேலூர் ஒன்றியம் சார்பில் மேலூர் பஸ் நிலையம் முன்பாக மேலூர் அரசு மருத்துவ மனை எதிரில் நீர் மோர், தண்ணீர் பந்தலை திறந்து வைத்து, பொதுமக்களுக்கு பழங்களை வழங்கினர். அதனை தொடர்ந்து அழகர் கோவில் கோட்டை வாசல் முன்பும், கொட்டாம்பட்டியில் பஸ் நிலையம் முன்பு நீர்,மோர், பந்தல் திறந்து வைத்து பொதுமக்களுக்கு சர்பத் பழச்சாறுகளை வழங்கினர்.

மேலூர் ஒன்றிய செயலாளர் மனோஜ் குமார் ஏற்பாட்டில் மேலூர் பஸ் நிலையம் முன்பும், மேலூர் அரசு மருத்துவமனை எதிரில் நீர்,மோர் பந்தலை ஏற்பாடு செய்திருந்தார். மாவட்ட துணைச் செயலாளர் தினகரன் அழகர்கோவில் முன்பு நீர்,மோர் பந்தலை ஏற்பாடு செய்திருந்தார். கொட்டாம்பட்டி ஒன்றிய செயலாளர்கள் அருண், கௌதம் ஆகியோர் கொட்டாம்பட்டி பஸ் நிலையம் முன்பு நீர்,மோர் பந்தலை ஏற்பாடு செய்திருந்தனர்.

மதுரை புறநகர் வடக்கு மாவட்ட செயலாளர் விஷால் கிருஷ்ணா அனைத்து இடங்களிலும் நீர், மோர் பந்தலை திறந்து வைத்தார். விழாவில் மேலூர் நகர் செயலாளர் பிரசாத் வரவேற்புரையாற்றினார்.

விழாவில் மாவட்ட பொருளாளர் மணிமாறன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் ரோஸ்லன், பார்வதி, ஸ்ரீ தேவி, மாவட்ட தொண்டரணி அமைப்பாளர்கள் பால் பாண்டி, கோபாலகிருஷ்ணன், மேலூர் ஒன்றிய நிர்வாகிகள் மதன்குமார், காளீஸ்வரன், யோகராஜ், உமர், அஜார், சுரேஷ், மனோஜ், சபரி, அறிவு, மாவட்ட மகளிரணி சுகித்ஷா, மேலூர் நகர் மகளிரணி சுபாஷினி, உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஓரியண்ட் எலக்ட்ரிக்கின் எம்.எஸ். தோனி, மதன் கௌரி ஆகியோர் இணைந்து நடத்தும் நகைச்சுவையான, பாட்காஸ்ட் ஈர்க்கப்பட்ட பிரச்சாரம்

**திருச்சி, ஏப் 22-**

பன்முகப்படுத்தப்பட்ட 3 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள சிகே பிர்லா குழுமத்தின் ஒரு பகுதியான ஓரியண்ட் எலக்ட்ரிக் லிமிடெட் ,அதன் சமீபத்திய ஃபேன்கள் பிரச்சாரத்தில் இளைய, டிஜிட்டல் முதன்மை பார்வையாளர்களை எதிரொலிக்கும் வகையில் அதன் பிராண்ட் கதையை உருவாக்கி வருகிறது - கிரிக்கெட் ஜாம்பவான் மகேந்திர சிங் தோனி, மதன் கௌரி ஆகியோர் இடம்பெறும் ஒரு திருப்பத்துடன் கூடிய பாட்காஸ்ட் ஸ்டைல் கதை சொல்லும் வடிவமைப்பை ஏற்றுக்கொள்கிறது.

இப்பிரச்சாரம் குறித்து ஓரியண்ட் எலக்ட்ரிக்கின் தலைமை சந்தைப்படுத்தல் மற்றும் வாடிக்கையாளர் அனுபவ அதிகாரி அனிகா அகர்வால் அவர்கள் இவ்வாறு கூறினார்.ஓரியண்ட் எலக்ட்ரிக் பல தசாப்தங்களாக இந்திய நுகர்வோருக்கு ஃபேன்களுடன் ஒத்ததாக உள்ளது. தற்கால வீடுகளுக்கான ஃபேன்களில் பிரீமியம் வடிவமைப்பு அழகியல், ஸ்மார்ட் அம்சங்கள் மற்றும் தொழில்நுட்பத்தை கொண்டு வர எங்கள் புராடக்ட் போர்ட்ஃபோலியோ உருவாகி வருவதால், எங்கள் பிராண்ட் குரலும் உருவாகி வருகிறது.

எம்.எஸ். தோனி, மதன் கௌரி ஆகியோர் இடையேயான ஒத்துழைப்பு, ஒரு திருப்பத்துடன் பாட்காஸ்ட் பாணி கதை சொல்லும் வடிவத்தின் மூலம் வழங்கப்படுகிறது. எம்.எஸ். தோனியின் நீடித்த பிரபலத்துடன், மதன் கௌரியின் வலுவான பிராந்திய செல்வாக்கால் பூர்த்தி செய்யப்பட்டு, நாங்கள் மிகவும் தொடர்புடைய, கலாச்சார ரீதியாக எதிரொலிக்கும் பிராண்ட் விவரிப்பை உருவாக்குகிறோம்.மெக்கான் வேர்ல்ட் குரூப்பின் கிரியேட்டிவ் ஹெட் நார்த் & சவுத், சம்பித் மொஹந்தி அவர்கள் இவ்வாறு கூறினார்.ஓரியண்ட் ஃபேன்களுக்கான எங்கள் புதிய பிரச்சாரம், எம்.எஸ். தோனியும் மதன் கௌரியும் பழைய நண்பர்களைப் போல அரட்டை அடித்து நகைச்சுவையாகப் பேசும் புதிய பாட்காஸ்ட் ஸ்டைல் அணுகுமுறையுடன் புதிய பாணியில் நடக்கிறது. இப்போதெல்லாம் மக்கள் இதைத்தான் விரும்புகிறார்கள். வழக்கமான விளம்பரங்களைப் போல கட்டாயப்படுத்துவதில்லை. அவர்கள் சிரிக்கும்போதும், கேலி செய்யும் போதும், ஓரியண்டின் புதிய தொழில்நுட்பத்தை சிறப்பானதாக்குவதை அவர்கள் இயல்பாகவே முன்னிலைப்படுத்துகிறார்கள்.

### மதுரை தமுக்கம் மைதானத்தில்

# தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்தின் தொழில் வர்த்தக பொருட்காட்சி 2025

## நாளை முதல் 27-ம் தேதி வரை நடக்கிறது




**மதுரை, ஏப் 22-**

மதுரை தமுக்கம் மைதானத்தில் தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்தின் தொழில் வர்த்தகப் பொருட்காட்சி 2025 வருகிற 23- ம் தேதி முதல் 27-ம் தேதி வரை நடக்கிறது.

தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்தின் தொழில் வர்த்தகப் பொருட்காட்சி 2025, மதுரை தமுக்கம் மைதானத்தில் 23.04.2025 புதன்கிழமை முதல் 27.04.2025 ஞாயிற்றுக் கிழமை வரை 5 நாட்கள் மிகச் சிறப்பான முறையில் பிரம்மாண்டமாக 200-க்கும் மேற்பட்ட ஸ்டால்களுடன் நடைபெற உள்ளது. தமிழகம் மட்டுமல்லாது பிற மாநிலங்களிலுள்ள சிறிய, பெரிய உற்பத்தியாளர்களும், வணிக நிறுவனங்களும் ஸ்டால்கள் அமைத்து அதி நவீனமான பொருட்களையும், சாதனங்களையும் பார்வைக்கு வைத்து விற்பனை செய்ய உள்ளனர். தமிழக அரசின் சார்பில் மகளிர் சுய உதவி குழுக்களும் அதிகளவில் ஸ்டால்கள் அமைக்கவுள்ளனர். சுமார் 1 லட்சத்திற்கும் அதிகமானோர் பொருட்காட்சியை பார்வையிட்டு பயனடைவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பொருட்காட்சியில் உணவகங்கள், சிறுவர் சிறுமிகளுக்கான நவீன விளையாட்டு சாதனங்களும் அமைக்கப்பட உள்ளன. தென்மாவட்டத்தில் முதன் முறையாக குளுகுளுப் பேருந்தில் 12 விளையாட்டுகள் இடம்பெற உள்ளன.

பொருட்காட்சிக்கான அனுமதி இலவசம். பொருட்காட்சி அனுமதி சீட்டு எண்களின் அடிப்படையில் குலுக்கல் முறையில் மதியம் 1 மணி, 3 மணி, 5 மணி, 7, மணி மற்றும் 9 மணி ஆகிய நேரங்களில் தினசரி ஐந்து பரிசுகளும், பொருட்காட்சி இறுதி நாளன்று மெகா பம்பர் பரிசாக மதுரை நிப்பான் பர்னிச்சர் நிறுவனம் வழங்கும் ஹூரோ ஹோன்டா மோட்டார் சைக்கிள் ஒன்றும், பம்பர் பரிசுகளாக மதுரை ஸ்ரீ பாண்டியன் மோட்டார்ஸ் நிறுவனம் வழங்கும் டி.வி.எஸ் ஸ்கூட்டி மோட்டார் சைக்கிள் ஒன்றும், சத்யம் குருப் ஆஃப் கம்பெனிஸ் வழங்கும் எலக்ட்ரிக் மோட்டார் சைக்கிள் ஒன்றும், மதுரை விங்ஸ் என்ஜினியரிங் கம்பெனி வழங்கும் எலக்ட்ரிக் மோட்டார் சைக்கிள் ஒன்றும், விக்னேஷ் பார்மா குரூப் வழங்கும் எல்.ஜி டபுள் டோர் பிரிட்ஜ் ஒன்றும் வழங்கப்பட உள்ளன. பொருட்காட்சி ஐந்துநாட்களும் தினசரி காலை 11 மணி முதல் இரவு 9 மணி வரையிலும் நடைபெறும்.

தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்தின் தலைவர் டாக்டர் என்.ஜெகதீசன் மற்றும் பொருட்காட்சி குழுவின் தலைவராக எஸ்.பி.வரதராஜன், செயலாளர் எஸ்.ஸ்ரீதர், துணைத் தலைவர்களாக ஜி.ராஜமூர்த்தி,ஜெ.கே.முத்து, ஏகேபி.நவாஸ் பாபு, ஒருங்கிணைப்பாளர்களாக சத்யம் திரு வி.செந்தில் குமார், எம். சாகித் அலி ஆகியோர் மிகச் சிறப்பாக செயலாற்றி வருகின்றனர். சங்கத்தின் முன்னாள் தலைவர் வி.நீதிமோகன், துணைத் தலைவர்கள் பிர.ரமேஷ் மற்றும் டிக துஷ்கோடி ஆகியோர் பொருட்காட்சி குழு ஆலோசகர்களாகவும் செயல்பட்டு வருகின்றனர்.

பொருட்காட்சியினை 23.04.2025-ம் நாள் புதன்கிழமை காலை 11.00 மணியளவில் மதுரை, தமுக்கம் கன்வென்ஷன் சென்டரில் மதுரை மாநகர மேயர் இந்திராணி பொன் வசந்த் குத்துவிளக்கேற்றி துவக்கி வைக்கிறார். மதுரை மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன் நிகழ்ச்சிக்கு முன்னிலை வகிக்கிறார்.

மதுரை மாநகராட்சி வடக்கு மண்டலத் தலைவர் சரவண புவனேஸ்வரி,மதுரை மாநகர துணை மேயர் நாகராஜன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

# மேலாண்மையில் முதுகலை எக்ஸிகியூட்டிவ் பட்டப்படிப்பின் 18-வது பேட்சை தொடங்கும் ஐஐஎம்கே

**சென்னை, ஏப் 22-**

இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் மேனேஜ்மென்ட் கோழிக்கோடு,வேளாண்மையில் அதன் மிகப்பிரபலமான எக்ஸிகியூட்டிவ் முதுகலை கல்வித் திட்டத்தின் 18-வது பேட்ச்ற்கான சேர்க்கைகள் தொடங்கப்படுவதை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறது. பணியாற்றுகின்ற பேரார்வம் கொண்ட எக்ஸிகியூட்டிவ்களுக்காக மிக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டிருக்கும் கலவையான எம்பிஏ கல்வித்திட்டமானது 2 ஆண்டுகள் காலஅளவைக் கொண்டிருக்கிறது. உலகளாவிய தர அளவுகோல்களுக்கும் மாறிவரும் தொழில்துறை தேவைகளுக்கும் இணக்கமான உலகத்தரத்திலான எக்ஸிகியூட்டிவ் கல்வியை வழங்குவதில் ஐஐஎம்கே கொண்டிருக்கும் தொடர்ச்சியான தலைமைத்துவ நிலையை இக்கல்வித்திட்டத்தின் அறிமுகம் முன்னிலைப்படுத்துகிறது. மேலாண்மையில் இபிஜிபி- ன் 18-வது பேட்ச் தொடக்க நிகழ்வைத் தொடர்ந்து பட்டப்படிப்பை முடித்து வெளியேறும் 15-வது பேட்ச் பட்டதாரிகளுக்கான சிறப்பான பட்டமளிப்பு விழா நிகழ்வும் நடைபெற்றது.

இந்த பேட்ச்-ல் இதுவரை இல்லாத அளவிற்கு மிக அதிக எண்ணிக்கையாக 615 மாணவ மாணவியர் இடம் பெற்றிருந்தனர்.இந்த கண்கவர் நிகழ்ச்சியில் ஐஐஎம் கோழிக்கோடு-ன் இயக்குனர் பேராசிரியர் தெபாஷிஸ் சாட்டர்ஜி வழங்கிய சிறப்புரை இடம்பெற்றது. இந்நிகழ்வில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) தலைவர் டாக்டர் வி.நாராயணன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.இது குறித்து ஐஐஎம் கோழிக்கோடு-ன் இயக்குனர் பேராசிரியர் தெபாஷிஸ் சாட்டர்ஜி கூறுகையில், இபிஜிபி- ன்18-வது பேட்சை நாங்கள் வரவேற்கிறபோது ஒருமைப்பாடு, குறிக்கோள் மற்றும் வாழ்நாள் முழுதும் நீடிக்கிற கற்றலுக்கான பேரார்வம் ஆகியவற்றில் ஆழமான பிடிப்பு கொண்டிருக்கின்ற உலகளாவிய பிசினஸ் தலைவர்களை வளர்த்துருவாக்குவதில் எமது அர்ப்பணிப்பை நாங்கள் மீண்டும் உறுதி செய்கிறோம். மாறுபட்ட தொழில்முறை மற்றும் கல்வி பின்புலங்களைச் சேர்ந்த நபர்கள் எதிர்கால சவால்களை எதிர்கொள்ள தயாராக உள்ள தலைவர்களாக ஆவதற்கு இக்கல்வி திட்டத்தில் பங்கேற்கும் மாணவர்களுக்கு திறனதிகாரம் அளித்திருக்கிறது என்று கூறினார்.

# செந்துறையில் தி.மு.க. சார்பில் பெண்கள் கபடி போட்டி



**நத்தம், ஏப். 22-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே செந்துறை-சித்திரைகவுண்டன்பட்டியில் உணவுத்துறை அமைச்சர் சக்கரபாணி பிறந்த நாளை முன்னிட்டு வடக்கு ஒன்றிய திமுக சார்பில் பெண்களுக்கான கபடி போட்டிகள் நடந்தது.போட்டியில் பல்வேறு மாவட்ட பகுதிகளில் இருந்து சேர்ந்த 35-க்கும் மேற்பட்ட அணிகள் பங்கேற்றன.

முடிவில் முதல் பரிசை அரியலூர் அணியும், 2-ம் பரிசை கரூர் அணியும், 3-ம் பரிசை பொள்ளாச்சி அணியும், 4-ம் பரிசை சாத்தூர்-கோவில்பட்டி அணியும் வென்றன. தொடர்ந்து வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசளிப்பு விழா நடந்தது.இதற்கு வடக்கு ஒன்றிய செயலாளர் பழனிச்சாமி தலைமை தாங்கினார். இதில் முன்னாள் எம்.எல்.ஏ ஆண்டி அம்பலம் கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகளையும், கோப்பைகளையும், கேடயங்களையும் வழங்கினார்.

விழாவில் தெற்கு ஒன்றிய செயலாளர் ரத்தினக்குமார், நத்தம் பேரூராட்சி தலைவர் சேக்சிக்கந்தர்பாட்சா, தொகுதி பார்வையாளர் ரஞ்சன்துரை, மாநில பொதுக்குழு உறுப்பினர் முத்துகுமார்சாமி, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சுந்தரமூர்த்தி, மாவட்ட பிரதிநிதி குடகிப்பட்டி அழகர்சாமி,ஆசிரியர் சேகர், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் வேலுச்சாமி உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



**கோடை வெயிலில் பொதுமக்களின் தாகம் தீர்க்க மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. அலுவலகம் முன்பு முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ.வின் ஆலோசனைப்படி அ.தி.மு.க.மாநில பொதுக்குழு உறுப்பினர் அண்ணாநகர் ரவிச்சந்திரன் பொதுமக்களுக்கு நீர், மோர் வழங்கினார்.**

# கல்லீரல் பாதிப்பு அதிகரித்து வருகிறது

## மீனாட்சி மருத்துவமனை நிபுணர்கள் தகவல்




**மதுரை, ஏப் 22-**

சமீப காலமாக கொழுப்பு படிந்த கல்லீரல் பாதிப்பு அதிகரித்து வருகிறது. ஆரோக்கியமில்லாத வாழ்க்கை முறை, உடற்பருமன் மற்றும் நீரிழிவு ஆகிய காரணங்களால் கல்லீரலில் கொழுப்பு அளவுக்கதிகமாக சேர்வதே இதனை உருவாக்குகிறது. தொடக்க நிலையிலேயே நோயறிதல், உரிய நேரத்திற்குள் சிகிச்சை பெறுதல், வாழ்க்கை முறை மாற்றங்களை செய்தல் மற்றும் இதற்கு காரணமான மூல காரணிகளின் முறையான மேலாண்மை ஆகியவை கல்லீரல் ஆரோக்கியத்தை பாதுகாப்பதற்கு இன்றியமையாதவை என்று மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் மருத்துவ நிபுணர்கள் வலியுறுத்தினார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 19 அன்று அனுசரிக்கப்படும் உலக கல்லீரல் தினத்தை யொட்டி நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பு நிகழ்வில், பேசிய நிபுணர்கள், ஆரோக்கியமற்ற உணவுமுறைகள், அடிக்கடி பேக்கரி தயாரிப்புகளை உட்கொள்ளுதல், சர்க்கரை அதிகம் சேர்க்கப்பட்ட பானங்களையும், மதுபானங்களையும் அருந்துதல் ஆகியவை கல்லீரல் நோய்க்கு அதிகமான பங்களிப்பை வழங்கி வருகின்றன என்று குறிப்பிட்டனர். குறிப்பாக இளவயது நபர்கள் மத்தியில் கல்லீரல் நோய் அதிகமான காணப்படுகிறது என்று கவலையுடன் அவர்கள் சுட்டிக் காட்டினர். இத்தகைய விரும்பத்தகாத பழக்கவழக்கங்கள், உடற்பருமன் மற்றும் நீரிழிவு போன்ற வளர்சிதை மாற்ற சீர்கேடுகளுக்கும் வழிவகுக்கும். கல்லீரல் ஆரோக்கியத்தை பராமரிக்கவும், கல்லீரல் நோய் வராமல் தடுக்கவும், ஊட்டச்சத்து மிக்க உணவின் முக்கியத்துவத்தை மருத்துவ நிபுணர்கள் மருத்துவ இயக்குநரும், குடல், இரைப்பை அனுவை சிகிச்சை துறையின் தலைவருமான டாக்டர். ரமேஷ் அர்த்தனாரி, குடல், இரைப்பை அனுவை சிகிச்சை துறையின் முதுநிலை நிபுணர் டாக்டர். மோகன், மருத்துவ மருத்துவ மற்றும் குடல், இரைப்பை அனுவை சிகிச்சை துறையின் முதுநிலை நிபுணர் டாக்டர். சீனிவாசன் ராமச்சந்திரன், குடல், இரைப்பை அனுவை சிகிச்சை துறையின் இணை மருத்துவ நிபுணர் டாக்டர். ஸ்ரீவித்யா வலியுறுத்தினர். "உணவே மருந்து" என்ற இந்தாண்டு கல்லீரல் தின கருப்பொருளை இதற்கு எடுத்துக்காட்டாக அவர்கள் குறிப்பிட்டனர்.

இப்பாதிப்பை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவது அதிக சேதம் நிகழாமல் தடுக்கும் என்பதால் வழக்கமான ஸ்கிரீனிங் சோதனை மற்றும் கல்லீரல் செயற்பாட்டிற்கான சோதனைகள் முக்கியமானவை என்றும் நிபுணர்கள் வலியுறுத்தினர். மஞ்சள்காமாலை, கடும் அசதி போன்ற அடையாளங்களும், ஹெபடைட்டிஸ்-ன் அறிகுறிகளும் பெரும்பாலும் இந்நோயின் பிந்தைய நிலைகளில்தான் வெளிப்படுகின்றன. ஆனால், அதற்குள் உடலுக்கு கணிசமான தீங்கு ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் என்றனர்.

# மொத்த வைப்புத்தொகை ரூ.34,494 கோடியை எட்டிய உஜ்ஜீவன் சிறு நிதி வங்கி

**ஒசூர், ஏப்.22-**

உஜ்ஜீவன் சிறு நிதி வங்கி வலுவான வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்கிறது. இது அதன் பன்முகப்படுத்தப்பட்ட பாதுகாக்கப்பட்ட சொத்து இலாகாவால் இயக்கப்படுகிறது மற்றும் சமநிலையான கடன் கலவையை நோக்கிய மாற்றத்தால் உதவப்படுகிறது.

"நடப்பு காலாண்டில், மலிவு விலை வீட்டுவசதி, நுண் அடமானங்கள், வாகனக் கடன்கள், தங்கக் கடன்கள் மற்றும் விவசாயக் கடன்கள் போன்ற பிரிவுகள் பாதுகாக்கப்பட்ட சொத்து இலாகாவிற்குள் எங்கள் வளர்ச்சியைத் தூண்டும். அதே நேரத்தில் எங்கள் புத்தகத்தை 50% ஆண்டுக்கு ஆண்டு வளர்க்க நாங்கள் இலக்கு வைத்துள்ளோம்" என்று உஜ்ஜீவன் சிறு நிதி வங்கியின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி சஞ்சீவ் நௌடியால் கூறினார்.

வைப்புத்தொகை அடிப்படையில், உஜ்ஜீவன் தொடர்ந்து வலுவான பொறுப்பு உரிமையை உருவாக்கி வருகிறது. வங்கியின் மொத்த வைப்புத்தொகை ₹34,494 கோடியை எட்டியுள்ளது. இது 16% ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியைக் குறிக்கிறது. இதில், நடப்பு மற்றும் சேமிப்புக் கணக்கு வைப்புத்தொகைகள் 15% ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து ₹8,662 கோடியை எட்டியுள்ளன, இது மொத்த வைப்புத்தொகை தளத்தில் 25% ஆகும். உஜ்ஜீவனின் முக்கிய பலம் அதன் வலுவான சில்லறை வைப்புத்தொகை தளமாகும், இது இப்போது மொத்த வைப்புத்தொகையில் ₹25,274 கோடியாக உள்ளது, இது மொத்த வைப்புத்தொகையில் 73% ஆகும். கடந்த எட்டு மாதங்களில், சில்லறை வைப்புத்தொகைகள் தொடர்ந்து 70% க்கும் அதிகமாக உள்ளன, இது வங்கியின் வைப்புத்தொகை கட்டமைப்பில் நீண்டகால நிலைத்தன்மையை உறுதி செய்கிறது.

# நத்தம் அருகே தி.மு.க. மாணவரணி உறுப்பினர் சேர்க்கை



**நத்தம், ஏப்.22-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே சமுத்திராபட்டியில் தெற்கு ஒன்றிய மாணவரணி சார்பாக உறுப்பினர் சேர்க்கை முகாம் நடந்தது. இதற்கு தெற்கு ஒன்றிய செயலாளர் ரத்தினக்குமார் தலைமை தாங்கினார். வடக்கு ஒன்றிய செயலாளர் பழனிச்சாமி, நகர செயலாளர் ராஜ்மோகன்,தெற்கு ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் சுப்பிரமணி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் தேனம்மாள் தேன்சேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் மாநில மாணவரணி இணை செயலாளர் வீரமணி கலந்து கொண்டு இல்லம் தேடி உறுப்பினர் சேர்க்கைக்கான புதிய படிவங்களை வழங்கினார்.இதில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தினேஷ்,துணை அமைப்பாளர் சிவா உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# திருமங்கலம் நகரில் தே.மு.தி.க. உறுப்பினர் சேர்க்கை முகாம்

**திருமங்கலம், ஏப். 22-**

மதுரை புறநகர் தெற்கு மாவட்டம், திருமங்கலம் நகர் தேமுதிக சார்பில் உறுப்பினர் சேர்க்கை முகாம் சிறப்பாக நடைபெற்றது.

2026 சட்டமன்ற தேர்தலுக்கு தயாராகிடும் வகையில் தேமுதிக சார்பில் தமிழ்நாடு முழுவதும் உறுப்பினர் சேர்க்கை முகாம்கள் நடைபெற்று வருகிறது.தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் ஆணைக்கிணங்க தமிழ்நாடு முழுவதும் உறுப்பினர் சேர்க்கை துவங்கி, டிஜிட்டல் வாயிலாகவும் உறுப்பினர் சேர்க்கை பதிவுகளை பதிவு செய்யும் வசதி செய்யப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக திருமங்கலம் நகர் தேமுதிக சார்பில் ஏர்போர்ட் சாலையில் உள்ள தங்கமயில் ஸ்டோர் அருகில் உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெற்றது.

இந்த முகாமிற்கு நகரச் செயலாளர் ராதாகிருஷ்ணன் தலைமை வகித்தார். தேமுதிக நகர்மன்ற உறுப்பினர் ராஜகுரு முன்னிலை வகித்தார். ஏராளமானோர் ஆர்வமுடன் கலந்து கொண்ட இந்த முகாமில் மதுரை புறநகர் தெற்கு மாவட்ட தேமுதிக செயலாளர் கணபதி சிறப்பாளராக கலந்து கொண்டுதுவக்கி வைத்து பார்வையிட்டார். இந்த முகாமில் முதல்முறை வாக்காளர்கள், பெண்கள் மற்றும் இளைஞர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் தேமுதிக உறுப்பினராக ஆர்வமுடன் இணைந்தார். தற்போது தமிழகம் முழுவதிலும் தேமுதிக உறுப்பினர் சேர்க்கை துவங்கிய ஒரு வாரத்தில் சும்மார் ஒன்றரை லட்சம் உறுப்பினர் விண்ணப்பங்கள் பதிவாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# அங்கன்வாடி மையங்களுக்கு எடை, உயரம் அளவிடும் கருவிகளை கலெக்டர் வழங்கினார்




**விருதுநகர், ஏப்.22-**

விருதுநகர் மாவட்ட கலெக்டர் அலுவலகக் கூட்டரங்கில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் மற்றும் பிரதான் இண்டஸ்இண்ட் வங்கி சார்பில், 200 அங்கன்வாடி மையங்களுக்கு எடை மற்றும் உயரம் அளவிடும் கருவிகளை மாவட்ட கலெக்டர் ஜெயசீலன் வழங்கினார்.

பின்னர், விவசாயப் பொருட்களின் விற்பனைக்காக 150 கிலோ வரை எடை பார்க்கும் 60 மின் தராசுகளை கண்மாய் விவசாய சங்கங்களுக்கு வழங்கினார். பிரதான் நிறுவனமானது இன்டஸ்இண்ட் வங்கி மாவட்ட வளர்ச்சித் திட்டத்தின்; கீழ், விருதுநகர் மாவட்டத்தில் நரிக்குடி, சிவகாசி உள்ளிட்ட 7 ஒன்றியங்களில் நீர் நிலைகளை புணரமைத்தல், நில மேம்பாடு, இயற்கை விவசாயம், கல்வி, சுகாதாரம் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு ஆகிய திட்டங்களை கடந்த இரண்டு ஆண்டுகளாக அரசு துறையினருடன் இணைந்து செயல்படுத்தி வருகின்றது.

அதில் குறிப்பாக வளரிளம் பெண்கள் மத்தியில் அனீமியா ஒழிப்பு பற்றிய விழிப்புணர்வு அவர்களுக்குத் தேவையான நடத்தை மற்றும் கல்வியினை மாவட்டத்தில் 3ஆயிரம் வளரிளம் பெண்களை குழுவாக ஒருங்கிணைத்து மாதம் ஒரு முறை அங்கன்வாடி மையங்களில் குழுக் கூட்டம் நடத்தப்பட்டு வருகின்றது. அதன் ஒரு பகுதியாக, இன்று வளரிளம் பெண்கள், குழந்தைகள் மற்றும் கர்ப்பிணி தாய்மார்களின் எடை மற்றும் உயர அளவினை கணக்கிட 200 அங்கன்வாடி மையங்களுக்கு உயரம் மற்றும் எடை அளவிடும் கருவிகளை மாவட்ட கலெக்டர் ஜெயசீலன் வழங்கினார்.

இந்நிகழ்வில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி மாவட்ட திட்ட அலுவலர் பத்மாவதி, பிரதான் நிறுவன சுகாதார திட்ட ஒருங்கிணைப்பாளர் கணேசன், கனகவள்ளி மற்றும் ஆதிநாராயணன், குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## பொது அறிவிப்பு

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மேற்கு வட்டம், பள்ளப்பட்டிகிராமாம், பேகம்பூர், கொட்டப்பட்டி போஸ்ட் நாயக்கர் தெரு, கதவு எண்:515/2-ல் வசித்து வரும் திரு.வீராச்சாமி அவர்களின் மகன் திரு.V.கிருஷ்ணமூர்த்தி (ஆதார் எண்:5735 1554 9548) ஆகிய நான் தெரியப்படுத்துவது என்னவென்றால் திண்டுக்கல் இணை 2-ம் சார்பதிவகத்தில் 1-ம் புத்தகம் கிரைய ஆவண எண் : 1814/2000-ன் படி எனக்கு கிரைய பத்திரமாக கிடைக்க பெற்ற அசல் ஆவணத்தை கடந்த 15.04.2025-ம் தேதி திண்டுக்கல் மாவட்டம் கலெக்டர் அலுவலகம் அருகே உள்ள ஜெராக்ஸ் கடையில் ஜெராக்ஸ் எடுக்க சென்றபோது தொலைத்துவிட்டேன். ஷை மூலப்பத்திரம் யாரிடமாவது கிடைக்கப்பெற்றால் மேற்கண்ட எனது முகவரிக்கு தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

S.J.SUDHAKAR, BA.LL.B
Advocate Dindigul.

# ஸ்கோடா ஆட்டோவின் புத்தம் புதிய 'ஸ்கோடா கோடியாக்' அறிமுகம்

**திருச்சி, ஏப்.22-**

ஸ்கோடா கைலாக் வரிசையின் வெற்றிகரமான அறிமுகத்திற்குப் பிறகு, ஸ்கோடா ஆட்டோ இந்தியா இப்போது ஸ்பெக்ட்ரமின் மறுமுனையில் ஒரு ஸ்கோடா கோடியாக் புதிய காரை அறிவிக்கிறது - ஸ்கோடா ஆட்டோ இந்தியாவின் பிராண்ட் இயக்குனர் பீட்டர் ஜனேபா கூறுகையில், புதிய கோடியாக் நகர சாலைகளுக்கான உச்சகட்ட ஆடம்பரத்தையும் கையாளுதலையும் வழங்குகிறது. மேலும் பல்துறை அனைத்து நிலப்பரப்பு திறன்களையும் கொண்டுள்ளது" ஸ்கோடா ஆட்டோவின் பிரீமியர் 4x4, 150 கேடபிள்யூ மற்றும் 320 என்எம் டார்க்கை உருவாக்கும் 2.0 டிஎஸ்ஐ எஞ்சின் மூலம் இயக்கப்படுகிறது. இந்த சக்தி மற்றும் டார்க், ஏழு-வேக டியூவல் கிளட்ச் டிஎஸ்ஜி தானியங்கி மூலம் இரண்டு அச்சுகளுக்கும் விநியோகிக்கப்படுகிறது. இது எம்க்யூபி 37 இவிஓ தளத்தை அடிப்படையாகக் கொண்டது மற்றும் ஸ்போர்ட்லைன் மற்றும் செலக்ஷன் எல் & கே வகைகளில் கிடைக்கிறது. இரண்டும் ஏழு இருக்கைகளை வழங்குகின்றன. இந்தியாவில் சந்தபதி சாம்பாஜி நகரில் உள்ள பிராண்டின் வசதியில் அசெம்பிள் செய்யப்பட்ட கோடியாக் 14.86 கிலோமீட்டர் எரிபொருள் செயல்திறனை வழங்குவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. புதிய தலைமுறை கோடியாக் அதன் முந்தைய காரை விட 59 மிமீ நீளமானது. இதன் நீளம் 4,758 மிமீ மற்றும் உயரம் 1,679 மிமீ. இதன் அகலம் 1,864 மிமீ மற்றும் வீல்பேஸ் 2,791 மிமீ. முழுமையாக நிரப்பப்பட்ட புதிய கோடியாக் தரையிலிருந்து 155 மிமீ உயரத்தில் நிற்கிறது. மூன்று வரிசை சொகுசு 4x4, முன்பு போலவே, அதன் பல்துறை உட்புறத்தில் நிறைய சாமான்களை எடுத்துச் செல்லக்கூடிய திறனை வழங்குகிறது. மூன்று இருக்கைகளையும் மேலே கொண்டு, கோடியாக் 281 லிட்டர் சாமான்களை எடுத்துச் செல்லக்கூடிய இடத்தை வழங்குகிறது.புதிய ஸ்கோடா கோடியாக், ஸ்போர்ட்லைன் வேரியண்டிற்கான முழு கருப்பு நிற ஸ்போர்ட்டி அலங்காரம் மற்றும் செலக்ஷன் எல்&கே டிரிமில் பிரீமியம் காக்னாக் லெதர் அப்ஹோல்ஸ்டரி என இரண்டு தனித்துவமான உட்புற கருப்பொருள்களுடன் அதன் சுத்திகரிக்கப்பட்ட ஆடம்பர பாரம்பரியத்தைத் தொடர்கிறது. கேபினின் தொழில்நுட்பம் மற்றும் வசதியை மேம்படுத்தும் வகையில், இது இப்போது 32.77-செ.மீ இன்ஃபோடெயின்மென்ட் சிஸ்டத்தையும், தொட்டுணரக்கூடிய ரோட்டரி கைப்பிடிகள் மற்றும் தொடுதிரைகளுடன் கூடிய மல்டி-ஃபங்க்ஷன் ஸ்மார்ட் டயல்களையும் கொண்டுள்ளது. மேம்பட்ட நியூமேடிக் மசாஜ் செயல்பாட்டை வழங்கும்.9 ஏர்பேக்குகள், ஒரு ஸ்லைடிங் பனோரமிக் சன்ரூஃப் மற்றும் 13 ஸ்பீக்கர்கள் மற்றும் ஒரு சப்-வூஃபர் கொண்ட 725 டபிள்யூ கேன்டன் சவுண்ட் சிஸ்டம் ஆகியவற்றுடன் பாதுகாப்பு முக்கியமானது. எல்இடி பீம் கிரிஸ்டலினியம் ஹெட்லேம்ப்கள் இப்போது ஒரு வெல்கம் எஃபெக்டைக் கொண்டுள்ளன.புத்தம் புதிய கோடியாக் ஆறு வண்ண விருப்பங்களில் கிடைக்கிறது: மூன் ஒயிட், மேஜிக் பிளாக், கிராஃபைட் கிரே, வெல்வெட் ரெட், ரேஸ் ப்ளூ, செலக்ஷன் எல் & கே பிரத்யேக பிராங்கஸ் கோல்டையும், ஸ்போர்ட்லைன் பிரத்யேக ஸ்டீல் கிரேயையும் பெறுகிறது. கோடியாக் உரிமையாளர்களுக்கு ஸ்கோடா ஃபிளாக்ஷிப் 5 ஆண்டுகள் /125,000 கிமீ நிலையான உத்தரவாதத்தை வழங்கும் - இதில் எது முன்னதாகவோ அது. இந்த சொகுசு 4x4 உடன் 10 ஆண்டு இலவச சாலையோர உதவியும் வழங்கப்படுகிறது. கோடியாக் ஸ்போர்ட்லைன் வேரியண்ட் ரூ.46,89000 எக்ஸ் ஷோரூம் விலையில் கிடைக்கும். கோடியாக் செலக்சன் எல்&கே வேரியண்ட் ரூ.48,69000 எக்ஸ் ஷோரூம் விலையில் கிடைக்கும்.

# டெலாய்ட் இந்தியா வாடிக்கையாளர்களுக்கு வணிகத்தில் எஸ்ஏபி மற்றும் ஏபிள்யூஎஸ் உடன் இணைந்து செலவு இல்லாத இடம்பெயர்வு திட்டத்தை அறிவிக்கிறது

**சென்னை, ஏப்.22-**

டெலாய்ட் இந்தியா, எஸ்ஏபிமற்றும் அமேசான் வெப் சர்வீஸ் (ஏடபிள்யூஎஸ்) உடன் இணைந்து, செலவு இல்லாத இடம்பெயர்வு திட்டத்தை அறிவித்துள்ளது. இத்திட்டமானது எஸ்ஏபியின் தற்போதைய ஆர்பி வாடிக்கையாளர்கள் எஸ்ஏபிS/4எச்ஏனஇ கிளவுட் உடன் ஏஐ-சார்ந்த RISE க்கு விரைவாக மாறுவதற்கு உதவும் வகையில் உருவாக்கப்பட்ட ஒரு கூட்டு முயற்சியாகும். இதன் மூலம் ஒரு நிலையான மற்றும் சிறந்த செயல்படுதிறன் உள்கட்டமைப்பான எஸ்ஏபிகிளவுட் ஆர்பி இன் மேம்பட்ட திறன்கள் மற்றும் நன்மைகளை வணிகங்கள் பெற முடிகிறது.டெலாய்ட் தெற்காசியாவின் பங்குதாரர் மற்றும் எஸ்ஏபிவழங்கல் தலைவர் ஆனந்த் ராஜகோபாலன் கூறுகையில், நிறுவன நவீனமயமாக்கல் ஒரு கட்டமைக்கப்பட்ட, சிறந்த மற்றும் மதிப்பு சார்ந்த செயல்முறையாக இருக்க வேண்டும். வணிக நோக்கங்களுக்கு ஏற்றாற்போல் தகவல் தொழில்நுட்ப மாற்றத்தை அமைப்பதன் மூலம், இந்த திட்டம் நிறுவனங்களின் இடம்பெயர்வு பயணம் குறைந்தபட்ச இடையூறுடன் மென்மையாக நடைபெற உதவுகிறது. டெலாய்ட், எஸ்ஏபிமற்றும் ஏடபிள்யூஎஸ் ஆகியவற்றின் ஒட்டுமொத்த நிபுணத்துவம் காரணமாக, நிறுவனங்கள் கிளவுட் ஆர்பிக்கு தடையின்றி மாற முடியும்.

இது குறித்து டெலாய்ட் தெற்காசிய விற்பனை மற்றும் கூட்டாண்மை தலைவர் வினய் பிரபாகர் கூறுகையில்,வணிகத்தில் மாற்றத்தை செய்வதற்கு ஒத்துழைப்பு மிகவும் முக்கியமாகும். எஸ்ஏபிமற்றும் ஏடபிள்யூஎஸ் உடனான இந்த கூட்டின் மூலம், இடம்பெயர்வை எளிதாக்குவதற்கும், செலவை குறைப்பதற்கும், புதுமையான அம்சங்களைத் துரிதப்படுத்துவதற்கும் நிறுவனங்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்குகிறோம் என்றார். மேலும் எஸ்ஏபி இந்திய துணைக்கண்டத்தின் தலைமை பங்குதாரர் அதிகாரி நிதிஷ் அகர்வால் கூறுகையில், புதுமைப்படுத்துவதற்கும், மிகவும் சிறப்பாக செயல்படுவதற்கும், அவர்களின் நீண்டகால முக்கியமான இலக்குகளை அடைவதற்கும் கிளவுட் தொழில்நுட்பத்தின் முழு திறனையும் பயன்படுத்தித் வாடிக்கையாளர்கள் தங்கள் டிஜிட்டல் பயணங்களை விரைவுபடுத்த நாங்கள் உதவிகிறோம் என்று கூறினார்.

Printed Published and Owned by S.Manimaran, Printed at Manimaran Printers at 9, Dindigul Main Road, vilangudi, Madurai - 625 018.
Phone: 0452- 2668165, 0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
RNI Regn. No.61494 /94

# மதுரையில் 2 நாட்களில் அடுத்தடுத்த கொலை: போலீஸ் அதிர்ச்சி

**மதுரை, ஏப். 22-**

மதுரையில் 2 நாளில் 3 கொலைகள் நடந்துள்ளது. அடுத்தடுத்து நடக்கும் சம்பவத்தால் போலீஸார் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

மதுரை உத்தங்குடி அருகிலுள்ள உலகனேரி ராஜிவ்காந்தி நகரைச் சேர்ந்தவர் ஆட்டோ ஓட்டுநராக இருந்தார். கடந்த 3 தினங்களுக்கு முன்பு இரவு ஆட்டோ ஓட்டிவிட்டு வீட்டிற்கு சென்றார். வீட்டு வாசல் அருகே நின்று கொண்டிருந்தபோது, மதுபோதையில் அங்கு வந்த ஒருவர் திடீரென அவருடன் தகராறு செய்தார். பின்னர் விறகு கட்டையால் தாக்கியுள்ளார். மயங்கி கீழே விழுந்த நிலையில் மீண்டும் கட்டையால் முகத்தை சிதைத்து கொலை செய்தார். அலறல் சத்தம் கேட்டு அக்கம், பக்கத்தினர் திரண்ட நிலையில் அங்கிருந்து தப்பி ஓடினார். இது குறித்து தகவல் அறிந்த மாட்டுத்தாவணி போலீஸார் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

உடலை மீட்டு மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பினர். விசாரணையில், மாடு வளர்ப்பதில் இருவருக்கும் இடையே ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக அவர் கொலை செய்யப்பட்டிருப்பது தெரிந்தது. தனிப்படை போலீஸார் கொலையாளியை தேடுகின்றனர். கொலையுண்ட அபினேஷ், கொலையாளி மீது சில வழக்குகள் நிலுவையில் இருப்பதாக போலீஸ் தரப்பில் கூறுகின்றனர். கடந்த 3 தினங்களுக்கு முன்பு காலை மதுரை ஆனையூர் பகுதியில் ஓய்வு பெற்ற தலைமைக் காவலர் கட்டிடத்தொழிலாளியை கொலை செய்தார். வாடிப்பட்டியில் சரவணபாண்டி என்பவரை 4 பேர் கொண்ட கும்பல் கொலை செய்தது. 2 நாளில் அடுத்தடுத்து 3 கொலைகள் நடந்திருப்பது போலீஸாருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# முதுகுளத்தூர் அருகே சட்டப்பணிகள் குழு சார்பாக மரக்கன்று நடும் விழா



**முதுகுளத்தூர், ஏப். 22-**

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் அருகே உள்ள செல்வநாயகபுரம் கிராமத்தில் மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி. மெகபுஅலிகான் மாவட்ட வருவாய் அலுவலர் கோவிந்தராஜுலு ஆகியோர் தலைமையில் மரக்கன்று நடப்பட்டன. மேலும் தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழுவின் உத்தரவுப்படி உத்தர கோசமங்கை பண்ணை குளம் வரை ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டன இதனை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் முதுகுளத்தூர் வட்ட சட்டப் பணிகள் குழு இணைந்து நடத்தினர். வழக்கறிஞர்கள் சங்க நீதிமன்ற பணியாளர்கள், மற்றும் நீதிமன்ற காவலர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சி தமிழ் தாய் வாழ்த்து உடன் தொடங்கப்பட்டு, நலத்திட்டங்கள் குறித்தும், மரங்கள் வளர்ப்பதால் கிடைக்க கூடிய நன்மைகள் பற்றியும், சட்ட உதவிகள் பற்றியும், நீதிபதி மற்றும் வழக்கறிஞர்களும் உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து நன்றி கூறினார்.

மேலும் மாலையில் நீதிமன்ற வளாகத்தில் மரக்கன்றுகள் நடுவிழா நடைபெற்றது. நிகழ்ச்சிகளில் கூடுதல் மாவட்ட நீதிபதி கவிதா தலைமை நீதித்துறை நடுவர் மோகன்ராம் சார்பு நீதிபதி அகிலாதேவி மாவட்ட சட்ட பணிகள் குழு செயலாளர் பிரசாத் மாவட்ட வன அதிகாரி காஞ்சனா சார் ஆட்சியர் அபிலாஷாகவுர் வழக்கறிஞர்கள் சங்க தலைவர் ராஜசேகர் தாசில்தார் கோகுல் நாத் வட்டார வளர்ச்சி அலுவலர் லெட்சுமி மற்றும் வழக்கறிஞர்கள், நீதிமன்ற பணியாளர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை சட்ட தன்னார்வலர் அடைக்கல மேரி செய்திருந்தார்.

**மரம் மனிதனின் உரம்**

# வத்தலக்குண்டு: பா.ஜ.க. மாநில தலைவருக்கு சிறப்பான வரவேற்பு



**வத்தலகுண்டு, ஏப். 22-**

வத்தலக்குண்டில் பா.ஜ.க. மாநில தலைவர் நைனார் நாகேந்திரனுக்கு சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டது.

பாரதிய ஜனதா கட்சியின் மாநிலத் தலைவர் நைனார் நாகேந்திரனுக்கு நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதி பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர் சேர்க்கை பொறுப்பாளரும் வத்தலக்குண்டு வடக்கு ஒன்றிய பார்வையாளருமான கொடைரோடு கருப்புசாமி மலர் மாலை அணிவித்து வரவேற்றார். உடன் வழக்கறிஞர் மாநிலத் தலைவர் வணங்காமுடி, தேசிய செயற்குழு உறுப்பினர் பழனிவேல் சாமி, திண்டுக்கல் மாவட்ட தலைவர் முத்துராமலிங்கம் மாவட்டச் செயலாளர் அழகுமணி மாவட்டத் துணைத் தலைவர் சந்திரசேகரன் மாவட்டச் செயலாளர் சபாபதி மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

**உயர்திரு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், மேலூர், (இருப்பு நரசிங்கம்பட்டி மேலூர்)**
**அ.தி.மு.எண்: 2248/2025/அ.3**

P.மதுரை வீரன்,
S/o. பெருமாள்,
சுட்டிப்பாறை,
பள்ளபட்டிகிராமம்,
மேலூர் வட்டம்,
மதுரை மாவட்டம்.
....... மனுதாரர்
//எதிரிடை //
உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்
மேலூர் வட்டம்
....... எதிர்மனுதாரர்

மனுதார் P. மதுரை வீரன் என்பவரின் தந்தை பெருமாள் 04.03.2013-ம் தேதியில் மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், பள்ளபட்டி கிராமம், சுட்டிபாறை கிராமவீட்டில் இறந்ததை அவரது இறப்பை பள்ளபட்டி கிராம பதிவேட்டில் பதிவு செய்யக்கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்து மனு சான்றிதழ் வழங்க கோரி உள்ளேன். இது குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இன்றிலிருந்து 15 தினங்களுக்குள் மேற்படி மேலூர் வருவாய் கோட்டாட்சியர் (இருப்பு நரசிங்கம்பட்டி மேலூர்) அலுவலகத்தில் தெரிவிக்கவும் என இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

P.மதுரைவீரன்
மனுதாரர்

**உயர்திரு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், மேலூர், (இருப்பு நரசிங்கம்பட்டி மேலூர்)**

சொ.சீனிவாசன்,
S/o.சொக்கலிங்கம் அம்பலம்,
பழையூர்பட்டி,
அம்பலகாரன்பட்டி கிராமம்,
மேலூர் வட்டம்,
மதுரை மாவட்டம்.
....... மனுதாரர்
//எதிரிடை //
உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்
மேலூர்
....... எதிர்மனுதாரர்

மனுதாரர் சொ.சீனிவாசன் என்பவரின் தாயார் விசாலாட்சி 02.09.1978-ம் தேதியில் மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், பழையூர்பட்டி கிராமம், அம்பலகாரன்பட்டி கிராம வீட்டில் இறந்ததை அவரது இறப்பை அம்பலகாரன்பட்டி கிராம பதிவேட்டில் பதிவு செய்யக்கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்து மனு சான்றிதழ் வழங்க கோரி உள்ளேன். இது குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இன்றிலிருந்து 15 தினங்களுக்குள் மேற்படி மேலூர் வருவாய் கோட்டாட்சியர் ( இருப்பு நரசிங்கம்பட்டி மேலூர்) அலுவலகத்தில் தெரிவிக்கவும் என இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

சொ.சீனிவாசன்
மனுதாரர்

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் மன்றம், திண்டுக்கல்**
**ந.க.எண்:- 3984/2024/ஆ6**
**இ.ப.வ.எண்- 147/2024/ஆ6**

பழனாத்தாள்,
க/பெ. பெரியசாமி,
39 மீனாட்சி வலசு
பட்டுத்துறை, கிளாஸ்குண்டல்,
மூலனூர்,
திருப்பூர் மாவட்டம்-638106
...மனுதாரர்
எதிர்
வருவாய் கோட்டாட்சியர் மற்றும்
உட்கோட்ட நடுவர் மன்றம்,
திண்டுக்கல்

அறிவிப்பு

மேற்படி வழக்கில் மனுதாரர் தந்தை பழனியப்ப கவுண்டர் என்பவர் 10-102013ம் தேதி கரிய கவுண்டன்பட்டி, நீலமலை கோட்டை கிராமம், நிலக்கோட்டை வட்டம் என்ற முகவரியில் இறந்துவிட்டதை வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் மன்றம், திண்டுக்கல் பதிவு செய்ய வேண்டி மனுதாக்கல் செய்துள்ளேன். மேற்படி இறப்பு சம்பந்தமாக யாருக்கேனும் ஆட்சேபிணை இருப்பின் எதிர்வரும் 30 தினங்களுக்குள் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் மன்றத்தில் நேரில் ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்து கொள்ளாலாம் தவறும் பட்சத்தில் ஒருதலைபட்சமாக பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்படும் என்பதை அறியவும்.

வருவாய் கோட்டாட்சியர்
திண்டுக்கல்

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் மன்றம், திண்டுக்கல்**
**ந.க.எண்:- 685/2025/ஆ6**
**இ.ப.வ.எண்- 251/2024/ஆ6**

குழந்தைவேல்,
த/பெ.கல்யாணசுந்தரராஜ்,
மதுரை ரோடு, செம்பட்டி,
பச்சமலையான் கோட்டை கிராமம்,
நிலக்கோட்டை வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்.
...மனுதாரர்
எதிர்
வருவாய் கோட்டாட்சியர் மற்றும்
உட்கோட்ட நடுவர் மன்றம்,
திண்டுக்கல்

அறிவிப்பு

மேற்படி வழக்கில் மனுதாரர் தம்பி ரவி என்பவர் கடந்த 25-10-2005 ம் தேதி ஷை முகவரியில் இறந்துவிட்டதை வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் மன்றம், திண்டுக்கல் பதிவு செய்ய வேண்டி மனுதாக்கல் செய்துள்ளேன். மேற்படி இறப்பு சம்பந்தமாக யாருக்கேனும் ஆட்சேபிணை இருப்பின் எதிர்வரும் 30 தினங்களுக்குள் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் மன்றத்தில் நேரில் ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்து கொள்ளாலாம் தவறும் பட்சத்தில் ஒருதலைபட்சமாக பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்படும் என்பதை அறியவும்.

வருவாய் கோட்டாட்சியர்
திண்டுக்கல்

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் மன்றம், திண்டுக்கல்**
**ந.க.எண்:- 121/2025/ஆ6**
**இ.ப.வ.எண்- 03/2025/ஆ6**

மாரியப்பன், த/பெ. கந்தபிள்ளை,
3/14, வடக்கு தெரு,
பூசாரிபட்டி, மல்லம்பட்டி கிராமம்
நிலக்கோட்டை வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்.
...மனுதாரர்
எதிர்
வருவாய் கோட்டாட்சியர் மற்றும்
உட்கோட்ட நடுவர் மன்றம்,
திண்டுக்கல்

அறிவிப்பு

மேற்படி வழக்கில் மனுதாரர் தந்தை கந்த பிள்ளை என்பவர் 16-05-1982 ம் தேதி என்ற முகவரியில் இறந்துவிட்டதை வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் மன்றம், திண்டுக்கல் பதிவு செய்ய வேண்டி மனுதாக்கல் செய்துள்ளேன். மேற்படி இறப்பு சம்பந்தமாக யாருக்கேனும் ஆட்சேபிணை இருப்பின் எதிர்வரும் 30 தினங்களுக்குள் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் மன்றத்தில் நேரில் ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்து கொள்ளாலாம் தவறும் பட்சத்தில் ஒருதலைபட்சமாக பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்படும் என்பதை அறியவும்.

வருவாய் கோட்டாட்சியர்
திண்டுக்கல்

**உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், இராமநாதபுரம்**
**ந.க.எண்.அ7/8553/2024**

சுபைர் அலி, த/பெ.அகமது பசீர்,
6/31, வடக்குத்தெரு,
சக்கரக்கோட்டை,
இராமநாதபுரம் வட்டம் - மாவட்டம்.
.... மனுதார்
-எதிர்-
வட்டாட்சியர்,
பிறப்பு இறப்பு பதிவாளர்,
இராமநாதபுரம்.
..... எதிர்மனுதார்.

அறிவிப்பு

எனது தந்தை அகமது பசீர் என்பவர் மேற்கண்ட முகவரியில் உள்ள வீட்டில் வைத்து கடந்த 10.08.2006 அன்று இறந்தார். எனது தந்தையின் இறப்பை அறியாமை காரணமாக மேற்கண்ட எதிர்மனுதாரர் பிறப்பு இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய விடுபட்டுபோனது. எனவே எனது தந்தை அகமது பசீர் இறப்பை எதிர்மனுதார் அலுவலக பிறப்பு இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய உத்தர விடக்கோரி இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் மேற்படி அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

சுபைர் அலி,
மனுதாரர்.

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் மன்றம், திண்டுக்கல்**
**ந.க.எண்:- 3003/2025/ஆ6**
**இ.ப.வ.எண்- 117/2024/ஆ6**

ஸ்டீபன் சேசுராஜ்,
த/பெ. கஸ்பர் சேசுராஜ்,
க.எண்.102, 2 வது தெரு,
மேட்டுப்பட்டி, திண்டுக்கல் வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்.
...மனுதாரர்
எதிர்
வருவாய் கோட்டாட்சியர் மற்றும்
உட்கோட்ட நடுவர் மன்றம்,
திண்டுக்கல்

அறிவிப்பு

மேற்படி வழக்கில் மனுதாரர் தந்தை வழி பாட்டி அன்னம்மாள் என்பவர் கடந்த 12-04-1996 ம் தேதி அம்பாத்துரை கிராமம் என்ற முகவரியில் இறந்துவிட்டதை வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் மன்றம், திண்டுக்கல் பதிவு செய்ய வேண்டி மனுதாக்கல் செய்துள்ளேன். மேற்படி இறப்பு சம்பந்தமாக யாருக்கேனும் ஆட்சேபிணை இருப்பின் எதிர்வரும் 30 தினங்களுக்குள் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் மன்றத்தில் நேரில் ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்து கொள்ளாலாம் தவறும் பட்சத்தில் ஒருதலைபட்சமாக பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்படும் என்பதை அறியவும்.

வருவாய் கோட்டாட்சியர்
திண்டுக்கல்

**மாண்புமிகு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம். திருமங்கலம்.**
**ந.க.எண்.4977/2024/ஆ2**

R.ராஜாமணி, த/பெ.லேட்.ராமன்
4/174,கோட்டைத்தெரு
கூத்தியார்குண்டு, நிலையூர் பிட்-1
திருப்பரங்குன்றம் தாலுகா
மதுரை மாவட்டம்.
------ மனுதாரர்
--- எதிர் ---
உயர்திரு வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய் கோட்டாட்சியர், அலுவலகம்
திருமங்கலம், மதுரை மாவட்டம்.
------------- எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாராகிய நான், எனது உடன் பிறந்த சகோதரர் R.ஆறுமுகம், த/பெ.லேட்.ராமன் என்பவர் கடந்த 01.01.2007-ம் தேதி திருப்பரங்குன்றம் வட்டம், நிலையூர் பிட்-1, கூத்தியார்குண்டு கிராமத்தில் உள்ள வீட்டில் வைத்து இறந்ததை பதிவு செய்து உத்தர விட வேண்டி திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீதான விசாரணைக்கான வாய்தா வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திருமங்கலம் முன்பாக நடைபெறுகிறது.இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30தினங்களுக்குள் காலை 11.00மணிக்கு மேற்படி கனம் உட்கோட்ட நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.

மனுதாரர்
R.ராஜாமணி
கூத்தியார்குண்டு.

### வீரர்களின் ஒப்பந்த விவரம் வெளியீடு:

# ஸ்ரேயஸ் ஐயர், இஷான் கிஷன் சேர்ப்பு




**மும்பை, ஏப். 22-**

இந்திய ஆடவர் கிரிக்கெட் அணிக்காக விளையாடும் வீரர்களின் ஆண்டு ஒப்பந்த விவரத்தை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பி.சி.சி.ஐ.) வெளியிட்டுள்ளது. இதில் கடந்த முறை ஒப்பந்தத்தில் இருந்து நீக்கப்பட்ட ஸ்ரேயஸ் ஐயர் மற்றும் இஷான் கிஷன் ஆகியோர் இந்த முறை சேர்க்கப்பட்டுள்ளனர்.

**ரோஹித், கோலிக்கு ஏ+...**

ஆண்டுதோறும் இந்திய அணிக்காக விளையாடும் வீரர்களின் ஒப்பந்தம் சார்ந்த விவரங்களை பி.சி.சி.ஐ. புதுப்பிக்கும். அந்த வகையில் 2023 - 2024 சீசனுக்கான வீரர்களின் ஒப்பந்த விவரம் தற்போது வெளியாகியுள்ளது. இதில் கடந்த ஆண்டு டி20 உலகக் கோப்பை வென்ற கையோடு சர்வதேச டி20 கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற ரோஹித் சர்மா, விராட் கோலி மற்றும் ரவீந்திர ஜடேஜா ஆகியோர் 'கிரேடு ஏ+' பிரிவில் இடம் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஒப்பந்த விவரம்...**

கிரேடு ஏ+ (4 வீரர்கள்) - ரோகித் சர்மா, விராட் கோலி, ஜஸ்ப்ரீத் பும்ரா, ரவீந்திர ஜடேஜா

கிரேடு ஏ (6 வீரர்கள்) - முகமது சிராஜ், கே.எல்.ராகுல், ஷுப்மன் கில், ஹர்திக் பாண்டியா, முகமது ஷமி, ரிஷப் பந்த்

கிரேடு பி (5 வீரர்கள்) - சூர்யகுமார் யாதவ், குல்தீப் யாதவ், அக்சர் படேல், யஷஸ்வி ஜெய்ஸ்வால், ஸ்ரேயஸ் ஐயர்

கிரேடு சி (19 வீரர்கள்) - ரிங்கு சிங், திலக் வர்மா, ருதுராஜ் கெய்க்வாட், ஷிவம் துபே, ரவி பிஷ்னாய், வாஷிங்டன் சுந்தர், முகேஷ் குமார், சஞ்சு சாம்சன், அர்ஷ்தீப் சிங், பிரசித் கிருஷ்ணா, ரஜத் பட்டிதார், துருவ் ஜுரேல், சர்பராஸ் கான், நிதிஷ் குமார் ரெட்டி, இஷான் கிஷன், அபிஷேக் சர்மா, ஆகாஷ் தீப், வருண் சக்ரவர்த்தி, ஹர்ஷித் ராணா

**தாக்குர் விடுவிப்பு...**

இந்த முறை வீரர்களுக்கான ஒப்பந்தத்தில் இருந்து ஜிதேஷ் சர்மா மற்றும் ஷர்துல் தாக்குர் விடுவிக்கப்பட்டுள்ளனர். அடுத்த சில மாதங்களில் இந்திய அணி இங்கிலாந்துக்கு பயணம் மேற்கொண்டு டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் விளையாட உள்ளது. இந்த நிலையில் தான் தாக்குர் வீரர்களுக்கான ஒப்பந்தத்தில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

**மீண்டும் ஸ்ரேயஸ் ஐயர்...**

கடந்த சில மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற ஐசிசி சாம்பியன்ஸ் டிராபி தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இருந்தார் ஸ்ரேயஸ். அதன் மூலம் அவர் இப்போது வீரர்களுக்கான ஒப்பந்தத்தில் மீண்டும் இடம்பெற்றுள்ளார். உள்ளூர் கிரிக்கெட்டிலும் சிறப்பான ஆட்டத்தை அவர் வெளிப்படுத்தினார். இது தவிர இந்த காலகட்டத்தில் குறைந்தது 3 டெஸ்ட் போட்டிகள் அல்லது 8 ஒருநாள் போட்டிகள் அல்லது 10 டி20 போட்டிகளில் விளையாடும் வீரர்கள் 'கிரேடு சி' ஒப்பந்தத்தில் சேர்க்கப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாக். கிரிக்கெட் வாரியம் மறுப்பு

செப்டம்பர் 29 முதல் அக்டோபர் 26 வரை இந்தியாவில் ஐ.சி.சி. மகளிர் ஒருநாள் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் நடைபெறுகிறது. இந்நிலையில் இந்தியாவில் நடைபெறும் ஐ.சி.சி. ஒருநாள் மகளிர் உலகக் கோப்பை தொடரில் பாகிஸ்தான் அணி விளையாட இந்தியாவுக்கு பயணிக்க மாட்டோம் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத் தலைவர் மோசின் நக்வி அறிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அணி உலகக் கோப்பைக்குத் தகுதி பெற்ற விதம் குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் வாரிய சேர்மன் நக்வி பாராட்டுதல்களைத் தெரிவித்தார். உலகக் கோப்பைத் தகுதிச் சுற்றுப் போட்டிகள் லாகூரில் நடைபெற்ற போது பாகிஸ்தான் மகளிர் அணி தகுதிச்சுற்றில் 5 போட்டிகளிலும் அபார வெற்றி பெற்றது. பாகிஸ்தான் மகளிர் அணி அயர்லாந்து, ஸ்காட்லாந்து, மே.இ.தீவுகள், தாய்லாந்து, வங்கதேச அணிகளை வென்று ஐ.சி.சி. உலகக் கோப்பைக்குத் தகுதி பெற்றது. இந்தியா, இங்கிலாந்து, நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா, இலங்கை ஆகிய அணிகள் ஏற்கெனவே தகுதி பெற்று விட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆட்ட நாயகன் விருது: கோலி கேள்வி

ஐ.பி.எல். தொடரில் முல்லான்பூரில் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் - ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற பெங்களூரு அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் பேட்டிங் செய்த பஞ்சாப் அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 157 ரன்கள் எடுத்தது. இதனையடுத்து களமிறங்கிய பெங்களூரு அணி 18.5 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 159 ரன்கள் அடித்து 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. அதிகபட்சமாக விராட் கோலி 73 ரன்களும், படிக்கல் 61 ரன்களும் அடித்தனர். ஆட்டநாயகன் விருது விராட் கோலிக்கு வழங்கப்பட்டது.

இந்நிலையில் ஆட்ட நாயகன் விருது படிக்கலுக்கு செல்ல வேண்டும் என்று விராட் கோலி கூறியுள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது:- உண்மையிலேயே இந்த வெற்றியின் மூலம் கிடைத்துள்ள இரண்டு புள்ளிகள் மிகப்பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தும் என்று நம்புகிறேன். இந்த போட்டியில் தேவ்தத் படிக்கல் மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இருந்தார். எனவே என்னை பொறுத்தவரை இந்த ஆட்டநாயகன் விருது அவருக்கு தான் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். அதை ஏன் எனக்கு கொடுத்தார்கள்? என்று தெரியவில்லை. என்று விராட் கோலி கூறினார்.

## லிவிங்ஸ்டன் குறித்து சேவாக்

10 அணிகள் பங்கேற்றுள்ள 18-வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் பல வெளிநாட்டு வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். இருப்பினும் முன்னணி ஆல்ரவுண்டர்களான பஞ்சாப் அணியில் இடம்பெற்றுள்ள கிளென் மேக்ஸ்வெல் (ஆஸ்திரேலியா) மற்றும் பெங்களூரு அணியில் இடம்பெற்றுள்ள லியாம் லிவிங்ஸ்டன் (இங்கிலாந்து) ஆகியோர் சிறப்பான செயல்பாட்டை வெளிப்படுத்த முடியாமல் தடுமாறி வருகின்றனர். .

இந்நிலையில் இது குறித்து பேசிய வீரேந்திர சேவாக் கூறுகையில், "மேக்ஸ்வெல் மற்றும் லிவிங்ஸ்டனிடம் வெற்றிக்கான பசி நீங்கிவிட்டது போல் உணர்கிறேன். அவர்கள் இங்கே (இந்தியா) விடுமுறையை கழிக்க வருகிறார்கள். அவர்கள் வருகிறார்கள், வேடிக்கை பார்க்கிறார்கள், வெளியேறுகிறார்கள். அணியின் வெற்றிக்காக போராடுவதற்கான விருப்பம் அவர்களிடம் தெரியவில்லை. தங்களுடைய அணிக்காக வெற்றியை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் அவர்கள் இந்தியாவுக்கு வரவில்லை" என்று கூறினார்.

### அமலாக்கத்துறையின் டாஸ்மாக் சோதனையை எதிர்த்து

# தமிழக அரசு தொடர்ந்த வழக்கில் நாளை தீர்ப்பு

**சென்னை, ஏப். 22-**

டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் அமலாக்கத்துறை நடத்திய சோதனையை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் வரும் 23-ம் தேதி தீர்ப்பளிக்கப்படும் என சென்னை உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் கடந்த மாதம் 6-ம் தேதி முதல் 8-ம் தேதி வரை அமலாக்கத்துறை நடத்திய சோதனையை சட்டவிரோதமானது என அறிவிக்க கோரி டாஸ்மாக் நிர்வாக இயக்குநர் தாக்கல் செய்த வழக்கின் விசாரணை, நீதிபதிகள் எஸ்.எம்.சுப்ரமணியம், கே.ராஜசேகர் ஆகியோர் அடங்கிய அமர்வில் நடைபெற்றது. அப்போது டாஸ்மாக் சார்பில், மூத்த வழக்கறிஞர் விக்ரம் சவுத்ரி மற்றும் தமிழக அரசு சார்பில் அரசு தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமன் உள்ளிட்டோர் ஆஜராகி வாதிட்டனர். இந்த வாதத்தின்போது, "அமலாக்கத் துறை எப்போதும் வெளிப்படையாக இருந்ததில்லை. வெளிப்படையாக இருப்பதாக ஒரு பிம்பத்தை உருவாக்கி அதன் பின்னால் அமலாக்கத்துறை ஒளிந்து கொண்டுள்ளது.

எந்த நம்பிக்கையின் அடிப்படையில் குற்றம் நடந்துள்ளதாக அமலாக்கத் துறை கருதுகிறது? எதற்காக சோதனை செய்கிறோம்? என்பதை அமலாக்கத்துறை தெரிவிக்க வேண்டும். அமலாக்கத் துறையின் நடவடிக்கையால் நேரடியாக டாஸ்மாக்கின் நற்பெயருக்கும், மறைமுகமாக அரசின் நற்பெயருக்கும் களங்கம் ஏற்பட்டுள்ளது. 2007-ம் ஆண்டு முதல் 2021 வரை ஆண்டு வரை முறைகேடு கூறப்படும் நிலையில், தற்போது தான் ஞானம் வந்தது போல விசாரணை நடத்துவது ஏன்? .இன்றைக்கு டாஸ்மாக் குறி வைக்கப்படுகிறது. நாளை ஒவ்வொரு துறையாக குறி வைக்கப்படும். விசாரணை என்ற பெயரில் பெண் அதிகாரிகளை அடைத்து வைத்து நள்ளிரவில் வீட்டுக்கு அனுப்பியது சரியான நடத்தையா?" என அரசுத் தரப்பில் வாதிடப்பட்டிருந்தது.

அமலாக்கத் துறை சார்பில் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் எஸ்.வி. ராஜூ, "மாநில காவல்துறை மற்றும் லஞ்ச ஒழிப்புத்துறை பதிவு செய்த வழக்குகளின் அடிப்படையிலேயே அமலாக்கத் துறை வழக்குப் பதிவு செய்தது. முறைகேடு நடந்திருப்பதாக கருதினால் அமலாக்கத் துறை விசாரணை நடத்தலாம். டாஸ்மாக் ஊழியர்கள் லஞ்சம் வாங்கியதாக முதல் தகவல் அறிக்கையில் உள்ளது. சிலர் சட்டவிரோத பணப் பரிமாற்றத்தில் ஈடுபட்டதாக தகவல் கிடைத்ததால் சோதனை நடத்தப்பட்டது. டாஸ்மாக் முறைகேடு மூலம், ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் சட்டவிரோத பணப் பரிமாற்றம் நடந்தது சோதனையில் தெரியவந்துள்ளது." என்று வாதிட்டிருந்தார்.

தொடர்ந்து இந்த வழக்கில் இறுதி விசாரணை திங்கள்கிழமை நடைபெற்றது. டாஸ்மாக் தரப்பில் மூத்த வழக்கறிஞர் விகாஸ்சிங் நேற்று தனது பதில் வாதத்தில், "அமலாக்கத் துறைக்கு சோதனை நடத்த அதிகார வரம்பு இல்லை. மிகப்பெரிய ஊழல் நடைபெற்றதாக அமலாக்கத் துறை எவ்வாறு சொல்ல முடியும்?" என்று கேள்வி எழுப்பினார். தொடர்ந்து அனைத்து தரப்பு வாதங்களும் நிறைவடைந்த நிலையில், வரும் 23-ம் தேதி (நாளை), இவ்வழக்கில் தீர்ப்பளிக்கப்படும் என்று நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

# கோலி சாதனைகளை முறியடித்த ரோகித்

**மும்பை, ஏப். 22-**

சி.எஸ்.கே.வுக்கு எதிரான போட்டியில் கோலி, தவான் சாதனைகளை ரோகித் சர்மா முறியடித்தார்.

**ரோகித் சர்மா 77...**

ஐ.பி.எல். தொடரில் நடைபெற்ற ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் மற்றும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இதில் டாஸ் வென்ற மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது. அதன்படி முதலில் பேட்டிங் செய்த சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 176 ரன்கள் எடுத்தது. அதன்பின் விளையாடிய மும்பை இந்தியன்ஸ் அணி 15.4 ஓவர்களில் இலக்கை எட்டியதுடன் 9 விக்கெட் வித்தியாசத்தில் சென்னை சூப்பர் கிங்ஸை வீழ்த்தி வெற்றி பெற்றது. ரோகித் சர்மா 77 ரன்களுடனும், சூர்யகுமார் யாதவ் 68 ரன்களுடனும் கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**அதிக ஆட்டநாயகன்...**

இந்த வெற்றியின் மூலம் ஐ.பி.எல். தொடரில் சென்னை அணிக்கு எதிராக அதிக வெற்றிகளை பதிவு செய்த பட்டியலில் மும்பை அணி 4-வது இடத்தை பிடித்துள்ளது. இப்போட்டியில் மும்பை அணியின் வெற்றிக்கு காரணமாக அமைந்த ரோகித் சர்மா ஆட்டநாயகன் விருதை வென்றார். அத்துடன் சில சாதனைகளையும் படைத்து அசத்தியுள்ளார். ஆட்டநாயகன் விருதை வென்றதன் மூலம் ஐ.பி.எல். தொடர் வரலாற்றில் அதிக ஆட்டநாயகன் விருதை வென்ற இந்திய வீரர் என்ற சாதனையை ரோகித் சர்மா படைத்துள்ளார்.

**விராட்கோலியைமுந்தி...**

முன்னதாக விராட் கோலி மற்றும் ரோகித் சர்மா இருவரும் தலா 19 முறை ஆட்டநாயகன் விருதை வென்றிருந்த நிலையில் தற்போது ரோகித் சர்மா 20-வது முறை இந்த விருதை வென்று சாதனை படைத்துள்ளார். அதேசமயம் ஒட்டுமொத்தமாக இந்த பட்டியலில் ஏபி டி வில்லியர்ஸ் முதலிடத்தில் உள்ளார். இப்போட்டியில் ரோகித் சர்மா 76 ரன்களை எடுத்ததன் மூலம், ஐ.பி.எல். தொடர் வரலாற்றில் அதிக ரன்களை எடுத்த 2-வது வீரர் எனும் சாதனையை படைத்துள்ளார்.

# பிளே-ஆப் சுற்றுக்கு செல்லுமா சி.எஸ்.கே.?

**சென்னை, ஏப். 22-**

எஞ்சிய 6 ஆட்டங்களிலும் வெற்றி பெற்றால் மட்டுமே பிளே-ஆப் சுற்றுக்கு தகுதி பெற முடியும் என்ற இக்கட்டான நிலைக்கு சி.எஸ்.கே. தள்ளப்பட்டுள்ளது.

**தோல்வி பாதையில்...**

சென்னை சூப்பர் கிங்ஸ் தனது 8-வது ஆட்டத்தில் மும்பை இந்தியன்சை எதிர்கொண்டது. இப்போட்டியில் முதலில் பேட்டிங் செய்த சென்னை சூப்பர் கிங்கஸ் அணி 20 ஓவர் முடிவில், 5 விக்கெட் வித்தியாசத்தில் 176 ரன்களை சி.எஸ்.கே. அணி எடுத்துள்ளது. இதில் அதிகபட்சமாக ஜடேஜா 53 ரன்கள், ஷிவம் துபே 50 ரன்கள், ஆயுஷ் மாத்ரே 32 ரன்களும் எடுத்தனர். இதையடுத்து, 177 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மும்பை இந்தியன்ஸ் அணி 15.4 ஓவரில் 177 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது.

**கடைசி இடத்தில்...**

இந்த தோல்வியினால் புள்ளிப்பட்டியலில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி கடைசி இடத்திலேயே நீடிக்கிறது. நடப்பு ஐ.பி.எல். தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி பங்கேற்ற 8 போட்டிகளில் 2 வெற்றி, 6 தோல்வி பெற்றுள்ளது. புள்ளிப்பட்டியலில் கடைசி இடத்தில் உள்ள சென்னை சூப்பர் கிங்ஸ் அணி (4 புள்ளி), எஞ்சிய 6 ஆட்டங்களிலும் வெற்றி பெற்றால் (16 புள்ளி) மட்டுமே பிளே-ஆப் சுற்றுக்கு தகுதி பெற முடியும். ஒரு வேளை 5ல் மட்டும் வென்றால் (14), மற்ற அணிகளின் முடிவுக்காக காத்திருக்க வேண்டும். சென்னை அணி அடுத்த ஆட்டத்தில் ஐதராபாத் அணியுடன் வரும் 25ம் தேதி மோதுகிறது.

## புள்ளிகள் பட்டியல்

| வரிசை | அணிகள் | ஆட்டங்கள் | வெற்றி | தோல்வி | புள்ளிகள் | நெட் ரன்ரேட் |
|---|---|---|---|---|---|---|
| 1 | குஜராத் | 7 | 5 | 2 | 10 | +0.984 |
| 2 | டெல்லி | 7 | 5 | 2 | 10 | +0.589 |
| 3 | பெங்களூரு | 8 | 5 | 3 | 10 | +0.472 |
| 4 | பஞ்சாப் | 8 | 5 | 3 | 10 | +0.177 |
| 5 | லக்னோ | 8 | 5 | 3 | 10 | +0.088 |
| 6 | மும்பை | 8 | 4 | 4 | 8 | +0.483 |
| 7 | கொல்கத்தா | 7 | 3 | 4 | 6 | +0.547 |
| 8 | ராஜஸ்தான் | 8 | 2 | 6 | 4 | -0.633 |
| 9 | ஐதராபாத் | 7 | 2 | 5 | 4 | -1.217 |
| 10 | சென்னை | 8 | 2 | 6 | 4 | -1.392 |

## இன்றைய ஐ.பி.எல் (40-வது லீக்)



**அணிகள் - லக்னோ vs டெல்லி**

**இடம் - லக்னோ மணி - இரவு 7.30**

### பிரபுவின் கோரிக்கை ஏற்பு:

# நடிகர் சிவாஜி கணேசனின் வீட்டை ஜப்தி செய்யும் உத்தரவை ரத்து செய்தது ஐகோர்ட்

**சென்னை, ஏப். 22-**

நடிகர் சிவாஜி கணேசன் வீட்டை ஜப்தி செய்யுமாறு சென்னை உயர் நீதிமன்றம் கடந்த மாதம் உத்தரவிட்டது. சிவாஜியின் பேரனும், ராம்குமாரின் மகனுமான துஷ்யந்த், அவரது மனைவி அபிராமி ஆகியோருக்குச் சொந்தமான ஈசன் புரொடக்சன்ஸ் நிறுவனம் சார்பில் 'ஜகஜால கில்லாடி' என்ற படத்தைத் தயாரித்தனர். பட தயாரிப்புக்காக தனபாக்கியம் எண்டர்பிரைசஸ் நிறுவனத்திடம் ரூ. 3,74,75,000 கடன் வாங்கியிருந்தனர்.

வாங்கியக் கடனைத் திருப்பிச் செலுத்தாததால், வட்டியுடன் சேர்த்து ரூ. 9 கோடியே 39 லட்சத்தைச் செலுத்த ஏதுவாக 'ஜகஜால கில்லாடி' படத்தின் அனைத்து உரிமைகளையும், தனபாக்கியம் எண்டர்பிரைசஸ் நிறுவன நிர்வாக இயக்குநரிடம் ஒப்படைக்கும்படி மத்தியஸ்தர் உத்தரவிட்டார்.

ஆனால், படத்தின் உரிமைகளை வழங்காததையடுத்து மத்தியஸ்தர் தீர்ப்பை அமல்படுத்தும் வகையில், சிவாஜி கணேசன் வீட்டை ஜப்தி செய்து, பொது ஏலம் விட, தனபாக்கியம் எண்டர்பிரைசஸ் நிறுவனம் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி அப்துல் குத்தூஸ், போதுமான அவகாசம் வழங்கியும் பதில் மனு தாக்கல் செய்யாததால், நடிகர் சிவாஜி கணேசனின் வீட்டை ஜப்தி செய்ய உத்தரவிட்டார்.

இதனிடையே, சிவாஜி கணேசனின் வீட்டில் தனக்கு எந்த பங்கும் இல்லை, தனது சகோதரர் நடிகர் பிரபு பெயரில் அந்த வீடு உள்ளதால் ஜப்தி உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று ராம்குமார் தரப்பில் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த நிலையில், நேற்று தீர்ப்பு வழங்கிய நீதிபதி, வில்லங்கப் பதிவில் நீதிமன்ற ஜப்தி உத்தரவை நீக்க பதிவுத்துறைக்கு உத்தரவிட்டார். மேலும், பிரபுதான் அன்னை இல்லத்தின் முழு உரிமையாளர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### கர்நாடகா, தெலுங்கானா ஐகோர்ட் நீதிபதிகளை

# சென்னை உயர்நீதிமன்றத்திற்கு மாற்ற கொலிஜியம் பரிந்துரை

**சென்னை, ஏப். 22-**

ஹேமந்த் சந்தன்கவுடரை கர்நாடகாவில் இருந்து சென்னை உயர்நீதிமன்றத்திற்கு மாற்ற பரிந்துரை. ஹேமந்த் சந்தன்கவுடரை கர்நாடகாவில் இருந்து சென்னை உயர்நீதிமன்றத்திற்கு மாற்ற பரிந்துரை.

உச்சநீதிமன்றம் கொலிஜியம் கர்நாடகா, தெலுங்கானா, ஆந்திரா உயர்நீதிமன்றத்தின் ஏழு நீதிபதிகளை மற்ற மாநில உயர்நீதிமன்றங்களுக்கு மாற்ற பரிந்துரை செய்துள்ளது. தெலுங்கானா மற்றும் கர்நாடகா மாநில உயர்நீதிமன்ற நீதிபதிகள் இருவரை சென்னை உயர்நீதிமன்றத்திற்கு மாற்ற பரிந்துரை செய்துள்ளது. ஹேமந்த் சந்தன்கவுடரை கர்நாடகாவில் இருந்து சென்னை உயர்நீதிமன்றத்திற்கு மாற்ற பரிந்துரை செய்தது. கிருஷ்ணன் நடராஜன் கர்நாடகாவில் இருந்து கேரளா மாநில உயர்நீதிமன்றத்திற்கு மாற்ற பரிந்துரை செய்தது.

நெரனஹல்லி ஸ்ரீனிவாசன் சஞ்சய் கவுடா கர்நாடகாவிலர் இருந்து குஜராத் நீதிமன்றத்திற்கு மாற்ற பரிந்துரை செய்தது. பெருகு ஸ்ரீ சுதா தெலுங்கானா நீதிமன்றத்தில் இருந்து கர்நாடகா நீதிமன்றத்திற்கு மாற்ற பரிந்தரை செய்தது. ககோஜு சுரேந்தனர் என்ற கே. சுரேந்தர் தெலுங்கானாவில் இருந்து சென்னை உயர்நீதிமன்றத்தில் மாற்ற பரிந்துரை செய்தது. டாக்டர் கும்பஜடாலா மன்மத ராவ் ஆந்திராவில் இருந்து கர்நாடகா உயர்நீதிமன்றத்திற்கு மாற்ற பரிந்துரைத்தது. தீக்சிட் கிருஷ்ணா ஸ்ரீபாட் கர்நாடகாவில் இருந்து ஒடிசா உயர்நீதிமன்றத்திற்க மாற்ற பரிந்துரைத்தது.

# அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியை பார்த்து முதல்வருக்கு பயம்: எடப்பாடி பழனிசாமி

**சென்னை, ஏப். 22-**

அ.தி.மு.க.-பா.ஜ.க. கூட்டணியை பார்த்து முதல்வருக்கு பயம் வந்துவிட்டது என எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டசபையில் நேற்று முதல்வர் முக.ஸ்டாலின் மற்றும் எதிர்க்கட்சித்தலைவர் எடப்பாடி பழனிசாமி இருவரும் காரசார வாதங்களை முன்வைத்தனர்.

"தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில்தான் நீட் கொண்டு வரப்பட்டது. பிள்ளையார் சுழி போட்டது நீங்கள் தான்" என்று முதல்வரை நோக்கி தலைவர் பழனிசாமி கூற, அதற்கு "நீட் சிக்கலை போக்க அ.தி.மு.க.வுக்கு இப்போதும் வாய்ப்பு உள்ளது; நீட் தேர்வை ரத்து செய்தால்தான் கூட்டணியில் இருப்போம் என சொல்லுமா அ.தி.மு.க.?" என்று எடப்பாடி பழனிசாமியை நோக்கி கேள்வியெழுப்பினார்.

இதன் பின்னர் சட்டசபை வளாகத்தில் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது;

"2010 டிசம்பரில்தால் நீட் தேர்வுக்கான ஆரம்பப் புள்ளி தொடங்கியது. தி.மு.க.-காங்கிரஸ் கொண்டு வந்த நீட் தேர்வை ரத்து செய்ய அ.தி.மு.க. போராடியது. நீட் தேர்வு பற்றி பலமுறை விளக்கம் கொடுத்துவிட்டேன். திருவிழாவில் மோர் உள்ளிட்டவை குடித்த மக்களுக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டது என அமைச்சர் கூறுவதை ஏற்க முடியாது. சித்திரை திருவிழாவிற்கு உறையூர் பகுதி மக்கள் மட்டும் தான் சென்றார்களா? உறையூர் பகுதி மக்களுக்கு மட்டும் உடல்நலம் பாதிக்கப்பட்டது ஏன்?

தி.மு.க.-பா.ஜ.க. கூட்டணி சேர்ந்தபோது நாங்கள் கூட்டணி சேர்வதில் மட்டும் என்ன தவறு? அ.தி.மு.க. யாருடன் வேண்டுமானாலும் கூட்டணி வைக்கும். நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள்? அ.தி.மு.க.-பா.ஜ.க. கூட்டணியை பார்த்து முதல்-அமைச்சருக்கு பயம் வந்துவிட்டது. அதனால்தான் இப்படி பேசுகிறார். முதல்வர் பதறப்படுவதை சட்டசபையில் நேருக்கு நேர் பார்த்தேன்." இவ்வாறு அவர் பேசினார்

# தமிழில் பெயர் பலகை வைக்கா விட்டால் அபராதம் அதிகரிப்பு: அமைச்சர் சாமிநாதன்

**சென்னை, ஏப். 22-**

தமிழில் பெயர்பலகை வைக்காத வணிக நிறுவனங்களுக்கு விதிக்கப்படும் அபராதம் 50 ரூபாயிலிருந்து 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருப்பதாக அமைச்சர் சாமிநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது பேசிய, திருச்சி கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், தமிழ்நாட்டில் வணிக நிறுவனங்கள் தமிழில் பெயரில் வைக்கும் நடைமுறையை முறையாக பின் பற்ற நடவடிக்கை எடுக்குமா என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்த அமைச்சர் மு.பெ.சாமிநாதன், வணிக நிறுவனங்கள் தமிழில் பெயர் பலகை அமைக்க தொழிலாளர் நலத் துறையிடம் பேசியிருப்பதாகவும், அது தொடர்பாக தொடர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தி வருவதாகவும் கூறினார். தமிழில் பெயர் பலகை வைக்காத வணிக நிறுனங்களுக்கு 500 ரூபாயிலிருந்து 2 ஆயிரம் ரூபாயாக அபராதம் உயர்த்தப்பட்டிருப்பதாகவும், விரைவில் அனைத்து வணிக நிறுவனங்களிலும் தமிழில் பெயர் பலகை வைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் சாமிநாதன் பதில் அளித்தார்.

# நாங்குநேரி மூலைக்கரைப்பட்டியில் பேருந்து நிலையம்: அமைச்சர் தகவல்

**சென்னை, ஏப். 22-**

நாங்குநேரி மூலைக்கரைப்பட்டியில் பஸ் நிலையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்' என அமைச்சர் கே.என்.நேரு கூறினார்.

தமிழக சட்டப்பேரவையில் கேள்வி நேரம் தற்போது நடைபெற்று வருகிறது. உறுப்பினர்களின் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதில் அளித்து வருகின்றனர். அதில், திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி தொகுதிக்கு உள்பட்ட மூலைக்கரைப்பட்டியில் இந்த ஆண்டு பஸ் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? என்று அந்த தொகுதி எம்.எல்.ஏ. ரூபி மனோகர் கேள்வி எழுப்பினார்.

அந்த கேள்விக்கு பதிலளித்து பேசிய நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே என் நேரு, நாங்குநேரி தொகுதியில் பஸ் நிலையம் அமைப்பதற்கு எந்த ஒரு தடையும் இல்லை. பஸ் போகும் பாதை சரியாக உள்ளதா? என்பது குறித்து ஆய்வு மேற்கொள்ள நெடுஞ்சாலை துறை அமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளோம். ஏற்கனவே பைபாஸ் சாலை போடப்பட்டு வரும் நிலையில் இந்த ஆண்டே மூலைக்கரைப்பட்டியில் பஸ் நிலையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்' என கூறினார்

### கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் நிகழ்வு:

# மதுரையில் மே 12-ம் தேதி உள்ளூர் விடுமுறை: கலெக்டர் அறிவிப்பு

**மதுரை, ஏப்.22-**

கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் மே 12-ந் தேதி மதுரை மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை விடப்படுவதாக மாவட்ட கலெக்டர் சங்கீதா அறிவித்துள்ளார்.

மதுரையில் பிரசித்தி பெற்ற சித்திரை திருவிழா ஏப்ரல் 29-ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. மே 8-ந்தேதி மீனாட்சி திருக்கல்யாணமும், திருவிழாவின் சிகர நிகழ்வான கள்ளழகர் வைகையாற்றில் இறங்கும் நிகழ்வு மே 12-ந் தேதி நடைபெறுகிறது.

இந்த நிலையில், கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் மே 12-ந்தேதி மதுரை மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை விடப்படுவதாக மாவட்ட கலெக்டர் சங்கீதா அறிவித்துள்ளார். அதனை ஈடுசெய்யும் வகையில் மற்றொரு நாள் வேலை நாளாக அறிவிக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

# சினிமா CINI செய்திகள்

## தக் லைஃப் இசை வெளியீடு



உலகநாயகன் கமல் ஹாசன் நடிப்பில் மணி ரத்னம் இயக்கத்தில் உருவாகியிருக்கும் 'தக் லைஃப்' திரைப்படத்தின் முதல் பாடல் சமீபத்தில் வெளியாகியுள்ளது. கல்யாணக் கொண்டாட்டம் என்னும் விறுவிறுப்பான பின்னணியில், கமல் ஹாசனும், சிம்பும் இணைந்து ஆடியிருக்கும் இந்தப் பாடல், ரஹ்மானுக்கே உரித்தான பாணியில் நாட்டுப்புறத் தாளத்தோடு, நவீன இசையும் இணைந்து அமைந்திருக்கிறது. கமல் ஹாசனின் வரிகளுடன், ஈர்க்கும் குறும்பும், துள்ளலுமான இந்தப் பாடல் சிறப்பாக அமைந்துள்ளது.

இப்படம் வரும் ஜூன் 5 அன்று உலக முழுவதும் வெளியாக உள்ளது. தக் லைஃப் திரைப்படத்தில், ரங்கராய சக்திவேல் நாயக்கர் என்ற கதாபாத்திரத்தில் கமல் ஹாசன் தோன்றுகிறார். சிலம்பரசன் டி.ஆர், த்ரிஷா கிருஷ்ணன்,

ஐஸ்வர்யா லட்சுமி, அஷோக் செல்வன், அபிராமி, ஜோஜு ஜார்ஜ், நாஸர், அலி ஃபஸல், சான்யா மல்ஹோத்ரா ஆகியோருடன் இந்திய அளவில் புகழ்பெற்ற மேலும் பல நட்சத்திரங்கள் இணைந்திருக்கிறார்கள.

ராஜ்கமல் ஃபிலிம்ஸ் இண்டர்நேஷனல், ஆர். மகேந்திரன், மெட்ராஸ் டாக்கீஸ், மற்றும் சிவா ஆனந்த் ஆகியோர் இணைந்து இந்த தக் லைஃப் திரைப்படத்தை தயாரித்துள்ளனர்.

## ஐந்து மொழிகளில் வெளியானது இசை ஆல்பம் மிஸ் மேல கிரஷ்



நியோ கேஸ்டில் கிரியேஷன்ஸ் சார்பில் டாக்டர் சத்யா கரிகாலன் தயாரிப்பில் அஸ்வமித்ரா இயக்கத்தில் உருவான இசை ஆல்பம் "மிஸ் மேல கிரஷ்". குழந்தை நட்சத்திரம் சித்தார்த் பன்னீர் இந்த ஆல்பத்தில் தமிழ், தெலுங்கு , மலையாளம் ,கன்னடம், இந்தி என 5 மொழிகளில் பாடல்களைப் பாடி, நடனமும் ஆடியிருக்கிறார். சமீபத்தில் நடைபெற்ற இந்த இசை ஆல்பத்தின் வெளியீட்டு நிகழ்வில் கவியரசு வைரமுத்து, இசையமைப்பாளர் தேவா, நடிகர்கள் செந்தில், தம்பி ராமையா, கருணாஸ், இளவரசு, இயக்குநர்கள் சற்குணம், இரா. சரவணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு இந்த இசை ஆல்பத்தை வெளியிட்டனர்.

ஆல்பத்தின் இயக்குநரும் இசையமைப்பாளருமான அஸ்வமித்ரா விழாவில் பேசுகையில், இந்த ஆல்பத்தை தொடர்ந்து மேலும் மூன்று பாடல்களை வெளியிட உள்ளோம். சிலம்ப வித்தையில் நேஷனல் சாம்பியனான மாஸ்டர் சித்தார்த், சிலம்பம் தொடர்பான பாடலையும் அதில் இடம் பெறச்செய்திருக்கிறோம் என்றார். இதற்கடையே, மாஸ்டர் சித்தார்த் சில படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார் எனபது குறிப்பிடத்தக்கது

## "45" திரைப்பட டீசர் வெளியீடு




சுமதி.உமா ரமேஷ் ரெட்டி மற்றும் எம் ரமேஷ் ரெட்டி தயாரிப்பில், சிவராஜ்குமார், உபேந்திரா, இராஜ் பி ஷெட்டி இணைந்து நடிக்க, அர்ஜுன் ஜான்யா இயக்கத்தில் உருவாகியுள்ள கன்னட திரைப்படம் 45. பெரும் பொருட்செலவில் பிரம்மாண்ட ஆக்சன் படமாக உருவாகியுள்ள இப்படம், தமிழ் தெலுங்கு மொழிகளில் வெளியாகிறது.

இப்படத்தின் தமிழ் பதிப்பின் டீசர் வெளியீட்டு விழா சென்னையில் சமீபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ல் நடிகர் சிவராஜ்குமார் பேசுகையில், நானும் சினிமாவுக்கு வந்தேன், நிறைய தோல்வி, நிறைய வெற்றி பார்த்துள்ளேன். எதையும் தலைக்குள் ஏற்றுக்கொள்ள மாட்டேன். வாழ்க்கையில் பல மரணங்கள், வீழ்ச்சிகள் தொடர்ந்து பார்த்துள்ளேன்.

எனக்கு தலையில் சர்ஜரி, கேன்சர் என அனைத்தையும் கடந்து வந்தேன், இந்தியா முழுக்க பல ரசிகர்கள் எனக்காக வேண்டினார்கள். இந்த இடத்தில் நான் இருப்பது மகிழ்ச்சி. எனக்கு கதை சொன்னபோதே பிடித்திருந்தது. மிக அருமையாக இப்படத்தை இயக்கியுள்ளார் அர்ஜுன்.

நாங்கள் மூன்று பேரும் மிக அருமையாக நடித்துள்ளோம். கண்டிப்பாக ரசிகர்களுக்கு இது புதுமையான அனுபவமாக இருக்கும் என்றார்.

## மீன்பிடி தடைக்காலம்: விசைப்படகு சீரமைப்பு பணிகளில் ராமேசுவரம் மீனவர்கள் தீவிரம்

**ராமேசுவரம், ஏப். 22-**

மீன்பிடி தடைகாலத்தைப் பயன்படுத்தி தமிழக கடலோரப் பகுதியில் விசைப் படகுகளை சீரமைக்கும் பணியில் மீனவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழகத்தின் கிழக்கு கடற்கரை பகுதிகளான வங்காள விரிகுடா, மன்னார் வளைகுடா மற்றும் பாக்ஜலசந்தி கடற்பகுதிகளில் ஏப்ரல், மே மற்றும் ஜுன் மாதங்களை மீன் உள்ளிட்ட கடல் வாழ் உயிரிகளின் இனப்பெருக்க காலமாக, மத்திய மீன் வளத்துறை அமைச்சகம் கண்டறிந்துள்ளது. மீன் வளத்தை பெருக்கும் நோக்கத்தில், இந்த கால கட்டத்தில் ஆண்டுதோறும் 61 நாட்கள் விசைப்படகுகள் மற்றும் இழுவைப்படகுகள் மூலம் மீன்பிடிக்க தடை விதிக்கப்படுகிறது. மீன்பிடி தடைகாலம் கடந்த ஏப்ரல் 14 அன்று இரவு தொடங்கியது. ராமநாதபுரம் மாவட்டத்தில் ராமேசுவரத்திலிருந்து எஸ். பி பட்டிணம் வரையிலும் பாக் ஜலசந்தி கடலிலும், தனுஷ்கோடியிலிருந்து கன்னிராஜபுரம் வரையிலும் மன்னார் வளைகுடா கடலிலும் ஐம்பதுக்கும் மேற்பட்ட மீனவ கிராமங்களில் விசைப் படகுகளில் மீன் பிடிக்க தடை செய்யப்பட்டு, படகுகள் கடற்கரை பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் ராமேசுவரம் கடலோரப் பகுதிகளில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ள விசைப் படகுகளில் இன்ஜின் பழுது நீக்குதல், தச்சுப் பணிகள், வர்ணம் பூசுதல் உள்ளிட்ட பல்வேறு சீரமைப்பு பணிகளை மீனவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். மீனவர்கள் தங்களின் விசைப்படகுகளை மராமத்து செய்ய மீனவர்கள் கரைக்கு ஏற்றுவது வழக்கம். இதற்கு மீனவர்கள் முன்பு கட்டைகளை பயன்படுத்தி வந்தனர். ராமேசுவரத்தில் விசைப்படகுகளை கரையில் ஏற்ற பலூன்களை பயன்படுத்தி படகை கரைக்கு கொண்டு வருகின்றனர். பலூன்கள் மூலம் மீன்பிடி விசைப் படகை கடலில் இருந்து கரையில் ஏற்ற கரைக்கு அருகே படகு கொண்டுவரப்பட்டு அதன் கீழ் பலூன்களை வைத்து காற்று நிரப்பி படகு கரையேற்றப்படுகிறது.

## 20 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் வெளியான சச்சின்



விஜய் நடித்த சச்சின் படம் வெளியாகி 20 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது ரீ ரிலிஸாகியுள்ளது. கடந்த 2024-ல், விஜய்யின் 'கில்லி' படம் மீண்டும் வெளியிடப்பட்டு, அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியால் உற்சாகமடைந்த 'சச்சின்' படத்தின் தயாரிப்பாளர் இம்மாதம் 18 ந்தேதி இந்த படத்தை மீண்டும் வெளியிட்டு உள்ளார்.

இந்த மறு வெளியீட்டின் மூலம், விஜய் மற்றும் ஜெனிலியாவின் திரை பிரவேசம், வடிவேலுவின் நகைச்சுவை மற்றும் தேவி ஸ்ரீ பிரசாத்தின் இசை ஆகியவற்றை மீண்டும் அனுபவிக்க ரசிகர்களுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது ஜான் மகேந்திரன் இயக்கியுள்ள 'இந்த சச்சின்' படத்தில் ரகுவரன் , பிபாஷா பாசு, சந்தானம் , மயில்சாமி, தாடி பாலாஜி ,மற்றும் சாம்ஸ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்த படமும் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.


## சுந்தர் சி, வடிவேலு கூட்டணியில் உருவாகும் கேங்கர்ஸ் திரைப்படம்



குஷ்பு சுந்தர் மற்றும் *Benz Media* சார்பில் *A.C.S* அருண்குமார் தயாரிப்பில், சுந்தர் சி மற்றும் வடிவேலு கூட்டணியில், காமெடி சரவெடியாக உருவாகியுள்ள திரைப்படம் "கேங்கர்ஸ்". வரும் வெள்ளியன்று வெளியாகவுள்ள நிலையில் இப்படத்தின் முன் வெளியீட்டு நிகழ்ச்சி, *A.C.S* மருத்துவக் கல்லூரி அரங்கில் சமீபத்தில் நடைபெற்றது.

விழாவில் இயக்குநர் சுந்தர் சி பேசுகையில், ஒரு சின்ன ஊரில், ஆட்டோ ஓட்டுநர், டீச்சர் எல்லாரையும் வைத்து ஒரு படம் பண்ணினால் எப்படி இருக்கும் என்பது தான் கதை. இந்தப்படத்திற்கான தலைப்பு பற்றி விவாதித்த போது வடிவேல் சொன்ன தலைப்புதான் கேங்கர்ஸ் என்றார். அதையே தலைப்பாக வைத்து விட்டோம். கண்டிப்பாக இப்படம் உங்கள் எல்லோரையும் சந்தோசப்படுத்தும் என்றார். பின்னர் வடிவேலு பேசியதாவது... இயக்குனர் சுந்தர் சி ஒவ்வொரு காட்சியையும் ரசித்து ரசித்து உருவாக்கியிருக்கிறார். 35 நாளில் இப்படத்தை முடித்து விட்டோம். உங்களுக்குத் தேவையான அத்தனை தீனியும் படத்தில் இருக்கிறது என்றார். "சிங்காரம்" எனும் கதாப்பாத்திரத்தில் வடிவேலு நடித்துள்ளார். மேலும்,

இப்படத்தில் கேத்தரின் தெரேசா, வாணி போஜன், முனீஷ்காந்த், பக்ஸ், மைம் கோபி, ஹரீஷ் பேரடி, அருள் தாஸ், கருப்புசாமி, சந்தான பாரதி, *S* மதுசூதன ராவ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.



**அருப்புக்கோட்டை அமுதலிங்கேஸ்வரர் கோவிலில் தேய்பிறை அஷ்டமியை முன்னிட்டு காலபைரவர் சிறப்பு அலங்காரத்தில் பொதுமக்களுக்கு அருள்பாலித்த காட்சி.**

## நத்தம், செந்துறை பகுதிகளில் புகையிலை பாக்கெட்டுகள் பறிமுதல்

**நத்தம், ஏப். 22-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட செந்துறை மற்றும் சுற்று வட்டார கிராம பகுதிகளில் போலீஸ் சப்- இன்ஸ்பெக்டர் தர்மர் தலைமையிலான போலீசார் சோதனையில் ஈடுபட்டனர். அப்போது பிள்ளையார்நத்தம் பகுதியில் உள்ள ஒரு பெட்டி கடையில் சோதனை செய்தபோது விற்பனை செய்வதற்காக புகையிலைப் பொருட்கள் இருந்தது தெரியவந்தது.

இதையடுத்து புகையிலை பொருட்கள் வைத்திருந்த அதே பகுதியை சேர்ந்த ரமேஷ்(52)) என்பவரை கைது செய்த நத்தம் போலீசார் அவரிடமிருந்து 10 புகையிலை பாக்கெட்டுகளை பறிமுதல் செய்தனர். இதைப்போலவே நத்தம் பஸ் நிலையத்தில் பெட்டிக்கடையில் புகையிலை பொருட்கள் விற்பனை செய்த ராக்காச்சிபுரத்தை சேர்ந்த வெங்கடேஷ் (23) என்பவரை கைது செய்த போலீசார் அவரிடமிருந்து 8 புகையிலை பாக்கெட்டுகளை பறிமுதல் செய்தனர்

### ராமநாதபுரத்தில் மின்னணு வாக்குப்பதிவு

## எந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள கிடங்கை நேரில் ஆய்வு செய்த மாவட்ட கலெக்டர்



**ராமநாதபுரம், ஏப். 22-**

ராமநாதபுரத்தில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள கிடங்கினை கலெக்டர் சிம்ரன்ஜீத்சிங் காலோன் அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் ஆய்வு செய்தார்.

ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள கிடங்கை மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட கலெக்டர் இந்திய தேர்தல் ஆணையத்தின் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரக்கிடங்கு வளாகத்தில் உள்ள ராமநாதபுரம், முதுகுளத்தூர், திருவாடனை, பரமக்குடி (தனி) ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளுக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள அறையினை அங்கீகரிக்கப்பட்ட அ னைத்து அரசியல் கட்சி பிரமுகர்களுடன் பாதுகாப்பு தன்மை குறித்து பார்வையிட்டனர்.

தொடர்ந்து மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் வேளாண்மை வணிக ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அலுவலக வளாகத்தில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறையினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்ச்சியில்,

ராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர்இராஜமனோகரன், வட்டாட்சியர்கள் (தேர்தல்) காளீஸ்வரன், ரவி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்கள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் தலைமையில் நடந்தது



**விருதுநகர், ஏப். 22-**

விருதுநகர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், இலவச வீட்டு மனைப்பட்டா மற்றும் பட்டா மாறுதல், குடும்ப அட்டை, வேலை வாய்ப்பு, விபத்து நிவாரணம், மாற்றுத்திறனாளிகள்,

நலிந்தோர் நலத்திட்டம் மற்றும் விதவை உதவித்தொகை, திருமண உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக மனுக்கள் பெறப்பட்டது.

மேலும், இம்மனுக்களை மாவட்ட கலெக்டர் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் ஒப்படைத்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டார்கள். மேலும் முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள் மீது தனிக்கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட கலெக்டர் தொடர்புடைய அலுவலர்களை அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில், வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், வி.துரைச்சாமிபுரம், ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் சத்துணவு அமைப்பாளர்ஈஸ்வரி என்பவர் பணிக்காலத்தில் மரணமடைந்ததை தொடர்ந்து, அவரின் வாரிசுதாரரான மகள் ப.முத்துமாரி என்பவருக்கு வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், வி.துரைச்சாமிப்புரம் ஊராட்சி தொடக்கப் பள்ளி சத்துணவு அமைப்பாளர் பணியிடத்திற்கு கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணையினை கலெக்டர் ஜெயசீலன் வழங்கினார். இக்கூட்டத்தில்,மாவட்ட வருவாய் அலுவலர் ராஜேந்திரன், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### மதுரை சித்திரை திருவிழா முன்னேற்பாடுகள்:

## குடிநீர் மாதிரிகள் நெல்லைக்கு அனுப்பிவைப்பு

**மதுரை, ஏப். 22-**

சித்திரைத் திருவிழாவை முன்னிட்டு பக்ததர்கள் நலனை கருத்தில் கொண்டு, மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் விநியோகிக்கப்படும் குடிநீர் தரமானதா? என்பதை ஆய்வு செய்ய குடிநீர் மாதிரிகளை திருநெல்வேலி மண்டல ஆய்வகத்துக்கு, பொது சுகாதார துறை அனுப்பியுள்ளது.

மதுரை சித்திரைத் திருவிழா வரும் 29-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. திருவிழாவை முன்னிட்டு திரளும் பக்தர்களுக்கு தேவையான குடிநீர், கழிவறை மற்றும் சுகாதார வசதிகள், கள்ளழகர் வந்து செல்லும் சாலைகள் சீரமைப்பு பணிகளை மாநகராட்சி மேற்கொண்டு வருகிறது. திருவிழாவுக்கு லட்சக்கணக்கில் பொதுமக்கள் வந்தால் அவர்கள் குடிக்கும் குடிநீர் சுகாதாரமாக இருக்க வேண்டும் என்பதற்காக, அந்த திருவிழாவுக்கு முன்பாக அதன் மாதிரிகளை எடுத்து பரிசோதனைக்கு அனுப்புவது பொது சுகாதாரத் துறையின் முக்கியமான அடிப்படைப் பணி. இந்த திருவிழா மாநகராட்சிப் பகுதியில் நடப்பதால் மாநகர நகர் நல அலுவலகம் சார்பில் சித்திரைத் திருவிழா நடக்கும் 40-க்கும் மேற்பட்ட இடங்களில் உள்ள பொதுமக்கள், பக்தர்கள் குடிப்பதற்காக மாநகராட்சி விநியோகம் செய்யும் குடிநீர் பரிசோதனை செய்யப்பட உள்ளது. அதற்காக மாநகர நகர் நல அதிகாரிகள், திருவிழா நடக்கும் பகுதிகளில் தற்போது மாநகராட்சி விநியோகிக்கும் குடிநீரின் தரத்தையும், அந்த தண்ணீர் பொதுமக்கள் குடிக்க உகந்ததா? என்பதை ஆய்வு செய்தற்காகவும் அதன் மாதிரிகளை சேகரித்து வருகிறார்கள்.

சேகரிக்கப்பட்ட மாதிரிகளை, திருநெல்வேலியில் உள்ள மண்டல பொது சுகாதார ஆய்வகத்துக்கு அனுப்பி வருகிறார்கள். இந்த குடிநீர் குடிக்க உகந்த சுகாதாரமான குடிநீராக இருக்கும்பட்சத்தில் மாநகராட்சி தற்போது விநியோகிக்கும் குடிநீரே, சித்திரைத் திருவிழா நடக்கும் பகுதிகளில் வழக்கம் போல் விநியோகம் செய்யப்படும். அதில், ஏதாவது குறைபாடுகள் தெரிய வந்தால் அதை போக்குவதற்கு திருவிழா தொடங்குவதற்குள் மாதிரி எடுத்தப் பகுதிகளில் பாதுகாப்பான குடிநீரை வழங்க மாநகராட்சி நடவடிக்கை எடுக்கும். இதுகுறித்து மாநகராட்சி நகர் நல அதிகாரிகள் கூறுகையில், தமிழகத்தில் சென்னை, திருநெல்வேலி, கோவை உள்பட 4 இடங்களில் மண்டல பொது சுகாதார ஆய்வகங்கள் உள்ளன. மாநிலம் முழுவதும் முக்கிய திருவிழா நடக்கும் இடங்களில் அந்த திருவிழாவுக்கு முன்பு இது போல் குடிநீர் மாதிரியை எடுத்து அனுப்பி பரிசோதனை செய்வது வழக்கமான நடைமுறைதான். அவ்வாறு செய்ய தவறும்பட்சத்தில் குடிநீரில் கழிவுநீர் கலந்து அதனை பருகுவோர் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. அதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகத்தான், சித்திரைத் திருவிழா நடக்கும் பகுதிகளில் குடிநீர் மாதிரி எடுத்து பரிசோதனைக்கு அனுப்பப்படுகிறது. என்றார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்



முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று முன்னாள் அமைச்சர் ஆற்காடு வீராசாமியின் பிறந்த நாளையொட்டி அவரது இல்லத்திற்கு நேரில் சென்று பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்தார். உடன் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, எம்.கே.மோகன் எம்.எல்.ஏ. மற்றும் குடும்பத்தினர் உள்ளனர்.

# மாநில சுயாட்சிக்கான போராட்டம் அனைத்து மாநிலங்களுக்குமானது

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு

சென்னை, ஏப். 22-

கூட்டாட்சியியலின் சமநிலையை உறுதிசெய்வது ஒரு கோரிக்கை மட்டுமல்ல, அது அரசியலமைப்புச் சட்டம் விதிக்கும் கடமை. தமிழ்நாட்டின் போராட்டம் தனக்கானது மட்டுமல்ல, அனைத்து மாநிலங்களுக்கும் உரிய அதிகாரங்களுக்கானது என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக முதல்வர் ஸ்டாலின் தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், கூட்டாட்சியியலின் சமநிலையை உறுதிசெய்வது ஒரு கோரிக்கை மட்டுமல்ல, அது அரசியலமைப்புச் சட்டம் விதிக்கும் கடமை. தமிழ்நாட்டின் போராட்டம் தனக்கானது மட்டுமல்ல, அனைத்து மாநிலங்களுக்கும் உரிய அதிகாரங்களுக்கானது. மாநில சுயாட்சியை மீட்டெடுப்பது ஏன் இப்போதைய முக்கியத் தேவையாக உள்ளது என்பதை விளக்கி நான் எழுதியுள்ள கட்டுரை ஆங்கில நாளேட்டில் வெளியாகியிருக்கிறது. வாசிக்க... என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.



சென்னை, அரும்பாக்கம் பகுதியில் தேங்கிய மழை நீரில் நடந்து சென்றபோது மின்சாரம் தாக்கி உயிருக்கு போராடிய சிறுவனை துணிச்சலாக சென்று காப்பாற்றிய கண்ணனை பாராட்டி அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி கே.பழனிசாமி, அவருக்கு தங்க மோதிரத்தை பரிசளித்து வாழ்த்தினார்.

# மின்சாரம் தாக்கிய சிறுவனை காப்பாற்றிய வாலிபரை நேரில் அழைத்து இ.பி.எஸ். வாழ்த்து

சென்னை, ஏப். 22-

மின்சாரம் தாக்கிய சிறுவனை காப்பாற்றிய வாலிபரை நேரில் அழைத்து இ.பி.எஸ். வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சென்னை, அரும்பாக்கம் பகுதியில் தேங்கி நின்ற மழை நீரில் மின்சாரம் பாய்ந்து கொண்டிருந்த போது, அவ்வழியாக வந்த ரேகன் (வயது 8) என்ற 3-ம் வகுப்பு மாணவன், தண்ணீரில் காலை வைத்தவுடன் மின்சாரம் தாக்கி, உயிருக்கு ஆபத்தான நிலையில் துடித்துக்கொண்டிருந்தார்.

அப்போது அவ்வழியே வந்த, தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் தஞ்சாவூர் ஒரத்தநாட்டைச் சேர்ந்த கண்ணன் என்ற இளைஞர் உடனடியாக அச்சிறுவனை காப்பாற்றினார்.

தன் உயிரைத் துச்சமென மதித்து அச்சிறுவனை காப்பாற்றிய இளைஞரின் துணிவை பாராட்டி, அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, இளைஞர் கண்ணனை, தனது இல்லத்திற்கு நேரில் வரவழைத்து அவரது துணிவைப் பாராட்டி, அவருக்கு தங்க மோதிரம் பரிசளித்து வாழ்த்தினார்.

# காங்கிரஸ் எம்.எல்.ஏ.வுக்கு 3 மாதம் சிறை தண்டனை

நாகர்கோவில், ஏப். 22-

காங்கிரஸ் எம்.எல்.ஏ. ராஜேஷ் குமாருக்கு 3 மாதம் சிறை தண்டனை அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு காங்கிரஸ் சட்டமன்ற குழு உறுப்பினரும் கிள்ளியூர் எம்.எல்.ஏ. ராஜேஷ் குமாருக்கு 3 மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. 2014-ல் அரசு புறம்போக்கு நிலத்தை மீட்க சென்ற அதிகாரிகளை தடுத்து நிறுத்தி தாக்கியதாக புகார் எழுந்தது.

தாக்குதல் நடத்தியதாக தொடரப்பட்ட வழக்கில் எம்.எல்.ஏ. ராஜேஷ் குமாருக்கு 3 மாத சிறை தண்டனை, 100 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. நாகர்கோவில் முதன்மை உதவி அமர்வு நீதிமன்ற நீதிபதி ஹசன் முகமது தீர்ப்பு அளித்துள்ளார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவையில் உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளை நியமன முறையில் தேர்வு செய்வதற்கான சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ததையொட்டி, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினை மாற்றுத்திறனாளிகள் அவரது முகாம் அலுவலகத்தில் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

# தலைக்கவசம் அணியாத காவலர்கள் இடைநீக்கம்: டி.ஜி.பி. உத்தரவு

சென்னை, ஏப். 22-

தலைக்கவசம் அணியாமல் வாகனம் ஓட்டும் காவலர்களை உடனடியாக இடைநீக்கம் செய்ய தமிழக காவல்துறை இயக்குநர் சங்கர் ஜிவால் உத்தரவிட்டுள்ளார்.

தமிழகத்தில் இரு சக்கர வாகனத்தை ஓட்டுபவர்கள் மற்றும் பின்னால் அமர்ந்து செல்பவர்கள் கட்டாயம் தலைக்கவசம் அணிய வேண்டும் என்ற விதிமுறை அமலில் உள்ளது.

தலைக்கவசம் அணியாதவர்களுக்கு போக்குவரத்து காவலர்கள் ரூ. 1,000 அபராதம் விதிக்கின்றனர். தொடர்ந்து தலைக்கவசம் அணியாமல் காவலர்களிடம் பிடிபடுபவரின் வாகன ஓட்டுநர் உரிமத்தை தற்காலிகமாக ரத்து செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அபராதம் விதிக்கும் காவலர்களே தலைக்கவசம் அணியாமல் செல்வதாக புகார் எழுந்துள்ளது.

இந்த நிலையில், தலைக்கவசம் அணியாமல் செல்லும் காவலர்களை உடனடியாக பணியிடை நீக்கம் செய்ய அனைத்து மாநகர ஆணையர்கள் மற்றும் காவல் கண்காணிப்பாளர்களுக்கு டி.ஜி.பி. சங்கர் ஜிவால் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், காவல் நிலையங்களில் நாள்தோறும் காலை நடைபெறும் வருகை பதிவு கூட்டத்தில், இருசக்கர வாகனத்தில் வரும் காவலர்கள், மேல் அதிகாரியிடம் தலைக்கவசத்தை காண்பிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உயர்தர போலி ரூ.500 நோட்டுகள் புழக்கம்: மத்திய அரசு எச்சரிக்கை

புதுடில்லி, ஏப். 22-

மிக நவீனமான உயர்தர போலி ரூ.500 நோட்டுகள் புழக்கத்தில் விடப்பட்டிருப்பதாகவும், மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு மத்திய அரசு எச்சரித்துள்ளது.

இது குறித்து மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், அச்சடிக்கப்பட்டிருக்கும் விதம், போலி ரூபாய் நோட்டின் தரம் என அனைத்தும், அசல் ரூபாய் நோட்டுடன் மிக அதிக விகிதத்தில் ஒத்துப்போவதாகவும், போலி ரூபாய் நோட்டு எது என வித்தியாசம் கண்டுபிடிப்பது சவாலாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரூ.500 அசல் நோட்டுகளைப் போன்றே, போலி நோட்டுகளைக் கண்டறிவதற்கான அனைத்து நுட்பங்களையும், போலி ரூ.500 நோட்டுகள் கொண்டிருப்பதாகவும், ஆனால், ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா என்ற ஆங்கில வார்த்தையில் மட்டும் ரிசர்வ் என்ற வார்த்தையில் இ என்ற ஸ்பெல்லிங் பதிலாக ஏ என்ற வார்த்தை அச்சிடப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்த எழுத்துப் பிழைத் தவிர வேறு எந்த வகையிலும் போலி நோட்டுகளைக் கண்டுபிடிக்க முடியாத வகையில், புதிய நோட்டுகள் அச்சிடப்பட்டிருப்பதாக மூத்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# ஜார்க்கண்ட்: 8 நக்சலைட்டுகள் என்கவுண்டரில் சுட்டுக்கொலை

ஜார்க்கண்ட், ஏப். 22-

ஜார்க்கண்டில் 8 நக்சலைட்டுகள் என்கவுண்டரில் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர்.

ஜார்க்கண்ட் மாநிலம் பொகாரோ மாவட்டத்தின் லால்பானியாவில் உள்ள லுகு மலைப் பகுதிகளில் மத்திய ரிசர்வ் பாதுகாப்பு படையினர் மற்றும் போலீசார் இணைந்து நேற்று அதிகாலை 5.30 மணியளவில் நக்சலைட்டுகளை தேடும் பணியில் ஈடுபட்டனர். அப்போது பதுங்கி இருந்த நக்சலைட்டுகள் துப்பாக்கியால் சுட்டனர் இதனால் பாதுகாப்புப் படையினர் பதில் தாக்குதல் நடத்தினர்.

இரு தரப்புக்கும் இடையே பயங்கர துப்பாக்கிச் சண்டை நடந்தது. இதில் 8 நக்சலைட்டுகளை மத்திய பாதுகாப்பு படையினர் சுட்டு கொன்றனர், பாதுகாப்புப் படையினருக்கு எந்த காயமும் ஏற்பட வில்லை.

சுட்டுக் கொல்லப்பட்டவர்களில் நக்சலைட்டுகளின் தலைவன் ஒருவனும் அடங்கும். அவனது தலைக்கு அரசு ரூ.1 கோடி அறிவித்து இருந்தது. என்கவுண்டர் நடந்த இடத்தில் இருந்து துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. தொடர்ந்து நக்சலைட்டுகளை தேடும் பணி நடைபெற்று வருகின்றன.

சமீபகாலமாக, சத்தீஸ்கர், ஜார்கண்ட் உள்ளிட்ட மாநிலங்களில் நக்சல்களுக்கு எதிரான நடவடிக்கைகளை பாதுகாப்புப் படையினர் தீவிரப்படுத்தி உள்ளது. அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்குள் நக்சலைட்டுகளை முற்றிலும் ஒழித்து விடுவோம் என்று மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா சமீபத்தில் தெரிவித்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




சென்னை தலைமைச்செயலகத்தில் போக்குவரத்துத்துறை அமைச்சர் சிவசங்கர் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 25 உதவி மேலாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வின்போது அரசுத்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் க.பணீந்திரரெட்டி, மேலாண் இயக்குநர் த.பிரபுசங்கர், இணை மேலாண் இயக்குநர், அரசு விரைவு போக்குவரத்துக்கழக மேலாண் இயக்குநர் ஆகியோர் உடனிருந்தனர்.

# உயிரிழந்த பணியாளர்களின் வாரிசுகள் 27 பேருக்கு பணி நியமன ஆணைகள்

## அமைச்சர் சிவசங்கர் வழங்கினார்

சென்னை, ஏப். 22-

தமிழ்நாடு அரசு பணியாளர்தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 25 உதவி மேலாளர்களுக்கும்,பணியின் போது உயிரிழந்த பணியாளர்களின் 27 வாரிசுதாரர்களுக்கும் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம்தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 25 உதவிமேலாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் வழங்கினார்.

இதன்படி, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு ஒரு உதவி மேலாளர் (சட்டம்) மற்றும் ஒரு உதவி மேலாளர் (கணக்கு) பணிக்கும், தமிழ்நாடு அரசுபோக்குவரத்துக் கழகங்கள் முறையே விழுப்புரத்திற்கு 2 உதவி மேலாளர் (சட்டம்) மற்றும்3 உதவி மேலாளர் (கணக்கு) பணிக்கும், சேலத்திற்கு 2 உதவி மேலாளர் (சட்டம்) மற்றும்ஒரு உதவி மேலாளர் (கணக்கு) பணிக்கும், கோயம்புத்துருக்கு 2 உதவி மேலாளர் (சட்டம்) மற்றும் ஒரு உதவி மேலாளர் (கணக்கு) பணிக்கும், கும்பகோணத்திற்கு 3 உதவி மேலாளர்(சட்டம்) மற்றும்2 உதவி மேலாளர் (கணக்கு) பணிக்கும், மதுரைக்கு 2 உதவி மேலாளர் (சட்டம்) மற்றும்2 உதவி மேலாளர் (கணக்கு) பணிக்கும், மற்றும் திருநெல்வேலிக்கு 2 உதவி மேலாளர்(சட்டம்) மற்றும் ஒரு உதவி மேலாளர் (கணக்கு) பணிக்கும் என 25 உதவி மேலாளர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து போக்குவரத்துத் துறை அமைச்சர்.சிவசங்கர் மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரிந்து, பணியின்போது இறந்த பணியாளர்களின் 27 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையிலான நடத்துநர் (18 பெண் நடத்துநர்கள் உட்பட) பணி நியமன ஆணையினை வழங்கினார்.



வனத்துறை அமைச்சர் பொன்முடி சர்ச்சை பேச்சை கண்டிக்கும் விதமாக மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. மகளிரணி சார்பில் மகளிரணி செயலாளர் சுகந்தி அசோக் ஏற்பாட்டில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. தலைமையில் செல்லூர் 60 அடி ரோட்டில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சர் பா.வளர்மதி மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட, சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.